
www.padippakam.com



# கஸ்தூரியின் ஆக்கங்கள்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கஸ்தூரியின் ஆக்கங்கள்



வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

படிப்பகம்

www.padippakam.com

* கஸ்தூரியின் ஆக்கங்கள் - கப்டன் கஸ்தூரி

* அட்டைப்பட ஓவியம் - இளந்திரையன்


* முதற்பதிப்பு - மே 1992

* வெளியீடு - வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

* மறுபதிப்பு - தமிழீழ விடுதலைப் புலிகள்
ஜேர்மன் கிளை.
நவம்பர் 1994.

படிப்பகம்

www.padippakam.com



**வசந்தி கணேசன், ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.**
**பிறப்பு: 31-07-1968 வீரச்சாவு: 11-07-1991**

*இவர் ஆனையிறவு படைத்தளத்தின் மீதான முற்றுகைச் சண்டையில் **11-07-1991** அன்று, படைத்தளத்தின் ஒரு பகுதியான தடைமுகாம் மீதான தாக்குதலின்போது வீரமரணமடைந்தார்.*

படிப்பகம்

www.padippakam.com

# 4

காலநகர்வில் பல கவிஞர்கள் வருவார்கள்; பல கவிதைகள் பிறப்பெடுக்கும். ஆனால் சில கவிதைகளும் சில கவிஞர்களும் மட்டுமே பல யுகங்களிற்கு வாழ்வதுண்டு.

கவிதைகளைத் தவிர சிறுகதைகள், நாடகங்கள் போன்ற படைப்பாக்கங்களும் இவ்வாறுதான்.

இது அவர்களின் எழுத்துக்கள் பிரதிபலித்த காலத்தையும் கருத்தையும் பொறுத்தது.

இந்த வகையில் கஸ்தூரியின் எழுத்துக்கள் யுகம்யுகமாக வாழப்போகின்றன.

தனது எழுத்துக்களில் தனிமனித உணர்வுகளை மட்டும் மையாக ஊற்றாது முழு உலகிற்குமான மானுட வாழ்வின் அவலங்களை, தேவைகளை, மறுக்கப்பட்ட உரிமைகளை, அநீதிகளை, ஆவேசமாக எதிர்க்கும் தன்மைகளை இவள் மையாக ஊற்றி இருக்கின்றாள்.

இவளோடு பழகிக்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உண்மையும் சத்தியமும் இவளுக்குள் துடித்துக்கொண்டிருப்பதை எல்லோராலும் காணமுடியும்.



படிப்பகம்

அந்த சத்திய உணர்வினைத்தான் இவளது எழுத்துக்கள் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு சிறுஉயிரின் சாவினைக் கண்டும் சகித்துக்கொள்ளக் கஷ்டப்படும் கஸ்தூரி, விடுதலைக்காக விலைமதிக்க முடியாத மனிதஉயிர்கள் சாவினைச் சந்திப்பதனையும் அதில் தானும் ஒருத்தியாக இருப்பதனையும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு வாழ்ந்தவள். உயிரைவிட அவளுக்கு உரிமை முக்கியமாக இருந்தது. இதனால்தான்

*"சுதந்திரமே....!*
*உன்னோடு*
*சொந்தம் கொண்டாடப்*
*புறப்பட்டதால்*
*சாவு இங்கே*
*சாதாரண விலைக்கு*
*வந்துவிட்டது"*

என்று எழுதுவதன் மூலம் தன்னை அறிமுகப்படுத்துகிறாள். எமது போராட்ட வாழ்வில் எம்மைவிட்டுப் போன மாவீரர்கள் மறைந்து போகக்கூடியவர்களல்லர்; அவர்கள் மறுபடி மறுபடி உருவாக்கப்படுவார்கள் என்பதனால்,

*"மறைந்தவர்களே நீங்கள்*
*மலடர்களல்ல.*
*உங்கள்*
*கல்லறைகளும் கருத்தரிக்கும்"*

என்று வெளிப்படுத்துகின்றாள்.

எங்கள் போராட்டத்தில் தியாகத்தின் தலைமையாய் அமைந்தவைதான் உண்ணாவிரதப் போராட்டங்கள். எங்கள் விடுதலை நெருப்பு எங்கும் பரந்து பிடிக்க தங்களைத் துளிதுளியாய் உருக்கியவர்கள் **திலீபன்** அண்ணாவும், **அன்னை பூபதியும்.**

அதிலும் அன்னை பூபதியோ குடும்பம் என்ற சிறுவட்டத் திற்குள் தன்னைச் சிறைப்படுத்தாது தேசம், மக்கள், விடுதலை என்ற அகன்ற பரப்பில் நின்று உரிமைக் குரல் எழுப்பியமையை

# 6

*"தாயே....!*
*பிரபஞ்ச வரலாற்றின்*
*பிரமாண்டமான உச்சியில்*
*உன்னை நீ*
*செத்துச் செத்துச்*
*செதுக்கிக் கொண்டாய்"*

என்றதற்குள் எடுத்துக்காட்டுகின்றாள்.

ஒரு போராளி தான் சார்ந்த இனத்தின் விடுதலையோடு திருப்தி அடையக் கூடியவள் அல்ல. ஒடுக்கப்படுகின்ற மக்களுக்காக அவள் தனது குரலை எங்கிருந்தாலும் உயர்த்திக் கொள்வாள். எங்கெங்கு மானுடர் துன்பப்பட்டாலும் அங்கெல்லாம் அவளது குரல்கேட்கும்.

இப்படித்தான் இந்தப் போராளிக் கவிஞையும். உலகில் எங்காவது நடைபெறும் ஒவ்வொரு நிகழ்விற்கும் அவள் கவலைப்படுவதுண்டு.

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ந்துள்ள இன்றைய நிலையில் அவை மனித குல மேம்பாட்டிற்காகப் பயன்படவேண்டும் என விரும்பும் இவள், அவை வளர்ச்சி குன்றிய நாடுகளின் அப்பாவி மனிதர்களை வேதனைப் படுத்துவதைக் கண்டு அடிக்கடி குமுறுகின்ற ஒரு பொழுதில்தான்,

*"உங்கள் வல்லமைகள்*
*ஆய்வு செய்யப்படுகையில்*
*வளர்முக நாடுகளே*
*வாழாவெட்டியாகின்றன.*
*உங்கள்*
*விமான நிலையங்கள்*
*விஸ்தரிக்கப்படுகையில்*
*எங்கள்*
*குடிசைகளல்லவா*
*கொளுத்தப்படுகின்றன"*

என்று எழுதினாள். இந்த வேதனைக்குரல் எங்கள் எல்லோரையும் ஒருகணம் உலுப்பி விடுகிறது.

கஸ்தூரி கவிதைகளோடு மட்டும் தன்னை மட்டுப்படுத்த வில்லை. சிறந்த கலைஞை. இவளது உணர்வலைகள் பல சிறுகதைகள் என்ற வடிவத்தைப் பெற்றுள்ளன. நாடகம் எழுதி நெறிப்படுத்தும் ஆற்றல் இவளுக்கு நிறைய உண்டு.

இந்திய இராணுவம் இந்த மண்ணின் குரலை நசிக்க முற்பட்ட போது சிறைபிடிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான விடுதலை விரும்பிகளுள் கஸ்தூரியும் ஒருத்தி. சிறைச்சுவர்களுக்குள்ளே அச்சத்தை மட்டுமே தருகின்ற அந்நியக் குரல்களுக்குள்ளே அவள் இருந்தபோது அருகில் அமைந்த சித்திரவதைக்கூடங்களுக்குள்ளே இருந்து எழும்பும் மரண ஓலம், அவளை அதிகமாக வருத்தி இருக்கிறது. மரணிக்கின்றவரைக்கும் இந்த நிகழ்வுகளை அவளால் மறந்துவிடமுடியவில்லை. இந்திய இராணுவம் இந்த மண்ணில் கால்வைத்தபோதே அதனை எதிர்த்தவள். இங்கிருந்து அவர்கள் வெளியேறும் வரைக்கும் அவளைச் சுற்றி நடந்த நிகழ்வுகளில் ஒருசில இந்தச் சிறுகதைகளில் வெளிவந்துள்ளன.

"மக்களைப் பிரிந்த துப்பாக்கிகள்," "சின்னப்பூக்களுடன் சிலபொழுது", "களத்தில் இருந்து ஒரு கடிதம்", "இடம் மாறியுள்ள துப்பாக்கிகளால்", "அவர்களுக்குத்தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே..." என்ற ஐந்தும் இந்திய இராணுவத்தினதும் தேசத்துரோகிகளினதும் கோரமான பதிவுகளை அப்படியே சொல்லுகின்றன. மன்னிக்க முடியாத துரோகத்தனங்களை, அழிக்கப்படமுடியாத வடுக்களை கஸ்தூரியின் பேனா கிழித்துப் போட்டிருக்கிறது.

இன்னும் இந்த சமூகத்தில் ஒரு பெண்ணின் அவலம் நிறைந்த வாழ்க்கையை, பெண்ணும் ஒரு மனிதப்பிறவி என்பதை மறுக்கின்ற இந்த சமூகக் கொடுமையை "நிர்ப்பந்தங்கள்" மூலம் நிறுத்திக் காட்டுகிறாள்.

மொத்தத்தில், இந்த மண்ணின் விடுதலைக்குத் துப்பாக்கி ஏந்தவேண்டிய தேவை கஸ்தூரிக்கும் இருந்தது. இந்தத்

www.padippakam.com



தேவைக்கூடாக அவள் கற்றுக் கொண்ட பாடங்கள் பலவற்றை அவள் பதிவாக்கிச் சென்றுள்ளாள். போராட்டத்தின் கஷ்டங்களை, துயரங்களை, இழப்புக்களின் வேதனைகளைச் சொல்வதோடு மட்டுமில்லாது அவற்றிற்கூடாக வரும் இலட்சியப் பற்றினை, அதிகரிக்கும் விடுதலை வேட்கையை, மன உறுதியை தன் சந்ததிக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறாள்.

இந்தச் சந்ததியில் ஒரு சத்திய உணர்வினைத் தட்டி எழுப்பி விடுதலைப்பாதையில் அதனை நடக்க வைக்கும் சக்தி, இந்த ஆக்கங்களிற்கும் அதிகமாக உண்டு என நம்புகிறேன்.

அவளது பேனாவுக்கு இந்தச் சக்தி இருந்ததென்றால் அதற்குக் காரணம், இந்த மண்ணின் உயிர்வாழ்விற்காக எல்லைகளில் அவளது துப்பாக்கியும் சத்தமிட்டிருக்கிறது.

இருபது வருடப் போராட்ட வரலாற்றில் முழு உலகையும் எம்மை நோக்கிப் பார்க்கவைத்து ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய ஆனையிறவு முகாம் தாக்குதலில், இவளது துப்பாக்கி இறுதியாகச் சத்தமிட்டது. எமது முகாமில் இருந்து புறப்படுகின்ற போது அவளுக்கிருந்த ஒரே ஆசை தனது கையால் ஆயுதங்களைக் கைப்பற்றவேண்டும் என்பதுதான். தாக்குதலின்போது விநியோகக் குழு ஒன்றிற்குத் தலைமைதாங்கிச் சென்றாள்.

அந்த உப்புக்காட்டில் உறைந்துபோன ரத்தங்கள் பற்றி எழுத அவள் எழும்பி வரவில்லை. “இன்று திரும்பி இன்னுமொருதரம் வென்றுவருவோம்” என உறுதி முழக்கமிட அவள் இல்லைத்தான்; ஆனால் ‘துண்டிக்கத் துண்டிக்கத் துளிர்ப்பார்கள் வீரர்கள்’ என்ற அவளால் எழுதி முடிக்கப்படாத கவிதை வரிகள் எதையோ சொல்லத் துடிக்கின்றன. அவை ஒரு படையணியை இங்கு திரட்டிச் செல்லப்போகின்றன. நாளை உறுதி முழக்கத்தை அல்ல, வெற்றி முழக்கத்தை அவள் படைப்புக்களே செய்யும்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.**

**பாரதி**
*துணைப் பொறுப்பாளர்,*
*விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி.*



படிப்பகம்

www.padippakam.com





இதயத்தில்-
இனத்தின் விடுதலை
கரத்தில்-
ஒரு தேசத்தின் வரலாறு
சுதந்திர வாசல்வரை
இவன்
சுவடுகள் ஓயாது.

எமது இயக்கம் 1989 ஆம் ஆண்டு கொண்டாடிய முதலாவது மாவீரர் நாளைஒட்டி "ஒலிவர்" எனும் பெயருடைய எமது போராளி வரைந்த இப்படத்திற்கு, கப்டன் கஸ்தூரி இக்கவிதையை எழுதியிருந்தார்.



படிப்பகம்

10

## மில்லர்

மாண்டுபோனான்
மறவர்களின்
மன்னன் என்று
மதில்கள் பறைசாற்றுகின்றன.

உன் வீரமரணத்தை
விபரிக்கும்
நம்தேசத்து
மதில்களுக்குத்தான்
எத்தனை..... எத்தனை மகிழ்ச்சி.

மக்கு மதில்களே!
நாங்கள் உங்களைப்பார்த்து
கண்களைத் துடைக்கவில்லை.
மில்லரைப்பார்த்து
விம்மி அழுகின்றோம்.

நெல்லியடிமுகாமை நிர்மூலமாக்க
நீ சென்ற நிலையை
நேரில் நான்
பார்க்கவில்லைத்தான்.
ஆனால்!
பார்த்தவர்களின் தகவல்களை
மறக்க முடியவில்லை.

www.padippakam.com



மரணத்துடன்
தோழமை பூண்டது
மறவர் கூட்டம்.
ஆனால் நீ
மரணத்தையே
மணம்புரிந்து
அதன் மடியில் துயின்றவன்.

சாவைமுறியடிக்கச் சிலர்
சாத்திரம் பார்க்கும் நேரம்
சாவையே முதுகிலேற்றி
சரித்திரம் படைத்துவிட்டாய்.

மரணத்தைக் கண்டு சிலர்
கார்பிடித்துச் சென்ற நேரம்
நீ.....
மரணத்தையே காரில் ஏற்றி
சென்றவன்.

நீ நுழைந்ததும்
எழுந்த பாரிய சத்தத்தின்
பயங்கர அமைதியின் பின்
உன் குரல் எங்காவது
ஒலிக்கின்றதா என்று
எம் காதுகளைக்
கூர்மையாக்கினோம்.
நிமிடங்கள்
மணித்தியாலங்களாக மாற
கண்களைக் கண்ணீர் திரையிட



படிப்பகம்

www.padippakam.com

## 12

வெற்றிபெற்றிருந்தும்
வெறுமை உணர்வுடன்
திரும்பினோம்.

மில்லரே!
உன் கல்லறை
காங்கேசன்துறை
சீமெந்தால் கட்டப்பட்டதல்ல,
தேசத்தின் மத்தியில்
தியாகத்தின் திரட்சியால்
உருவாக்கப்பட்டது.

உன் கல்லறை
கண்ணீர் விடுவதற்கல்ல!
கல்விக் கூடமாகிப்
பாடம் படிப்பதற்கு.

ஐந்தும் இரண்டும் அங்கே
அறிவுறுத்தப்படுவதில்லை!
தியாகமும் விடுதலையுமே
விரிவுரைகளாகின்றன.
அங்கே
பரீட்சைகள் நடைபெறுவதில்லை.
அநீதிக்கெதிரான
படையெடுப்புக்களே நிகழ்கின்றன.

✸

**கரும்புலி கப்டன் மில்லரின் 3வது வருட நினைவு நாளிற்காக எழுதப்பட்ட கவிதை "விடுதலைப் புலிகள்" 1990, ஆடி, குரல்-16இல் வெளியானது.**

**கஸ்தூரியின் ஆக்கங்கள்**

www.padippakam.com

## 13

# காலம் அவளது கைபிடித்து நகர்கிறது

உறுதிப் படுத்தப்படாத
உலக அழிவு
ஓர் நாள்
உண்மையாகிப் போனாலும்
அதன்பின் வரும்
யாருமே அறியாத
ஆரம்பம் ஒன்றில்....
பூபதியின் பெயர்
பொறிக்கப்பட்டிருக்கும்.

பிறிதொரு முறை
பிறந்து வரமாட்டாள் என்பது
பிழையறப் புரிகிறது.
இறந்து போனவர்களுக்குத் தானே
இன்னோர் பிறப்பு
இருக்க முடியும்.

ஆனாலும் உள்ளம்
அவளை அழைக்கிறது.



படிப்பகம்

## 14

நேற்று வரை
நிலவையும் நட்சத்திரங்களையும்
நிமிர்ந்து பார்த்து
நெடுமூச்செறிந்தவள்.

இன்று-
அண்டங்களே அதிசயித்து
அண்ணாந்து பார்த்து நிற்க
புவியீர்ப்புக் கப்பால்
புரையோடி நிற்கிறாள்.
அன்று
உரிமைப் பசிக்கு
உதவி கோரி நின்றோம்.

உலகநாடுகள் முன்
தமிழன்
வயிற்றுப் பசியை
வாதாட்டத்திற்கு வைத்தது
வல்லரசு.

அனைத்து நாடுகளும்
அண்ணாந்து பார்த்து நிற்க
உயரத்திலிருந்து விழுந்தன
உணவுப் பொட்டலங்கள்.

ஒருதலைப் பட்சமாக
உள்ளே வந்த வல்லரசால்
அரிசிப் பொதிகள் விழுந்த

www.padippakam.com



அதே குச்சொழுங்கைகளில்!
குப்பெனப் பீறிட்டது
குருதியாறு.

குச்சொழுங்கைகளில் பரவிய
குருதியாற்றுக்குக் குறுக்கே
நேரு தேசத்துப் படையிடம்-
நீதி கேட்டு
பூகோளம் அதிரப்
பூபதி நடந்தாள்.

அரிசி மூடைகள்
அருகில் இருக்கையில்
சோறின்றி மடிந்த
சோகம் நடந்தது.

முற்றுகைக்குள் சிக்கி
மூச்சுத்திணறிய தமிழுக்கு
காற்றுக் கொடுத்தாள்.
புனிதமான பூமிக்குள்
ஒரு-
பூகம்பத்தின் புகழுடம்பு.
பூபதி
தமிழ்ப்புலர்வின் குடியிருப்பு.

வலம் வந்து வணங்கி
வரலாறு
வாழ்த்துப் பா இசைக்க,
பதிவு செய்வதற்குப்



படிப்பகம்

## 16

பக்கங்கள் போதாதென்று
சரித்திரம்-
அவள் சாவில்
விக்கித்து நிற்கின்றது.

கணமும் நகராமல்
காற்று அவள்
கல்லறையில் சுழன்று வர
வரலாற்றுப்போக்கில்-தாமும்
வற்றாமல் வாழ்வதற்கு,
அழியா வரம் பெற்றவளின்
அஸ்தி கேட்டு
காற்றிடம் சமுத்திரங்கள்
கையேந்தி நிற்கின்றன.

காலையில் வந்த கதிரவன்
கல்லறை வெளிச்சத்தில்
கண்கூசிக் கைகூப்ப
மாலையில் வந்த
மஞ்சள் நிலவு- அவள்
கல்லறையின் ஒளியை
கடன் கேட்டு நிற்கின்றது.
அந்தோ.....
இலட்சியவாதியின் சமாதியில்
இயற்கை
இரண்டறக் கலக்கிறது.

தாயே...!
பிரபஞ்ச வரலாற்றின்

www.padippakam.com



பிரமாண்டமான உச்சியில்
உயிரோட்டத்தோடு
உன்னை நீ
செத்துச் செத்துச்
செதுக்கிக்கொண்டாய்.

உசத்தியாகப் பேசப்பட்ட
உலக அதிசயங்கள்
ஒதுங்கி நின்று பார்த்து நிற்க
பிறக்கும் யுகங்களும்
பிரமிப்பில் ஆழ்ந்து நிற்க
காலம்- உந்தன்
கை பிடித்து நகர்கிறது.

அதனால் சொல்லுகின்றோம்
உறுதிப் படுத்தப்படாத
உலக அழிவு
ஒரு நாள்
உண்மையாகிப்போனாலும்,

அதற்குப் பின் வரும்
யாருமே அறியாத
ஆரம்பமொன்றிலும்
உந்தன் பெயர்
உயிர்த்திருக்கும்.

✸

***விடுதலைப் புலிகள்***
***குரல் 22 சித்திரை - வைகாசி 1991***



படிப்பகம்

www.padippakam.com



## விடுதலை நெருப்பே!

திக்குகள் அதிர
தீயவர் ஒழிய!
பசியோடு வயிறது
பற்றியெரிய!

விசுபரூப மெடுத்த
விடுதலை நெருப்பே!

உந்தன்
அடி முடி அறிந்து
அழிக்க முடியாமல்
பிரளயங்கள் அன்று
பின் வாங்கிச் சென்றன.
உன்
வெம்மையின் முன்னால்
வெற்றி கொள்ள முடியாமல்



படிப்பகம்

www.padippakam.com



வெறியர் படை
மிரண்டோடியது.
தேசத்தின் தாகமறிந்து
தீர்த்து வைத்த தியாகியே!
விடுதலைக்கு
மூச்சுக் கொடுத்தவளே!

காற்றுக்குள் உன்னை
காண்கிறது காலம்.
தண்ணீருக்குள் உன்னை
தழுவுகிறது தமிழ்.
உணவுக்குள் உன்னை
உணர்கிறது உரிமை.

அந்தோ.....
அண்டங்களின் ஐம்புலன்களின்
அறிவுக்கப்பாலும்
நீண்டு நீண்டு செல்லும்
நினைவானவள் பூபதி.

✸

**'சுதந்திரப் பறவைகள்'**
***வைகாசி - ஆனி 1991***



படிப்பகம்

www.padippakam.com



## சரித்திரத்தின் பிரசவிப்பில் சாய்ந்துபோன கோபுரம்

தாண்டு போயிருந்த
தமிழன் உரிமைகளை
தோண்டி எடுக்க
துப்பாக்கி எடுத்தவளே!
அதிகாலை ஒன்றிற்காய்
அஸ்தமித்த வேளையில்
உலகத்தின் உள்ளத்தில்
உதயமாகி விட்டாய்.

சோதியா......
சரித்திரத்தின் பிரசவிப்பில்
சாய்ந்து போன கோபுரம்
சரிந்து கிடந்த சந்ததியை
நிமிரச் செய்த
நெம்பு கோல்.

இவளின்
உயிரற்ற உடலை
உள்ளே வைத்திருப்பதால்
காலந்தோறும்
கல்லறை ஒன்று
கௌரவிக்கப்படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



சரித்திரத்தில் உன் சாவு
சகிக்க முடியாததுதான்.
ஆனாலும்,
சமாளித்துக் கொண்டோம்.
விடியலைத் தடுத்த
வேலிகளைப் பிரிப்போம்.
உரிமைகளைப் பறித்து
உணர்வுகளைச் சிதைக்க வரும்
ஆதிக்க கரங்களை
அக்கினியில் கொழுத்துவோம்.

இறப்புக்கள் தொடர்ந்து
இதயம் வருந்தினாலும்
இலக்கை நோக்கியே
கால்கள் விரையும்,
கரங்கள் உயரும்.
இரத்தம் வடிந்தாலும்
எங்கள் முகங்கள்
வேதனைத் தீயில் வேகாமல்
வெற்றிக் களிப்பால்
சிவப்பாகட்டும்.

✸

**மேஜர் சோதியா நினைவாக எழுதப்பட்டது.**
**"சுதந்திரப் பறவைகள்"**
***05-06-1990.***

## கொழுந்துக் கூடைகள்

சுரண்டல் தராசுகளில்
கொழுந்துக் கூடைகளை
கொழுவி விட்டு
தேனீருக்காக ஏங்கும் இத்
தேயிலைச் செடிகள்.....
அக்கினியாய் அணிவகுத்து
அவலங்களை எரிப்பதெந்நாள்?

✸

**"சுதந்திரப் பறவைகள்"**
***15-12-1989***
**முன் அட்டைப்படக் கவிதை**

www.padippakam.com



# நல்லூரும் நம்மவரும்

நல்லூர்த் திருவிழா
நல்லபடி நடந்தது.
இளையோரும் முதியோரும்
இடிபாடு தாங்காமல்
மூச்சடங்கி அங்கோர்
மூலையிலே முடங்கினர்.

இளவட்டங்கள் எல்லாம்
இஷ்டம்போல் வணங்கினர்.
வளம் மாறி வளம் மாறி
வலம் வந்து வணங்கினர்.
கிட்டத்தில் போய் நின்று
தொட்டுத் தொட்டு வணங்கினர்
வள்ளிகளும் தெய்வநாயகிகளும்
வடிவாக வந்ததினால்
கந்தக்கடவுள் - அவர்கள்
கண்களுக்குப் படவில்லை.

தாவணிபிடித்தும் தலையில் பூ வைத்தும்
ஐஸ்கிரீமில்
அரைவாசிப் பாதித்துண்டும்
பக்திப்பரவசத்தில் பண்ணிய காரியங்கள்
பார்த்தோர் மனதை பரவசத்தில் ஆழ்த்தின.

இல்லை....இல்லை....
பதைபதைப்பில் ஆழ்த்தின.
ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால்
உருப்படியாய்ப் பெண்கள்
ஊர்போய்ச் சேர்ந்தனர்.



படிப்பகம்

# தலை நிமிர்ந்தன... தர்மமும் தியாகமும்

*கோட்டையின் உச்சியிலே*
*கொலுவிருக்கிறது - தமிழன்*
*கொள்கைக் கொடி.*
*தன்மானம் மிக்க*
*தமிழ்த் தலைவன் பின்னால்*
*புயலாய் அணிவகுத்த*
*புலிக் கொடிகள்*
*பட்டொளி விட்டும்*
*பறக்கின்றன.*

*முன்னைய*
*முற்றுகைகளின் முடிவில்*
*சந்தனக் கட்டையில் அடுக்கப்பட்ட*
*சரித்திரப் புருஷர்களே!*
*அன்று*
*எதிரியவன் எண்ணியிருப்பான்*
*சடலங்கள் தானே இவை*
*சாம்பராகி விடும் என்று*

*ஆனால் நீங்களோ*
*மண் மூடைகளின் இடுக்குகளில்*
*மரணிக்காத தோழர்களோடும்*
*புத்தம் புதிதாய்*
*போராட வந்த*
*புதியவர்களோடும்*
*செத்த பின்பும்*
*"சக்தி வாய்ந்த வெடிகுண்டாய்"*

www.padippakam.com



கோட்டை வாசலிலேயே
குறிபார்த்துக் கிடந்தீர்கள்
உங்கள் இலக்குகள்
ஈடேறி விட்டன.
சாம்பல்களோ
சரித்திரமாகி விட்டன.

மூர்க்கத்தனமான - உங்கள்
முற்றுகையை
முறியடிக்க முடியாமல்
அந்தப் பிணந்தின்னிக் கழுகுகள்
பின் வாசலால்
பின் வாங்கி விட்டன.

ஆக்கிரமிப்பும் அதர்மமும்
அடி சாய்ந்து விழ
கோட்டையில்
தர்மமும் தியாகமும்
தலை நிமிர்ந்து நின்றன.

மரணத்தின் முகடுகளில் நின்றாடும்
மங்களகரமான இலச்சினையை
தன்மானத்தோடு
தமிழன் இன்று
தலை நிமிர்ந்து பார்க்கிறான்.
தமிழ் உலகம்
தலை நிமிர்ந்து பார்க்கிறது.

✸

**"சுதந்திரப் பறவைகள்"**
**புரட்டாசி, ஐப்பசி 1990**



படிப்பகம்

www.padippakam.com



## விண்ணுலக வேங்கைக்கு...!

விண்ணுலகில் வீற்றிருக்கும்
மண்ணுலக மறவனே! உன்னை
மறைந்து விட்டாய் என்று
நாம் மறந்து விடவில்லை.
நீ மறைந்து போகவில்லை...எங்கும்
செறிந்து வாழ்கிறாய்.
உருவமாய் ஊரில் திரிந்தாய் - இன்று
அருவமாய் அவனியில் ஜொலிக்கிறாய்.
உன் அஸ்தமன அதிர்வால்
உருவாகிய உதயங்களே அதிகம்.
அப்போதெல்லாம்....
எத்தனை வீடுகள் ஏறி இறங்கினாய்.
எத்தனை நிகழ்வுகள் எடுத்துக் கூறினாய்
நிகழ்வுகள் எம்மைத் தாக்க மாட்டாதென
அத்தனை பேரும் ஏசி எதிர்த்தனர்.
இப்பொழுது......
அதிகமாகவே வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



ஏன் எதற்கென்று யாரும் கேட்பதில்லை.
நீ மரணித்த பொழுதில்...
அவர்கள் மனிதராகி விட்டனர்!
உன் மறைவால் உருவானது
வெற்றிடம் அல்ல......
மிகை நிரம்பல்......
அன்று நீ.....
தனித்து தவித்து நின்றாய்.
இன்று நாம்.....
எதிர் பார்த்துக் காத்திருக்கிறோம்!
இன்னமும்.....
நீ அணிந்த அதே ஆடைகளோடு,
நீ அருந்திய அதே ஆகாரத்தோடு,
இன்று ஆட்கள் அதிகம்.....
ஆயுதங்களும்.... அப்படியே.
நீ உயிரைக்கொடுத்து தட்டிப்பறித்தவையும்
இன்றும்..... எம்மிடம்.....
தூசிபடியாமல் துப்பரவாயுள்ளன.
அன்று உனக்காக தொங்கிய தோரணங்கள்
இன்னும் தொடர்கின்றன.
உனக்காக இசைத்த முகாரி
இன்னமும் மோகனராகம் பாடவில்லை.
உனக்காக சிந்திய நீர்த்திவலைகள்
இன்றும்... சற்று அதிகமாகவே சிந்துகின்றன.
இன்றும் பிரிவுத்துயரை பகிர...
அதிகம் பேர் உள்ளனர்.
ஒருவன் உன்னிடம் வருகையில்....
ஓராயிரம் பேர் எம்மிடம் வருகின்றனர்.
ஒன்று மட்டும் உண்மை!



படிப்பகம்

www.padippakam.com



நாளை தேசியக்கொடியின் வருகைக்காக
இன்று காற்றில் பறக்கும்....
கறுப்புக் கொடிகளே அதிகம்.
ஆனாலும்...
உங்கள் கல்லறைகளில் மண்டியிட்டு
நாம் - கண்ணீர் வடிக்கவில்லை!
சபதம் எடுத்து.....
இலட்சியப் பணிதொடர்கிறோம்.
என்ன பார்க்கிறாய்?
எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி
என்றோ ஓர் நாள்.....
நிச்சயம் வருவோம்.
அதுவரை.....
மறைந்திருந்து மலர்தூவி வாழ்த்து.

✸

**"சுதந்திரப் பறவைகள்"**
**வைகாசி - ஆனி 1987**



படிப்பகம்

www.padippakam.com



## அக்கினிக் குஞ்சுகள்

வேறுபாடற்ற
விடியலை வென்றெடுக்க
துப்பாக்கிகளோடு இவர்கள்
துயிலெழுந்துவிட்டார்கள்.
பாகுபாடு இல்லாது
படைதிரண்டு செல்கிறது.
அந்தோ...
அந்த
அக்கினிக் குஞ்சுகளின்
அணிவகுப்பில் - எதிரிப்படை
எரியுண்டு போயிற்று.

✸

***"சுதந்திரப் பறவைகள்"***
***தை - மாசி 1991***



படிப்பகம்

www.padippakam.com

## 30

# மறைந்தவர்களே நீங்கள் மலடர்கள் அல்ல

மறைந்தவர்களே!
உங்கள்
கல்லறைகள் மேல்
காவடி எடுத்து
நல்லூரை நோக்கி நாம்
நடைபயிலவில்லை.

வல்லரசுகளின் வருகையால்
உங்கள்
கல்லறைகள் மறைவில்
ஓர் ஒப்பந்தம்
உருவாக்கப்பட்டுள்ளது.
உருவாகிய ஒப்பந்தத்தால்
உண்ணாவிரதங்களே நடைபெற்றன.

பாராளுமன்றத்திலும்
பந்து வீச்சு நடந்தது.
தலையைக் குனிந்ததால்
மூக்குத் தப்பி விட்டதாம்.

பட்டினி கிடந்தும்
உணவு பொதி பகிர்ந்துண்டும்
தூக்கமின்றி
நீண்ட இரவுகள்
உங்களால் பாதுகாக்கப்பட்டது
எங்கள் மண்.
எம்மில் சிலர்

www.padippakam.com



அதை
அறவே மறந்து விட்டனர்.

உயிர் கொடுத்தவனை விட
உணவு கொடுத்தவன்
இவர்களால்
உயர்வாக மதிக்கப்படுகிறான்.

செல்லடி தொடர்ந்ததால்
சிங்களக் குடியேற்றமும்
சிறு பிரச்சினையாகி விட்டது
இவர்களுக்கு.

அடிக்கு மேல்
அடி விழுந்ததால்
ஐம்பத்தெட்டு அடி
அவ்வளவு வலிக்கவில்லையாம்.

பிரச்சினைக்கு மேல்
பிரச்சனை வந்ததால்
அடிப்படைப் பிரச்சனை
அறவே மறந்து விட்டது.

இன்று
இவர்கள்
பிரச்சனையென்று
பிரகடனப்படுத்துவதெல்லாம்
இராணுவத்தின் வருகையும்
அவசரகாலச் சட்டமும்
பொருளாதாரத் தடையுமே.



படிப்பகம்

www.padippakam.com



இன்று இவைகள்
எடுபடலாம்.
நாளை
மொழியில் சமவுரிமை,
பல்கலைக்கழகப் புகுவுரிமை,
கிழக்கில் குடியுரிமை,
மலையக மக்கள் பிரஜா உரிமை
இல்லை என்பதை
இவர்கள் உணர்வார்கள்.
அப்போது அறிவார்கள்
அடிமைச் சாசனம்
இன்னும்
அழித்தெழுதப்படவில்லை என்று.

எதிரியை விரட்டியடித்து
உங்கள்
குருதியால்
குளிப்பாட்டிய வீதிகளில்
இன்று
எதிரிபோல் உடையணிந்து
சிலர் போய் வருகிறார்கள்.

எமக்குப் புரிகிறது;
இவர்களுக்குப் புரியவில்லை.
புரிந்தாலும்
இன்றைய சந்தோசங்கள்
சாகடிக்கப்படலாம்
என அஞ்சி
நாளைய பயங்கரத்தைப்
பாராமலே வாழ்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



உடைத்தெறியப்பட்ட
உடைமைகள்
ஆயுதங்களாய்
ஆர்ப்பரித்தெழும்.

உருக்குலைக்கப்பட்ட
உயிர்கள்
உரிமை கோரிக்
கொந்தளிக்கும்.

எரிந்தும் எரியாத
எலும்புத் துண்டங்கள்
இறைமை வேண்டி
எழுந்து நடக்கும்.

அப்போது
வல்லரசு
வழி விடும்.
இலங்கை அரசு
இரண்டாகப் பிரியும்.
தமிழர்க்கொரு
தனியரசு உருவாகும்.
ஆகவே
மறைந்தவர்களே! நீங்கள்
மலடர்களல்ல.

✸

**இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட காலகட்டத்தில் எழுதப்பட்ட கவிதை.**



படிப்பகம்

www.padippakam.com



## சுதந்திரமே... !

சுதந்திரமே...!
உன்னோடு
சொந்தம் கொண்டாடப்
புறப்பட்டதால்,
சாவு இங்கே
சாதாரண விலைக்கு
வந்து விட்டது.
உன் விலையோ - இன்னும்
உயர்ந்து கொண்டுதானே
செல்கிறது.
சிலநாடுகளில்
சில்லறைக்கே
அங்கீகரிக்கப்படும் உனக்கு



படிப்பகம்

www.padippakam.com



நாம்-
நோட்டு நோட்டாய்க்
கொடுத்த பின்பும்
வேட்டுக்கள் தானே
கேட்கின்றன.

ஆனாலும்
வேட்டுக்களுக்கோர்
விண்ணப்பம்-
விடுதலையை உங்களால்
விழுங்கிவிட முடியாது.
சுதந்திரத்தை உங்களால்
சுட்டுப் பொசுக்க முடியாது.
ஆகவே
தியாகிகளிடமிருந்து
திரும்பிச் சென்று
சமூக விரோதிகளினுடலில்
சரணடைந்து கொள்ளுங்கள்.

✸

***செவ்வந்தி வெளியீடு - 3***
***மார்ச்-1989***



படிப்பகம்

## வல்லரசுகள்

வல்லரசுகளே
நீங்கள்,
வாழ்வதற்காக
வாழ்பவர்களை
வதைப்பவர்கள்.

உங்கள் வல்லமைகள்
ஆய்வு செய்யப்படுகையில்
வளர்முக நாடுகளே
வாழா வெட்டியாகின்றன.
நீங்கள்
நிலவில்
வரலாறு படைக்க
மண்ணை
மானபங்கம் செய்பவர்கள்.

வறுமையும் பிணியும்
உங்கள்
வருகையால்
வளர்க்கப்படுபவை.

உங்கள்
தேசத்து



படிப்பகம்

www.padippakam.com



செஞ்சிலுவைச் சங்கங்களும்
சேதங்களைச் சேகரிப்பதில்லை;
இருப்புக்களையே
எண்ணிப் பார்க்கின்றன.

உங்கள் நாட்டுக்
கணக்காய்வாளர்கள்
இறப்புக் கணக்குகளை
இருப்புப் பக்கத்தில்
பதிந்து காட்டும்
பட்டதாரிகள்.

உங்களோடு
சம்பந்தம் செய்து கொண்ட
சமாதான நாடுகள்
இங்கு
பிரசவித்துக் கொண்டது
பிரச்சினைகளைத்தான்.

உங்கள்
விமான நிலையங்கள்
விஸ்தரிக்கப் படுகையில்,
எங்கள்
குடிசைகள் அல்லவா
கொளுத்தப்படுகின்றன!

சமாதான நாடுகளில்
சாமர்த்தியமாய்
நுழைந்து



படிப்பகம்

www.padippakam.com

## 38

ஆணி வேரை
அறுத்துவிட்டு
வாடாது நிற்க
நீர் ஊற்றுபவர்கள்.

உங்கள்
தலையீடுகளால்
தரைமட்டமாகிப் போன
தேசங்களே
அதிகம்.

நீங்கள் பரவிய
எயிட்ஸ் இங்கே
இயற்கையானதல்ல
என்ற பின்பு,
காற்றும் மழையும் கூட
சந்தேகப் படுகின்றன.

நாளைய செயற்கைப் புயலுக்கு
சொந்தம் கொண்டாடப் போகும்
சர்வதேசப்
பயங்கரவாதிகள் நீங்கள்.

✸

**"வெற்றுடல்கள் அல்ல அவை**
**வெடிமருந்துப் பொதிகள்...."**
**என்ற கவிதைத் தொகுதியில் வெளியானது.**

www.padippakam.com



# திலீபன் அண்ணா

பத்து மாதம் அன்னையவள்
பத்திரமாய்ச் சுமந்து உன்னை
நித்திலத்தில் பெற்றெடுத்தாள்.
சத்தியமாய் உன்னைப் பெற்று
எடுத்த இடம் தமிழீழம்.

பத்து மாதம் சுமந்தவள்
இன்று
நித்திலத்தில் இருந்திருந்தால்
உன்
ஒட்டிய வயிறு கண்டு
இரத்தக் கண்ணீர் வடித்திருப்பாள்.

திலீபன் அண்ணா!
உங்களுக்கு
பசியால் பார்வை மங்குவது
எனக்குத் தெரிகிறது.
இங்கிருக்கும் மக்கள்கூட
உங்களிற்கு
மங்கலாகத் தெரிகின்றார்கள்
ஆனால்
தமிழீழம் மட்டும்
தெளிவாய்த் தெரிகின்றது.
உங்கள்
குழிவிழுந்த கன்னங் கண்டு



படிப்பகம்

www.padippakam.com



இங்கு
குளமாகும் கண்கள்
எத்தனை, எத்தனை!

திலீபனண்ணா!
(உண்ணாமலிருக்கும் உங்களால்
எப்படிச் சிரிக்க முடியும்?)
எனக்குத் தெரியும்
நீங்கள் சாகும் போதும்
சிரித்துக் கொண்டே சாவீர்கள்.
ஏனென்றால்
நாங்கள்
அழக் கூடாது என்பதற்காக.
எப்படியண்ணா அழாமல் இருக்க முடியும்?
உங்கள் ஒட்டிய வயிறும்,
குழிவிழுந்த கண்களும்,
குற்றுயிராய்க் கிடக்கும் நிலையும் கண்டால்
கல் நெஞ்சமும் கசிந்து கண்ணீர் விடும்.
உங்கள் நண்பர்கள் இங்கே
நடைப்பிணமாய்த் திரிகின்றார்கள்.
அவர்கள்
ஆசைப் படுவதெல்லாம்
மெயின் மெயின்
திலீபன்
அல்பேட் அல்பேட்
திலீபன்
மில்லர் மில்லர்
திலீபன்
என்று நீங்கள்
திரும்பத் திரும்ப



படிப்பகம்

www.padippakam.com



வோக்கியில் பேசுவதைத்தான்.
தயவுசெய்து
ஒரேயொரு முறை
இறுதியாக
அவர்களுக்குப் பேசிக்காட்டுங்கள்.

அன்று---
செந்நிறச் சேலைகட்டி
செங்குருதியில் பொட்டும் இட்டு
பாதயாத்திரைக்கு அனுப்பி வைத்தீர்களே
அவர்களுக்கும்
இறுதியாக
ஒரேயொரு முறை
பேசிக்காட்டுங்கள்.

மௌனமாய் அழைக்கும்
மரணித்த நண்பர்களிடம்
போகப்போகிறேன்
என்று,
மக்களிடம் சொல்கிறீர்கள்.
இங்கு
வருந்தி அழைத்து
வாடிக்கிடக்கின்றார்களே
உங்கள் குழந்தைகள்,
அவர்களுடன்
ஏன்
வாழக்கூடாது?

திலீபனண்ணா!
உங்கள்



படிப்பகம்

www.padippakam.com



நண்பர்கள் இங்கே
நடைப் பிணமாய்த் திரிகிறார்கள்-
எங்கே நீங்கள்
எங்களை விட்டுப் போய்விடுவீர்களோ
என்று.
தலையிலிருந்து கால்வரை
உங்களைத் தடவிக்கொண்டிருக்கும்
காட்சி கண்டு
இங்கே
ரத்தக் கண்ணீர் சிந்துகின்றோம்.

திலீபனண்ணா
நான் நினைக்கவேயில்லை
உயிரோடு உங்களுக்கு
என்கையால் கவி எழுதி
அதை உங்கள் காலடியில் சமர்ப்பிப்பேன் என்று.
நீங்கள்
தமிழீழத்தில் கொண்ட உறுதியால்
இன்னமும் மயங்காமல் இருக்கின்றீர்கள்.
ஆனால்
உங்கள்
மீது கொண்ட பாசத்தால்
இங்கே
எத்தனை தாய்மார்
தள்ளாடி விழுகின்றார்கள்!
திலீபனண்ணா
எவ்வளவு தைரியம் இருந்தால்
மகாத்மாவிற்கே
சவால் விடுவீர்கள்.
அவர்கூட



படிப்பகம்

www.padippakam.com



நீர் அருந்தி நீண்ட நாட்கள்
நினைவோடு இருந்தாரே,
நீங்கள்
ஏன் அண்ணா அருந்தக் கூடாது?
எனக்குத் தெரியும்
நீங்கள் அருந்த மாட்டீர்கள்;
தமிழீழத் தாகத்திற்குத்
தண்ணீர் அருந்தமாட்டீர்கள்.
இந்தியாவின் இறுதி முடிவிற்காய்
உங்களின்
இறுதி மூச்சை
இழுத்துப்பிடித்திருக்கிறீர்கள்;
ஆனால்
இங்கே
உயிர் கொடுத்தவனை விட,
உணவு கொடுத்தவன் உயர்வாக மதிக்கப்படுகிறான்.

திலீபனண்ணா
பிரச்சினைக்கு மேல் பிரச்சினை வந்ததால்
எம் மக்களிற்கு அடிப்படைப் பிரச்சினை
அறவே மறந்துவிட்டது.
இன்று
இவர்கள் பிரச்சினை என்று
பிரகடனப்படுத்துவது எல்லாம்,
ஆமியின் வருகையும் அவசரகாலச் சட்டமும்
பொருளாதாரத் தடையுமே.
இன்று இவைகள் எடுபடலாம்.
நாளை,
கல்வியில் சமவுரிமை
பல்கலைக்கழக புகு உரிமை



படிப்பகம்

www.padippakam.com



கிழக்கில் குடியுரிமை,
மலையமக்களின் பிரசாவுரிமை
இல்லை என்பதை
இவர்கள் உணர்வார்கள்;
அப்போது அறிவார்கள்
அடிமைச் சாசனம் இன்னமும் அழித்தெழுதப்
படவில்லை என்று
பாரதமே!
அன்று விடுதலையின் வரைவிலக்கணத்தை
விளங்கப்படுத்தியவன் நீ
நீ
பணத்திற்காகப் பறிப்பித்திருக்கலாம்.

நாங்கள்
நடைமுறையில் வாழத்துடித்தவர்கள்.
இந்தியாவே!
உன்வருகையால் மரணித்த தேவரின்
கல்லறைகள் மறைவில்
ஓர் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது;
உருவாகிய ஒப்பந்தத்தால்
இன்று
உண்ணா விரதங்களே நிகழ்கின்றன.

இந்திய ராணுவமே
எம் தேசத்துத் தெருக்களில்
பேய்களாய்த் திரியும் உன்னை
தெருவிளக்காய் இன்று
எம்மவர் நினைக்கலாம்.
உன் சுயரூபம் நிச்சயம் அம்பலமாகும்.
அப்போது



படிப்பகம்

www.padippakam.com



உண்மையான தெருவிளக்குகளைத் தேடி
அவர்களே வருவார்கள்.
எம்மக்களைக் காக்க
எம்மால் விரட்டியடிக்கப்பட்ட விசப்பாம்புகள்
இன்று
உன் வருகையால் இங்கே
வரவழைக்கப்பட்டுள்ளன.
விரட்டியடித்த போது
விசம் என்பதை ஏற்றுக் கொள்ளாதவர்கள்
கடித்த பின்பாவது
கருத்துத் தெரிவிக்கட்டும்.
இந்தியாவே!
எமக்குத்தேவை எலெக்சன் அல்ல
இணைப்பு
எலெக்சன் வைக்க வேண்டியது
உங்கள் காஷ்மீரில்
இணைக்க வேண்டியது வடக்கும் கிழக்கும்.
காஷ்மீரைக் கட்டுப்பாட்டில் வைத்து
இலங்கையில் எலெக்சனை ஏற்படுத்தும்
உனக்கு, நோபல் பரிசு ஒரு கேடா,
பாரதமே!
மாகாத்மாக்கள் உங்கள் தேசத்தில் மட்டுமல்ல
எங்கள் தேசத்திலும் மலர்வார்கள்.
அகிம்சையைப் பிரசவித்த உங்கள் பிரதேசம்
ஆக்கிரமிப்புச் செய்வதை அவர் அனுமதிக்கமாட்டார்;
அகிம்சையை மறந்து
ஆக்கிரமிப்புச் செய்த உங்களை
அகிம்சையால் விரட்டியடிக்க
அவர்
எங்களோடு இணைவார்.



படிப்பகம்

www.padippakam.com



விரைந்த உன் சுவடுகள்.......
ஒருநாள்
உன்போன்றோரின்
இறப்புக்களின் பின்னணியில்
இந்தியப்படை வெளியேறும்;
சாவுகளின் மேட்டில் - ஒரு
சரித்திரம் உருவாகும்.

வீரனே....
உன்
கல்லறையில் விளக்கேற்றி
களங்கப் படுத்தவில்லை...
கண்ணீர் வடிக்கவில்லை.
ஏனென்றால்.....
எமக்குத் தெரியும்,
உள்ளே இருப்பது
சூரியன் என்று.

✸

**மேஜர் பிரசாத் (கந்தையா முரளீதரன், "அஜந்தா" மூளாய். பிறப்பு:- (18-09-1962). பளிப்புலம் என்னுமிடத்தில் இந்தியப்படை கைதுசெய்ய முற்படுகையில் சயனைற் உட்கொண்டு வீர மரணமடைந்தார். இவர் லெப். கேணல் திலீபனிற்குப் பின்னர் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்தவர்.**



படிப்பகம்

# ஒரு நாள் வெளிவரும்

கவிதையே...!
உன்னைக் காதலிக்கிறேன்
பல நாட்களாக.
பதிவுத் திருமணத்திற்கு
ஆசைப்பட்டு
பக்கம் பக்கமாக எழுதி
பத்திரிகைக்கு
அனுப்பி வைத்தேன்.
அங்கே
வேலை செய்வோர்க்கு
வேலை கொடுக்கவென்று
வெட்டியெறியப்பட்டபின்
பத்திரிகையில்
பதியப்பட்டது
பத்துச் சொற்கள்தான்.

ஆனாலும்
அழுது வடிக்கவில்லை.
என்றோ ஒருநாள்
வெட்டியெறியப்பட்டவை
வெளிவரும்
என்ற நம்பிக்கையில்,
மீண்டும் மீண்டும்
காதலித்துக் கொண்டேயிருக்கிறேன்.

✷

**நாளிதழ் ஒன்றிற்குத் தான் எழுதியனுப்பிய கவிதையில் சில வரிகள் நீக்கப்பட்டதால் ஏற்பட்ட உணர்வால் இவருக்கு எழுந்த கவிதைதான் இது.**

www.padippakam.com



# இறப்பற்றோர்

வெட்டப்பட்ட கரங்கள்
வேகமுடன் வளர்கின்றன.
முறிக்க முறிக்க
முளைவிடும்
மூர்க்கமான செடியைப் போல்,
கத்தரிக்கப்பட்ட கரங்கள்
கணுக்களைப் பிரசவிக்கின்றன.
சிதைக்கப்பட்டவைகள்
சிவப்பாக வெடிக்கின்றன.

நெரிக்கப்பட்ட குரல்வளைகள்
நெருப்பு வரிகளில்
முற்றுகையை எதிர்த்து
முழக்கமிடுகின்றன....

சூடுபட்ட,
சுவாசப் பைகள்
ஆக்கிரமிப்பாளனை
அவிப்பதற்கு
விடுதலை மூச்சை
வெம்மையாக
வெளியேற்றுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



இறந்து போனான்
என எதிரியவன்
எக்காளமிடுகையில்,
பிணங்கள் இங்கே
பிறவி எடுக்கின்றன.

எதிரிகளே.....
துடிக்கப் பதைக்க
வதைத்துக் கொல்லுங்கள்:
அதனாலென்ன!
துண்டிக்கத் துண்டிக்கத்
துளிர்ப்பார்கள் வீரர்கள்.

எங்கள் எல்லை நீங்கி
உங்கள் படைகள்
ஓடும் வரை,
எங்கள் வீரர்க்கு
இறப்பே யில்லை.

உரிமை வேண்டி
உயர்ந்த கரங்கள்
ஆக்கிரமிப்புகளுக்கு
அடிபணிந்து போகாது!

✸

**ஆனையிறவுச் சமரில் வீர மரணத்தைத் தழுவிக்கொண்ட கப்டன் கஸ்தூரியினால் இறுதியாக எழுதப்பட்ட (எழுதி முடிக்கப்படாத கவிதை வரிகள் இவை.**



படிப்பகம்

www.padippakam.com



## சிறுகதை

# நிர்ப்பந்தங்கள்

அக்கா இப்போதும் அழகாகத்தான் இருந்தாள். தலையை அளவாக மேவி இழுத்து, ஒற்றைப்பின்னல் போட்டு, கூறைச் சேலை உடுத்தி, தூங்குவது போல்..... யாராவது கூறைச் சேலையோடு தூங்குவார்களா....? இவளைப் பார்க்க அப்படித்தான் இருந்தது. நெற்றியில் குங்குமப் பொட்டு பளிச்சென்று தெரிந்தது. பொட்டு பெண்களுக்குத் தேவையோ இல்லையோ......? ஆனால் இவளுக்கு அது நன்றாகவே இருந்தது.

இப்போதும் அவளின் கண்கள் யாரையும் நேருக்கு நேராகப் பார்க்கவில்லை. ஆனால் நிறையப் பேர் அவளை வந்து பார்த்தார்கள்..... அம்மா இப்போது அவளைப் பாதுகாக்க நினைக்கவில்லை.... பறிபோய்விட்ட பொருள் என்பதாலோ என்னவோ.....?

ஊர்ப்பெண்கள் அம்மாவைக் கட்டிக்கொண்டு அழுதார்கள்.... கத்தினார்கள். அக்காவை அவ்வளவாகத் தெரியாதவர்கள் கூட நிறைய நாள் பழகியவர்கள் போல்...... அம்மாவோடு சேர்ந்து நீண்ட வசனங்கள் சொல்லி அழுதார்கள். புதிதாக திருமணம் செய்த பெண்கள் அழுவதில்



படிப்பகம்

சிறிது வெட்கப்படுவது தெரிந்தது. ஆனாலும் சம்பிரதாயத்துக்கு அழத்தான் செய்தார்கள்.

ஆண்களும் வந்து அக்காவைப் பார்த்தார்கள். ஆனால் பெண்களோடு நடந்து கொண்டது போல் அம்மா ஆண்களோடு அழவில்லை. ஆண்களில் நெருங்கிய உறவினர் வந்த போது மட்டும் காலைப் பிடித்துக் கொண்டு கத்தினாள். பெரும்பாலான ஆண்கள் அழவில்லை. வேதனையை அடக்கிக் கொள்கிறார்கள் என்பது முகத்தில் தெரிந்தது. அம்மாகூட அப்படிச் செய்யலாம்.... ஆனால் அவளோ பெருங் குரலெடுத்துக் கத்தினாள். தேநீர் குடிக்க மறுத்தாள். தானும் இனி இறந்து விடுவேன் என்பது போல் அழுதாள்.

பிரிவின் துயரங்கள் மனிதர்களை அப்படிச் செய்ய வேண்டும் போல் தூண்டினாலும் யாரும் யாருக்காகவும் அவ்வளவு இலகுவாக உயிரை விட்டுவிட மாட்டார்கள்.

அம்மாகூட அப்படித்தான். சாகமாட்டாள்.

அக்காவின் சாவு அப்பாவையும் நிறையவே பாதித்தது. மரணச் செய்தி வந்தவுடன் சிறுபிள்ளைபோல் குலுங்கிக் குலுங்கி அழுதார். பிரேதம் வந்தபோது தலையில் அடித்துக் கத்தினார்.... மூர்ச்சையுற்றார். மாமாவும் பக்கத்து வீட்டு குமாரசாமியும் ஆறுதல் சொல்லிக் கூட்டிச்சென்றார்கள். இப்போது படலைக்கு வலப்புறமாக வேலியோடு உள்ள உழுத்துப்போன பனங்குத்தியில் உட்கார்ந்திருக்கிறார். இடையிடையே அழுகிறார்.

அண்ணாவும் ஆரம்பத்தில் மிகவும் அழுதான். இப்போது அழவில்லை... மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கொண்டு அங்குமிங்கும் திரிகிறான்.

அண்ணி அம்மாவைப் போலவே இப்போதும் அழுகிறாள்.... இடையிடையே ஒருசிலர் வந்து ஏதோ கேட்கிறார்கள். அப்போது எழுந்து உள்ளே போகிறாள். திரும்பவும் வந்து உட்கார்ந்து கொள்கிறாள். அண்ணி இரண்டு முறை தேநீர் குடித்தாள்.

www.padippakam.com



அண்ணாவின் ஒரே மகள் கீர்த்தனா - இப்போதுதான் இரண்டரை வயதாகிறது. அவளுக்கு இங்கு நடப்பதெதுவும் புரியவில்லை.... கீர்த்தனா அண்ணியை விட்டுப் பிரியவே மாட்டாள்..... சதா அண்ணியின் சேலையோடு இழுபடுவாள். அண்ணிகூட அப்படித்தான்..... ஒரு நிமிஷம் காணாவிட்டாலும் அளவுக்கதிகமாக வேதனைப் படுவாள். இன்று அண்ணி கீர்த்தனாவைத் தேடவில்லை. கீர்த்தனாவும் அண்ணியிடம் வரவேயில்லை.

குசினிக்கு நேர் எதிரே சாப்பாட்டு அறை. அதற்கடுத்தாற் போலிருந்தது படுக்கையறை. வாசுகி படுக்கையறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே கட்டிலில் குப்புறப் படுத்திருந்தாள். கண்கள் சிவந்து முகம் உப்பியிருந்தது. அவளும் காலையில் நன்றாகவே அழுதிருந்தாள். பிறகு பிறகு அழவில்லை. இனி அழக்கூடாதென்று நினைத்திருந்தாள். தலையிடி தாளாது விக்சைத் தேடினாள்.... ஊஹூம் கிடைக்கவில்லை.... எங்கே பக்குவமாக இருக்கிறதோ தெரியாது. ஒரு துண்டைக் கிழித்து தலையைச் சுற்றி இறுகக் கட்டினாள்.

அடிக்கடி பெண்கள் அறைக்கதவைத் திறந்து உள்ளே வந்தார்கள். அறைக்குள் எதையோ தேடினார்கள். அவர்களில் சிலர் ஒரு போதும் அவர்களின் வீட்டினுள்ளே வந்தறியாதவர்கள். ஒருத்தி நீண்ட நேரமாக எதையோ தேடினாள். அலுமாரியைத் திறந்து பார்த்தாள். வாசுகி பொறுமையிழந்தவளாய் என்னவென்று கேட்டாள். வந்தவள் “தேங்காய் நெய்” என்றாள். வாசுகிக்கு எரிச்சல் வந்தது. தேங்காய் எண்ணெய்யைப் போய் யாராவது படுக்கையறை அலுமாரியுள் தேடுவார்களா.....? குசினிக்குள் இருக்கின்ற தென்றாள்..... தானே போய் எடுத்துக் கொடுத்தாள்.

வெளியே பறைமேளச் சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது. மேளமடிப்பவன் தூங்கித் தூங்கி விழித்தானோ என்னவோ இடையிடையே சத்தம் உச்சக்கட்டத்தில் ஒலித்தது. பெண்கள் அப்போது பெருங்குரலெடுத்துக் கத்தினார்கள்.

வாசுகிக்கோ வெளியே நடப்பதை அறியவேண்டும்



படிப்பகம்

www.padippakam.com



போலிருந்தது.... தானே எழுந்து செல்ல மனம் இடங் கொடுக்கவில்லை. அன்று தொட்டு இன்று வரை அக்காவின் வாழ்க்கைக்கு எல்லைகளை வகுத்து அவளின் சாவுக்குக் காரணமாயிருந்த சமுதாயம்..... அவளின் உயிரற்ற உடலை வைத்து வெளியே செய்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள்....

வாசுகிக்கு அம்மா மீதுதான் ஆத்திரம் வந்தது. ம்.... ஹூம் அவள்கூட பாவம். அம்மா என்ன செய்வாள் - அவளும் எங்களைப் போலத் தானே.... வீட்டிற்குள்ளேயே கிடக்கிறாள்.... சதா அடுப்படிதானே அவளுக்கு..... இத்தனைக்கும் அப்பா வீட்டில் நிற்பதே அரிது.... உழைத்துக் கொண்டு வந்து போடுகிறாராம்.... சீ..... என்ன பெரிய உழைப்பு! அம்மாவை விடவா அவர் அதிக நேரம் உழைக்கிறார். கேடு கெட்ட சமுதாயம்... நாற்றமெடுக்கிறது. பெண்களை எப்படியெல்லாம் அடக்கி வைத்திருக்கிறது.....? ஆண்களுக்கு பணிவிடை செய்யப் பிறந்தவர்கள் என்றல்லவா பெண்களை நினைக்கிறது.

சிறுவயதில் வாசுகிக்கு விளையாட்டென்றால் நிரம்பவே பிடிக்கும். அக்காவோ ஒரே சோம்பேறி. விளையாட்டென்ன படிக்கக் கூட அவளுக்குப் பஞ்சி..... சதா தூங்கிக் கொண்டேயிருப்பாள்..... எது செய்தாலும் அம்மாவைக் கேட்பாள். அம்மா வேண்டாமென்றால் விட்டுவிடுவாள்.

வாசுகிக்கு வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்காது. ஏதாவது செய்யவேண்டும் போல் துருதுருப்பாள். அவள் வயதையொத்த பெண்களை அயல் வீடுகளிலோ ஒழுங்கைகளிலோ காணமுடியாது. பெரும்பாலும் எல்லோரும் தோட்டங்களுக்கு புல்லுப் பிடுங்கத் தாயோடு போய்விடுவார்கள்.

வயிரவ கோயிலுக்கு மேற்குப் பக்கத்திலுள்ள பனை வளவுக்குள் பையன்கள் விளையாடுவார்கள். ஒழுங்கையெங்கும் சைக்கிளோடித் திரிவார்கள். ஒரு சைக்கிளில் மூன்றுபேர்கூடப் போவார்கள். தினமும் அண்ணாவும் பந்தடிக்கப் போவான். வாசுகிக்கு அவர்களோடு விளையாடவேண்டும் போலிருக்கும். "ம்ஹூம் அம்மா நிச்சயம் விடமாட்டாள்...." யோசித்துப் பார்த்து விட்டு அம்மாவுக்குத் தெரியாமலே ஓடி விடுவாள்.



படிப்பகம்

www.padippakam.com



"ம்.... பையன்களுடன் எப்படித் தனியாக விளையாடுவது? கூட ஒருத்தி வந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்.....? ம்ஹூம் அப்படி என்ன பண்ணுவார்கள்..... விளையாடத்தானே.... அண்ணா கூட நிக்கிறான். அம்மாவுக்குத் தெரியாவிட்டால் போதும்.'' பையன்களோ அவளை விளையாட்டில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். கேலி பண்ணுவார்கள். "போ.....போ.... பெட்டைக்கென்ன விளையாட்டு பையன்களோடு.....? போய் தனியாக கொக்கான் வெட்டு..... அக்காவோடு சேர்ந்து தூங்கு போ.... போ....." அண்ணா கூட சிலவேளைகளில் இப்படி ஏசுவான். வாசுகிக்கோ ஆத்திரம்; அழக்கூடச் செய்வாள். அவர்கள் விளையாட்டு முடிந்து போகும்வரை தானும் போகமாட்டாள்.

"அம்மா நிச்சயம் தேடுவாள் ...... தேடட்டும். நானாக ஏன் போக வேண்டும்....? தினமும் நானா புல்லுப் புடுங்குவது. அண்ணாவும் புடுங்கலாந் தானே.... வேண்டுமென்றால் அந்த தூங்கு மூஞ்சியைக் கூட்டிப்போகட்டும்'' பனங்குத்தி ஒன்றில் அமர்ந்தபடி விளையாட்டை ரசிக்க ஆரம்பித்துவிடுவாள்.

''நன்றாக நின்றுவிட்டு வரட்டும்; வீட்டில் வைத்து உதைக்கிறேன். பெண்பிள்ளை என்று கொஞ்சமாவது அடக்கம் இருக்கிறதா....? பையன்களோட விளையாடத் திரிகிறாள்.'' சிலவேளைகளில் அம்மா தேடமாட்டாள்.... வாசுகி போயிருக்கும் இடம் அம்மாவுக்குத் தெரியும். வீட்டிற்கு வந்ததும் வாசுகிக்கு நல்ல அடி கிடைக்கும். அண்ணாவும் அம்மா பக்கம் சேர்ந்து கொள்வான். "இவள் வீட்டிலிருக்க வேண்டியவள். தன்னிஷ்டத்திற்கு வெளிக்கிட்டுத் திரிகிறாள். இவளை அம்மா கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் பின்னர் கஷ்டப்பட வேண்டியிருக்கும்'' என்பது போலிருக்கும் அவன் செயல்.

அப்போதெல்லாம் வாசுகிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும். "ஏன்தான் அம்மா என்னை மட்டும், இப்படிச் செய்யாதே.... அப்படிச் செய்யாதே..... என்கிறா. அண்ணா எவ்வளவு சுதந்திரமாகத் திரிகிறான்.... உடுப்பு வாங்குவதாக இருந்தால்



படிப்பகம்

கூட தனியாகத்தான் போகிறான். நண்பர்களோடு போய்ப் படம் பார்க்கிறான். நேரம் கழித்து வீட்டுக்கு வருகிறான். வீட்டில் ஒரு வேலைகூடச் செய்வதில்லை. ஒரு நாள் கூட தேநீர் வைத்தறியான்.... எவ்வளவு வளர்ந்து விட்டான். அம்மா வெங்காயம் வெட்டக் கூடக் கேட்பதில்லை. அண்ணா என்ன; அப்பாவுக்கே இன்னும் சமைக்கத் தெரியாதுதானே. எனக்குச் சமைக்கத் தெரியாது என்றபோது அம்மா எவ்வளவு ஏசினா...." "மாடு மாதிரி வளர்ந்ததுதான் மிச்சம். இன்னும் ஒழுங்கா ஒரு கறியும் ஒரு சோறும் வைக்கத் தெரியாது. நாளைக்கு எனக்கொண்டெண்டா ஆரும் வந்து சமைச்சுத் தரப்போயினமோ.... பொம்பிளைப் பிள்ளையள் சமைச்சுப் பழகாம என்ன செய்யப்போறியள்....? சனம் அறிஞ்சா என்னைத்தான் பகிடி பண்ணும். அவள் பெட்டையளை வைத்திருக்கிற லட்சணத்தைப் பார் எண்டு."

வீட்டில் ஏசியதோடு மட்டும் அம்மா நின்று விடவில்லை. கலியாணவீடு, செத்தவீடுகளில்கூட ஊர்ப் பெண்களுக்கு இதனைக் கூறினாள். உறவினர் வந்த போதெல்லாம் கதையோடு கதையாக இதையும் கூறினாள்.

இப்போதெல்லாம் நான் நன்றாகவே சமைக்கிறேன். அக்காவுந்தான். அக்கா அம்மாவைக் காட்டிலும் நன்றாகச் சமைப்பாள்..... அப்பாவுக்கு அக்காவின் சமையல்தான் அதிகம் பிடிக்கும்.

"வாசுகி.... வாசுகி..... எழும்பு மோனை.... ம்...... கொக்காண்டை தலைவிதி அவ்வளவுதான்."

"ஏன் பிள்ளை தலையிடிக்குதே?"

கட்டிலடியில் புவனம் தேநீர்க் கோப்பையுடன் கால்மாட்டோரமாக நின்றிருந்தாள்....

வாசுகி வீட்டிற்குப் பின்னால் நான்கு வீடு தள்ளி இருந்தது புவனத்தின் வீடு.... ஓரளவுக்கு தூரத்து உறவினர்தான். ஆனாலும் இரு குடும்பமும் மிகவும் நெருக்கமாகப் பழக்கப்பட்டிருந்தன. வாசுகி புவனத்தை மாமி என்று தான்

www.padippakam.com



மந்திரம் ஓதினார். மாமனார் தேங்காய் உடைத்தார். ஊர்ப் பெண்கள் ஆலாத்தி சுத்தினார்கள். நாதஸ்வரம், மேளம் உச்சக் கட்டத்தில் ஒலித்தது. ஏறக்குறைய ஒரு திருமணவீடுதான்; மாப்பிள்ளைதான் இல்லை.

சனநெரிசலில் வியர்த்துக்கொட்டியது. வாசுகிக்கு ஒரேயடியாகத் தலையை வலித்தது. எங்காவது சன நடமாட்டம் இல்லாத இடத்தில் காற்றுப்பட உட்கார வேண்டும் போலிருந்தது. அப்படி ஒரு இடம் இருப்பதாக வாசுகிக்குப் படவில்லை. படுக்கையறைக்குள் நுழைந்தாள். அங்கே ஒருவரும் இல்லை. யன்னலோடு புவனம்மாமி மட்டும். வாசுகிக்குத் தூக்கிவாரிப் போட்டது. மகளுக்கு நடக்கும் சம்பிரதாய நிகழ்வுகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் அழுகின்றாள் என்பது வாசுகிக்கு விளங்கியது. வாசுகியைக் கண்ட புவனம் அவசர அவசரமாகக் கண்களைத் துடைத்தாள். வாசுகியைப் பார்த்து முறுவலித்தாள். அவளின் உதடுகளின் துடிப்பையும் கண்களில் தெரிந்த சோகத்தையும் நொடிப்பொழுதில் கண்டுகொண்ட வாசுகி, புவனம்மாமி எதையோ எண்ணி வேதனைப்படுகிறாள் என்பதைப் புரிந்துகொண்டாள்.

"என்ரை பிள்ளை ஏனடா வந்தனீ? அங்கை எல்லாரும் நிக்கினம்; நிண்டு பாக்காதையுமன். காவேரியும் ஆசைப்படுவள்."

தனது மகளுக்கு தான் ஆசையாக அபூர்வமாகச் செய்யும் கொண்டாட்டங்களில் எல்லோரும் பங்குபற்றி சந்தோஷப்பட வேண்டும். குறிப்பாக மகளின் வயதையொத்தவர்கள், அவளின் சிநேகிதிகள் பங்குகொள்ளும் போது அவள்படும் சந்தோஷத்தைக் கண்டுகளிக்க விரும்பும் ஒரு தாயின் ஏக்கம் அவள் வார்த்தையில் தொனித்தது.

ஆனாலும் அந்தத் தாய் ஏன் இங்கே தனியாக நின்றாள்; ஏன் அழுதாள் என்பதுதான் வாசுகிக்கு சங்கடமாகவிருந்தது. இந்தச் சந்தோஷமான நாளில் எல்லாவற்றையும் முன்னின்று செய்யவேண்டியவள் இவள் தானே. இவளுக்குத் தானே அந்தச் சந்தோஷத்தில் அதிக உரிமை இருக்கிறது. பிறகேன் இப்படி



படிப்பகம்

www.padippakam.com



தனியாக இங்கே? காலையில் கூட இவள் அவ்வளவாக முன்பக்கம் வரவில்லை. அடுப்படி வேலைகளில் தான் மும்முரமாக நின்றாள். ஓடியாடி எல்லா வேலைகளையும் தானேதான் முன்நின்று செய்தாள். ஒருவேளை நகை நட்டு ஏதும் இல்லையென்றோ....? சீ.... அதற்காகவாயிருக்காது. சங்கிலி காப்புத்தான் இங்கே எத்தனை பேரிடம் வாங்கலாம். வாசுகி தன் ஆராய்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

“இல்லை மாமி நான் அங்கை போகப்போறன். தலையிடிச்சாப் போலை எப்பனுக்கு இருந்திட்டுப் போவமெண்டு வந்தனான்.”

“ஆ ஆ.... அப்பிடி அந்தப்பாயைப் போட்டுட்டு எப்பனுக்குப் படுமோனை. இனித்தான் படமெடுக்கிற தாக்கும். நீயும்போய் அவளோடை நிண்டு நாலைஞ்சு படத்தை எடுபிள்ளை. அவள் நெடுகச் சொல்லுறவள் வாசுகியக்காவோடை நிண்டு படமெடுக்கவேணும் எண்டு.”

“அது சரி நீங்கள் ஏன் மாமி அங்கை போகாம இஞ்ச நிக்கிறியள்?” வாசுகி இழுத்தடிக்காமல் தன் சந்தேகத்தைக் கேட்டு விட்டாள்.

புவனம் மாமியின் கண்கள் கலங்கியது. “இல்லைப் பிள்ளை ஒரு நல்ல நாள் பெரு நாள்ளை, அதுவும் வாழுற வயசிலை ஒரு பிள்ளைக்கு நடக்கிற நல்ல காரியத்திலை நான் என்னண்டு பிள்ளை முன்னுக்குப்போய் நிக்கிறது?”

“என்ன மாமி நீங்கள் சொல்லுறது விளங்கேல்லை? ஏன் உங்களுக்கு என்ன நடந்தது?”

“நீ குழந்தைப் பிள்ளை ஒன்றும் விளங்காது. நான் புருசனைச் சாகக் குடுத்தனான். உந்த நல்ல காரியங்களுக்கு முன்னாலை போய் நிக்கக் கூடாது. நாளைக்கு அவளுக்கொண்டெண்டா என்னாலை தாங்கேலாது. சனம் என்னைத்தான் திட்டும்.”

“ஏன் மாமா செத்ததுக்கும் காவேரியின்டை சாமத்தியச்

www.padippakam.com



ஓடத்தான் செய்தாள். இப்பொழுது அவள் ஓரளவு தூரம் விழாமல் ஓடுவாள்.

மாசிமாதம் ஊர்க் கோயிலில் திருவிழா தொடங்கியது. இந்த நாட்டில் அமைதி நிலவுவதே அரிது. எப்போது பார்த்தாலும் குழப்பங்கள், கலவரங்கள், சூட்டுச்சத்தங்கள், ஷெல் அதிர்வுகள், மரண ஓலங்கள். இத்தகைய ஒரு நாட்டில் எப்படியோ ஒரு அமைதியான சூழ்நிலையில் கோவிலில் திருவிழா தொடங்குகிறதென்றால் சனங்களின் குதூகலத்திற்கு கேட்கவா வேண்டும்? பக்தியினாலோ பகட்டுக்காகவோ என்னவோ ஊர்ச்சனங்கள் அள்ளு கொள்ளையாக கோவிலை நோக்கிப் படையெடுத்தனர். சிறுவர்கள் பாடசாலைக்குப் போகாமல் கோவிலையே சுற்றிச் சுற்றி வந்தார்கள். காப்புக் கடைகளும் கடலைக்கடைகளும் வேறு விற்பனை நிலையங்களும் கோயிலைச் சுற்றி முளைத்தன. பெண்களோ பட்டுப்புடவை சரசரக்க கை, கழுத்தெல்லாம் நகையணிந்து காலையும் மாலையும் கோயிலுக்குச் சென்றார்கள்.

வாசுகி ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்றாள். இரவிலும் அவள் கோயிலுக்குப் போவதில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. அக்காவோ ஒவ்வொரு நாளும் இரவில் தவறாமல் கோயிலுக்குச் சென்றாள். சில நாட்கள் பாடசாலையை நிறுத்தி விட்டு பகலிலும் சென்று வந்தாள். அக்கா ஒவ்வொரு நாளும் விரதம் இருந்தாள். தினமும் நேரத்தோடு சமைத்துவிட்டு அம்மாவும் கோயிலுக்குப் போனாள். கோயிலில் அம்மா அடுக்களைக்குத் தேவையான புதிய புதிய பாத்திரங்கள் எல்லாம் வாங்கி வந்தாள்.

பன்னிரண்டாம் நாள் தேர்த்திருவிழா. அக்கா காலையிலேயே எழுந்து முழுகினாள். அம்மா வாசுகியையும் எவ்வளவோ வற்புறுத்தினாள். அவளோ நேற்றுக் குளித்ததாகக் கூறி குளிக்க மறுத்துவிட்டாள். வாசுகி அம்மாவின் திட்டுத் தாளாது முழுப்பாவாடை சட்டை அணிந்தாள். அக்கா சேலைகட்டினாள். அன்றுதான் அவள் முதன் முதலாக சேலை கட்டிக்கொண்டு வெளியே செல்லப்போகிறாள். அதிகமாகவே



படிப்பகம்

www.padippakam.com



வெட்கப்பட்டாள். ஆரம்பத்தில் அம்மாதான் சேலை கட்டி விடுவதாக இருந்தது. ஆனால் அக்காவுக்கு அது திருப்தி இல்லாததாக இருந்திருக்க வேண்டும். அடிக்கடி முகத்தைச் சுழித்தாள். சிக்....சிக் என்று அம்மாவை ஏசினாள். அரையுங் குறையுமாகக் கட்டப்பட்ட சேலையை அள்ளிக்கொண்டு அந்த அறைக்கும் இந்த அறைக்கும் ஓடினாள். கடைசியில் அம்மா கலா அக்காவைக் கூட்டிக் கொண்டுவரப் போனாள்....

வாசுகியின் வீட்டிற்குக் கிழக்குப்புறமாக இரண்டு வீடுகள் தள்ளி இருந்தது கலா அக்காவின் வீடு. இந்த ஊரில் நடைபெறும் பெரும்பாலான திருமண வைபவங்கள் கொண்டாட்டங்களின் போது பெண்களை அலங்கரிக்க எல்லோரும் கலாஅக்காவைத்தான் அழைப்பார்கள். கலாஅக்காவிற்கு இப்போது இருபத்தொன்பது வயதாகிறது. ஆனால் இன்னமும் திருமணமாகவில்லை. அவரின் இரண்டு தங்கைகள் திருமணம் செய்துகொண்டு விட்டார்கள். தாய் இல்லை. வயதுபோன தந்தையோடும் ஒரு தம்பியோடும்தான் வீட்டில் இருக்கிறார். கைவேலைகள் நன்றாகச் செய்வார். எல்லாவற்றிலுமே கெட்டிக்காரிதான்.

கலாஅக்காவின் ஒரு அண்ணா திருமணமாகி ஜெர்மனியில் இருக்கிறான். இவாவை அங்கே வரும்படி எவ்வளவோ வற்புறுத்தினார். இவா மறுத்துவிட்டா. வேறு ஒரு அக்கா, ஒரு அண்ணா கல்யாணம் முடித்து ஊரோடு இருக்கிறார்கள். கலாஅக்காவிற்கு பல தடவை திருமணம் பேசி வந்தது. சிலர் பெண்ணைக்கூட வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். ஆனால் கல்யாணம் நடக்கவில்லை. கலாஅக்காவிற்கு ஆஸ்த்மா நோய் இருக்கிறது. ஆஸ்த்மா நோயுள்ள பெண்ணைத் திருமணம் செய்யக் கூடாதாம் சீ..... என்ன மனிதர்கள். பெண்களில் எவ்வளவு நுட்பமாகப் பிழைபிடிக்கிறார்கள்.

அம்மாவுக்கோ குசினிக்குள் இருப்புக் கொள்ளவில்லை. அக்காவுக்கு சேலை கட்டுவதை அடிக்கடி வந்து பார்த்தாள். இப்படிச் செருகு, அப்படி இழு என்றாள். அக்கா ஏசினாள்.



படிப்பகம்

www.padippakam.com



கலாஅக்கா சிரித்தா. அம்மா அவசர அவசரமாகப் போய் பக்கத்து வீட்டில் பிறேமாவிடம் கட்டும்படி கொடுத்திருந்த கனகாம்பர மாலையை வாங்கி வந்தாள். அக்காவின் தலையில் வைத்து அழகு பார்த்தாள். கலாஅக்கா அதனை வாங்கி சீராக வைத்தாள். அதற்கிடையில் குசினியில் ஏதோ எரிந்து மணக்கவே அம்மா எல்லாவற்றையும் விலக்கிக் கொண்டு அங்கே ஓடினாள். ஒருவாறு அக்காவுக்கு சேலைகட்டி முடிந்தது.

அடுப்படிக்குள் இருந்தபடி அம்மா எட்டிப் பாத்தாள். அம்மாவின் முகத்தில் ஆனந்தம் பொங்கியது. ஒரு சோடி காப்பும் ஒரு சங்கிலியும் கொண்டு வந்து வாசுகியிடம் கொடுத்தாள் அம்மா. வாசுகி துண்டாக மறுத்தாள். அம்மா கெஞ்சிப்பார்த்தாள். பின் ஆத்திரத்தில் கத்தினாள். அக்காவிடம் காப்பைக் கொடுத்தாள். அக்கா இப்போது இரண்டு சோடி காப்பும் அட்டியலும் அணிந்திருக்கிறாள். அக்கா கண்ணுக்கு மை பூசினாள். உதட்டுக்கும் சாயம் பூசினாள். அவளைப்பார்க்க அழகாகத்தான் இருந்தது. அதற்காக இப்படியெல்லாம் செய்யவேண்டுமென்றில்லை. அம்மாவுக்கு அக்காவைப் பிடித்தது. வாசுகியைப் பார்த்த போதுதான் முறைத்தாள். புறுபுறுத்தாள். “பார் பார் அது போற கோலத்தை, ஒண்டுக்கும் வழியில்லாததுகள் மாதிரி மூளி மாதிரி வெறுங் கழுத்தோடை போகுது....”

அம்மா பேசிக் கொண்டிருக்கும் போதே மாமி வந்தாள். இந்த மாமியோடுதான் அக்கா தினமும் கோயிலுக்குப் போவாள். இப்போதும் அதற்காகத்தான் வந்திருக்கிறாள். மாமியும் மிகவும் ஆடம்பரமாகத்தான் வந்திருந்தாள். அம்மா மாமியிடம் வாசுகியைப் பற்றிக் கூறினாள். வாசுகிக்கோ ஆத்திரம் எல்லை மீறியது. எல்லாவற்றையும் கழட்டி எறிந்துவிட்டு கோவிலுக்குப் போகாமல் நிற்க நினைத்தாள்.

“ஏன் பிள்ளை வெளிக்கிட்டா வாவன்; நேரமெல்லே போகுது.” மாமி அக்காவை அழைக்கவே வேறு வழியில்லாமல் வாசுகியும் பின்தொடர்ந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com



கோயிலில் கடலலை போலச் சனம் திரண்டிருந்தது. உள்வீதி, வெளிவீதி எங்கும் ஒரே சனக்கூட்டம். ஒற்றைக்காலைத் தூக்கினால் திரும்ப வைக்கமுடியாது. அவ்வளவு நெரிசல். அத்தோடு ஒலிபெருக்கியின் அநாவசியமான சத்தமும் சேர்ந்து வெறுப்பை ஏற்படுத்தியது.

மத்தியானம் 11 மணியளவில் சுவாமி சுற்றி முடிந்து தேர் வாசலடிக்கு வந்தது. 2 மணிக்குத்தான் சுவாமியைத் தேரிலிருந்து இறக்குவார்களாம். ஒலிபெருக்கி அலறியது.

"மாமி நாங்கள் போட்டு பிறகு வருவமே சுவாமி இறக்கிறது பார்க்க?" அக்கா மாமியைக் கேட்டாள். மாமியும் அதற்கு ஒப்புக்கொண்டாள். வாசுகிக்கு அப்பாடா என்றிருந்தது. அக்கா ஏதோ சாமான்கள் வாங்கக் கடைக்கு வரும்படி அழைத்தாள். முதலில் ஐஸ்பழம் குடிப்பதற்காக வானடிக்குச் சென்றார்கள்.

ஐஸ்பழ வானைச் சுற்றி ஒரே சனக்கூட்டம். சிறுவர்களோடு பெரியவர்களும் போட்டி போட்டுக் கொண்டு நின்றார்கள். வானடியில் நின்று ஐஸ்கிறீம் குடித்துக் கொண்டிருந்த நான்கைந்து இளைஞர்கள் இவர்களையே பார்த்தார்கள். உஹூம் அக்காவைப் பார்த்தார்கள். அக்கா பேசாமல் நடந்து வந்து கொண்டிருந்தாள்.

வானுக்குச் சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டு மாமி ஐஸ்கிறீம் வாங்கி வரும்படி வாசுகியை அனுப்பினாள். வாசுகி வாங்குவதைக் கண்ட அந்த இளைஞர்களில் ஒருவன் தானும் வந்து வாங்கினான். ஐஸ்பழத்தில் ஒன்றை வாசுகியிடம் நீட்டி "ம்.... இதை அக்காட்டைக் குடுங்கோ" என்றான். வாசுகிக்குச் சுரீரென்றது. "இவனேன் இப்படிச் செய்கிறான்? ஒருவேளை அக்காவைத் தெரியுமோ? அப்படியானால் நேராகப் போய் அக்காவிடம் கொடுக்க வேண்டியதுதானே?"

"என்ன யோசிக்கிறியள் உங்கடை அக்காதானே அவா?" அவன் மீண்டும் கேட்டான். "பின்னேரமும் வருவியளே?" வாசுகிக்கு அவன் கேள்விகள் சந்தேகத்தை உண்டு பண்ணியது.

www.padippakam.com



உடன்பட்டாள்.

சீதனத்தைப் பற்றிப் பேச்செழுந்தது. முதலில் அவர்கள் சீதனத்தை விரும்பவில்லை. திருமணம் நடந்தால் சரி என்றார்கள். மாப்பிள்ளைக்குப் பொறுப்புக்கள் எதுவும் இல்லை தாயும் தகப்பனும் தான். அம்மாவிற்கோ அக்காவைச் சும்மா அனுப்ப இஷ்டமில்லை. அவளை அவர்கள் துன்புறுத்தலாம் என நினைத்தாளோ என்னவோ? அக்காவிற்கென வைத்திருந்த எல்லாவற்றையும் கொடுக்கத்தான் செய்தாள். "வாசுகிக்குப் பிறகு பாக்கலாம்." என்றாள்.

திருமணம் முடிந்ததும் அக்கா அத்தான் வீட்டில் தான் இருந்தாள். சிறிது நாட்களில் கனடா போய் விடுவார்கள் என்பதால் அங்கேயே தங்கியிருக்கும்படி மாமி வற்புறுத்தியிருந்தார். அக்கா அடிக்கடி வீட்டிற்கு வந்து போனாள். அவளின் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட நிலையில் திருமணம் நடந்திருந்தாலும் சந்தோஷமாகத்தான் இருந்தாள்.

ஒரு மாதம் ஓடியிருக்கும். ஒருநாள் அக்கா வீட்டிற்கு வந்திருந்தாள். நீண்ட நேரமாக அம்மாவோடு கதைத்தாள். அவள் போன பின்னர் அம்மா எதையோ நினைத்துக் குறைபட்டுக் கொள்கிறாள் என்பது தெரிந்தது. விசாரித்த போது "இப்போது கனடாவுக்கு அக்காவைக் கூட்டிச் செல்லமுடியாதாம். அத்தான் மட்டும்தான் போக முடியுமாம். அதனால் அத்தான் போய் இரண்டு மூன்று மாதம் கழித்து அக்காவைக் கூப்பிடுவதாகக் கூறியிருக்கிறாராம்'' என்று பின்னர் தெரிந்தது. இதன் பின்னரும் அக்கா இரண்டு மூன்று தடவை வந்து போனாள். ஆனால் முன்னரைப் போல் சந்தோஷம் இல்லை.

காலை 7 மணியிருக்கும். வாசுகி அவசர அவசரமாகச் சமைத்துக் கொண்டிருந்தாள். பாடசாலைக்குச் செல்வதற்கு முன் வாசுகி சமைத்துவிட்டுப் போவதுதான் இப்போது வழக்கமாகி விட்டது. அம்மாவுக்கு முதுகுப்பிடிப்பு; அவளால் காலையில் எழுந்திருக்க முடியாது. அப்பாவும் கொஞ்சம்

முன்னர்தான் எழுந்து முகம் கழுவிக்கொண்டு வந்திருந்தார். வாசலில் ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அப்பா தான் எழுந்து சென்றார். அத்தானின் பெரியண்ணாவும் வேறு இருவரும் வந்திருந்தார்கள். அப்பாவோடு கதைத்தார்கள். அவர்களின் பேச்சில் பதட்டம் இருந்தது. அம்மா அவசர அவசரமாகக் கிணற்றடிக்குப் போனாள். வாசுகியால் போக முடியவில்லை. அடுப்பில் கறி கொதித்துக்கொண்டிருந்தது. வாசுகி யன்னலுக்கூடாகப் பார்த்தாள். "என்டை ஐயோ...ஓ...ஓ.." அம்மா திடீரென்று குளறினாள். தலையிலடித்துக் கத்தினாள். வாசுகிக்கு கைகால் எல்லாம் தன்னையறியாமலே நடுங்கத்தொடங்கியது. கறியை அப்படியே விட்டு விட்டு கேற்றடிக்கு ஓடினாள். அப்பா அழுதழுது அம்மாவைக் காரில் ஏறும்படி அவசரப்படுத்திக் கொண்டிருந்தார். அம்மா வாசுகியைக் கண்டதும் காரோடு தலையை மோதிக்கத்தினாள்.

"என்டை ஐயோ... எடி வாசுகி கொக்கா மருந்து குடிச்சிட்டாளாம். ஐயோ! நான் இனி என்ன செய்ய? நான் இனி ஏன் இருப்பான்?..... எனக்கும் மருந்தைத் தாங்கோடி."

அம்மா அழுததற்கான காரணம் இவ்வளவு பயங்கரமாக இருக்குமென்று வாசுகி நினைக்கவேயில்லை. முன்னால் ஒரு இடி விழுந்து தாக்கியது போல் விறைத்துப் போய் நின்றாள். தனது உடலின் எந்த ஒரு பகுதியும் இயங்குவதாக வாசுகிக்குத் தோன்றவில்லை. சிலையாக நின்றாள்.

அத்தானின் அண்ணா வாசுகியிடம் வந்தார். நடந்த சம்பவத்தை விபரமாக விளக்கிக் கூறினார். கனவில் போல கேட்டுக் கொண்டிருந்தாள் வாசுகி. அதன்பின்னர் அத்தான் அவசரமாய்ப் போய்க் காரில் ஏற கார் விரைந்தது. நடந்து முடிந்த எவற்றையுமே வாசுகியால் ஜீரணிக்க முடியவில்லை.

"அப்போ அக்கா உண்மையிலேயே செத்துத்தான் போனாளா....? ஐயோ இதை எப்படித்தான் அம்மா தாங்கப் போகிறா? அக்கா, நீ ஏன் அக்கா இப்படிச் செய்தனி? நல்லாத்தானே இருந்தனி. சந்தோஷமாத்தானே வந்து போனனி. நஞ்சு குடிச்சு உயிரை விடுற அளவுக்கு அப்பிடி உனக்கு

www.padippakam.com



இருந்திருக்கலாம்' சுமதி கேள்விகேட்ட மாணவியை மனதுக்குள் திட்டினாள்.

ஆசிரியர் தேய்ந்துபோன "சோக்" கட்டியை மேசைமீது வைத்தார். அசடுவழியும் புன்சிரிப்போடு அவசரமாக தலையை ஆட்டிவிட்டு நகர்ந்தார்.... எப்போதுமே வகுப்பை முடிக்கும்போது இப்படித்தான் சிரிப்பார். 'இவ்வளவு நேரமும் தொந்தரவு செய்ததற்கு மன்னித்துவிடுங்கள்' என்பது போலிருக்கும் அந்தச் சிரிப்பு.

சுமதிக்கு இப்போதுதான் அப்பாடா என்றிருந்தது. நிம்மதியாக மூச்சுவிட்டாள். மாணவர்கள் நெருக்கியடித்துக் கொண்டு வெளியே செல்லத் துடித்தார்கள். என்னதான் வகுப்பில் அமைதியாக இருந்தாலும் எப்போது வகுப்பு முடிந்து வெளியே செல்வோம் என்பதில்தான் எல்லோரும் குறியாய் இருந்துள்ளார்கள் என்பது, அவர்களின் நடத்தையில் இருந்து தெரிந்தது.

சுமதிக்கு தனித்து வீடுசெல்லவேண்டியதை நினைக்க என்னவோ போல் இருந்தது.

'விசர்..... ஏன்தான் வராம விட்டுதுகளோ தெரியாது...' மேகலாவும் சுதாவும் வராதது வகுப்பிற்கு வந்தபின்தான் சுமதிக்குத் தெரிந்தது. ஆத்திரமாய் வந்தது.

'விசருகள் நேற்றே சொல்லியிருந்ததுகள் எண்டா நானும் நிண்டிருப்பன்.... அந்த நாயளுக்கை அரியண்டப்படுகிறதைவிடப் பேசாம வீட்டில நிற்கலாம்.' அந்தக் கண்ணாடிக்காரத் தடியனை நினைக்கவே பயமாக இருந்தது. 'அந்த நாயள் இருக்கிறவரைக்கும் மனிசருக்கு நிம்மதியே இல்லை... பாமினி, நித்தியாக்கள் அதாலதானே போறவை. இனி என்னேயிறது....! அதுகளோட இவ்வளவு நாளா அவ்வளவாக் கதைக்கிறதும் இல்லை. இண்டைக்கு போக என்ன நினைக்குதுகளோ தெரியாது. இதில நினைக்கிறதுக்கு என்ன கிடக்கு. எனக்கென்ன அவையோட அடிபிடி சண்டையே.... கதைக்கிறதுக்கும் ஏதும் அலுவல் இருந்தாத்தானே



படிப்பகம்

www.padippakam.com



கதைக்கிறதுக்கு.'

நித்தியா ஆசிரியருடன் ஏதோ கதைத்துக்கொண்டு நின்றாள். பாடத்திற்கு விளக்கமாக இருக்கும்.... சுமதிக்கோ அவர்களுக்காகக் காத்திருப்பது வெறுப்பாக இருந்தது.

'வருகுதுகள்.... வருகுதுகள். எங்கேயோ ஒரு குருகுருத்த கோஸ்டி, எங்க கூட்டுச் சேர்ந்ததுகளோ தெரியாது. ரோட்டில அல்லோ பார்க்கவேணும். காய்....கூய் எண்டு முந்திக்கொண்டு போற வாற வாகனங்களுக்கும் சைட்குடுக்காமல்.... சிக் உதுகளோடை போனா எனக்கும் மரியாதை இல்லை.... இனி என்னேயிறது போய்த்தானே ஆகவேணும்.'

சுமதிக்கு எப்போதும் அவர்களிடம் ஓர் அந்நியப்பட்ட உணர்வே இருந்து வந்தது. "என்ன சுமதி இண்டைக்கு 'பிறென்ஸ்'ஐக் காணேல்ல. தனிச்சுப் போனீர்...." பாமினி இயல்பாகத்தான் கேட்டாள்.... சுமதிக்கு என்னவோ போல் இருந்தது.

"ஓமோம். என்ன நடந்ததெண்டு தெரியேல்லை. இரண்டுபேரும் நிண்டிட்டினம்.... நீங்கள் நேரை வீட்டைதானே போறியள்...?"

தயங்கியபடி சிரிப்பை வரவழைத்துக்கொண்டு நாசூக்காகக் கேட்டாள் சுமதி. "இவள் நித்தியா ஏதோ துணி எடுக்கவேணும் எண்டாள்.... என்ன நித்தியா எனக்கெண்டா ஒரே பசியாக் கிடக்குது. நாளைக்கு ஈவினிங் நீயும் நானும் வந்து எடுப்பமன்.... என்ன முழியைப் பிரட்டுறாய் சொல்லன்...."

"என்னவோ நீ சொல்லுறாய்.... சரி நாளைக்கு எடுப்பம். பிறகேன் நிக்கிறியள்...." 'அப்பாடா இவள் ஓமண்டதே பெரிய புண்ணியம். இல்லாட்டி நானும் டவுன் முழுக்க உதுகளுக்கு பின்னாலை வாய் பார்த்துக்கொண்டு திரிஞ்சிருக்க வேணும்'. யார்தான் கூட வந்தாலும் அந்தக் காம்படியால் போகவேண்டும் என்ற நினைப்பே, சுமதிக்கு நரக வேதனையாய் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



'கடவுளே அவங்கட காம்பத் தாண்டிப் போறவரைக்கும் நீதான் துணை..... இண்டைக்கு அந்தச் சனியன் பிடிச்சவன் என்னேயிறானோ தெரியேல்லை.... என்னை மட்டும் தனியா மறிச்சானெண்டா என்னேயிறது... வாடி என்று உள்ளுக்கை இழுத்துக்கொண்டு போனால்.....? உங்க எத்தனை பேரை அப்படிச் செய்தவங்கள்.... கடவுளே.... அப்படி மட்டும் ஒண்டும் நடக்கக் கூடாது.'

சுமதிக்கு காம்பை நெருங்க நெருங்க அடிவயிற்றில் ஏதோ செய்தது. 'கடவுளே எனக்கேன் இப்படி வேர்க்குது... கை, கால் எல்லாம் நடுங்குது.... பயமாக்கிடக்கு நான் என்ன செய்ய.... எவ்வளவு நேரத்திற்குத் தான் தலையைக் குனிஞ்சுகொண்டு போறது.... பார் ....பார்.... தரித்திரத்திண்டை பல்லை. எப்ப நிமிருவனெண்டு பார்த்துக்கொண்டிருந்தவனாக்கும்.'

இவளைப் பார்த்துப் பல்லை இளித்த இந்திய இராணுவத்தினன் யாரையோ கத்திக் கூப்பிட்டபடி உள்ளே ஓடினான். ஒரு பெரிய கூட்டமே உள்ளேயிருந்து ஓடிவந்தது. கண்ணாடிக்காரனும் இன்னும் நாலைந்து பேரும் வந்தார்கள். "சுமதி... சுமதி... சுமதி நில்லடி"

'சனியன் சனியன் பேரைச் சொல்லி கூப்பிடுறான்.... ஐயோ அவளவையளும் போறாளவை. நான் என்ன செய்ய? இன்னும் நாலஞ்சு பேர் வாறாங்கள்....'

கண்ணாடி போட்டவன் ஓடிவந்து சைக்கிள் கான்டிலைப் பிடித்துக்கொண்டான். சுமதி விழப் போனாள்.... விழவில்லை.... அழுகை வெடித்துக்கொண்டு வந்தது. மறுபக்கம் பார்வையைத் திருப்பிக்கொண்டாள்.

"என்னடி நான் கூப்பிடுறன்.... நீ உன்டை பாட்டிலை திரும்பியும் பார்க்காம போறே என்ன....?"

'பாவி கான்டில்லை கையைப் போட்டுக்கொண்டு நிற்கிறானே. சனம் பார்த்தா என்னைப் பற்றி என்ன நினைக்கப் போகுது.' சுமதிக்குப் பயம் மாறி ஆத்திரம் வந்தது.



படிப்பகம்

www.padippakam.com



“என்னடி நான் கதைக்கிறன். நீ பேசாம நிக்கிறாய். L.T.T. காரங்கள் எண்டா ஒழிச்சு ஒழிச்சு சாப்பாடு கொடுப்பியள் என்னடி?”

‘உன்டை லச்சணத்திற்கு நாங்கள் கதைக்காதது ஒன்றுதானே குறை. எளிய மூதேசி. நீயும் ஒரு தமிழனே! இல்லாட்டி நடு றோட்டில ஒரு பொம்பிளைப் பிள்ளையை மறிச்சு வைச்சு சேட்டை விடுவியே.... அங்கர் இந்தியாக்காரங்கள் முழுப்பேரும் இஞ்சதானே பார்த்துச் சிரிக்கிறாங்கள். உன்ரை கொக்கா தங்கச்சியை நடுரோட்டிலை ஆரும் மறிச்சு வைச்சிருந்தா உனக்குப் பார்க்க எப்படி இருக்கும்... சிக்... மனிசரெண்டாவல்லவோ அதை யோசிக்கிறதுக்கு’

“என்னடி முறைக்கிறாய்? ஊமையே. வாயைத் திறந்து கதையன்... ஏதோ இன்டைக்குத்தான் புதுசாக் கதைக்கிற மாதிரி வெக்கப்படுகிறாய்....”

‘இனியும் ஏன் நாங்கள் உவங்களுக்குப் பயப்பிட வேணும். நாங்கள் அழ அழத்தான் அவரவைக்கு செட்டு வாறது.

ஏதோ தாங்கள் சரித்திரம் படைக்கப்போற மன்மதக் குஞ்சுகள் எண்டு நினைப்புப் போல. சனமா வெளிக்கிட்டு உவங்களை கட்டிவைச்சு உரிக்கவேணும். அப்பதான் நாங்கள் மனிசரா வாழலாம்.’

“டேய் எடடா கையை ராஸ்கல். காண்டில்ல இருந்து எடுக்கப்போறியோ இல்லையோ.” ஆத்திரத்தின் எல்லையில் சுமதி வாய்திறந்து கத்தினாள் அடுத்த கணம்.

ஏற்கனவே சிவந்திருந்த கண்ணாடிக்காரனின் கண்கள் மேலும் சிவப்பாக, பளீர்... பளீர்... என சுமதியின் கன்னத்தில் மாறி மாறி அறைந்தான்.... தலைமுடியைப் பிடித்து முகத்தைத் தன்பக்கம் திருப்பினான்.

“நல்லாத்தாண்டி கொழுத்துப் போனியள்....எனக்கே வாய் காட்டுகிறாய் என்னடி.....எளிய...ஏதும் கதைச்சியெண்டால்



படிப்பகம்

www.padippakam.com



வெட்டி புதைச்சுப் போடுவன்...க்கு என்னைப் பற்றி விளங்கேல்லை".

சுமதிக்கு கண்ணை மின்னி தலை சுற்றியது. கன்னங்கள் இரண்டும் விண்விண் என்று வலியெடுக்க தலை விறைத்துக்கொண்டு வந்தது.

"கடவுளே.... ஏ...என்ன மாதிரி அடிச்சான். ஒரு அடியிலையே உயிர் போயிடும் போல கிடக்கு. போனால் போகட்டும் உரிச்சுப் போட்டாலும் உவங்களை சும்மா விடக்கூடாது. தூ...... நாய்க்கூட்டம். எளிய வடுவாக்கள். எத்தினை நாளைக்கு உதில இருக்கப் போறியள் பார்ப்பம்."

எள்ளும் கொள்ளும் வெடிக்கும் அவன் முகத்தைப் பார்க்க சுமதிக்கு மூச்சுத் திணறியது. தட்டுத்தடுமாறி சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாக இடத்தை விட்டுப் புறப்பட்டாள். பின்னால் அவன் கெட்ட வார்த்தைகளால் திட்டுவது கேட்டது.

"சிவனே....உவனிட்டைத் தப்பினது அருந்தப்பு. ஒரு அடிதான்....விறைச்சுப் போனன்.....நல்ல காலம் உதோட விட்டான். இல்லாட்டிக்கு ஏதோ பண்ணிப் போடுவாரே.....? உவையள் ஒவ்வொரு நாளும் போகவரச் சொல்லுவினம் நெடுகப் பார்த்துக் கொண்டு இருக்க ஏலுமே......அது சரி நான் இனி என்னண்டு ரியுசனுக்குப் போறது. இந்தப் பாதையால போறதெண்டா இனி நடவாத காரியம்......சரியான கறள் வச்சுக் கொண்டுதான் இருப்பான்...... நல்லா இருக்கட்டும் நான் ரியுசனுக்கு போகாம விடுவன்."

சுமதிக்கு இனி ரியுசனுக்கு போக முடியாததை நினைக்க அழுகை அழுகையாக வந்தது. பாமினியை நினைக்க ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"என்ன இருந்தாலும் அவள் தன்ரை குணத்தைக் காட்டிப்போட்டாள். பயம் எண்டா கொஞ்சம் தள்ளிப்போய் என்றாலும் நின்றிருக்கலாம்தானே. தப்பினம் பிழைச்சம் எண்டு ஓடி விட்டாளவை. சீ.... அவளவையிலையும் பிழை

www.padippakam.com



சொல்லேலாது. உந்த இடத்தில் இருந்தா ஒருவேளை நானும் உதைத்தான் செய்வன்"

ஒழுங்கைக்குள் சுமதியைக் கண்டவர்கள் ஊடுருவல் பார்வையுடன் ஒரு மாதிரியாகப் பார்த்துக்கொண்டு சென்றார்கள்.

"ஒரு வேளை இவைக்கு தெரிஞ்சிட்டுதோ.....சீ என்னண்டு தெரியும் அதுக்கிடேல. தெரிஞ்சாத் தெரியட்டும். அதுக்கு இவைக்கு என்ன? அங்க..... அய்யா வாறார் பாவம். இந்த வெய்யிலுக்கை எங்கை போறாரோ தெரியேல்ல. மணியத்தார் வட்டிக்காசு குடுக்க வேணுமாக்கும். அதுக்குத் தானோ தெரியேல்ல."

"அவனவன் பரம்பரைக் காசை வட்டிக்கு குடுத்திட்டு பெடியளையும் வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு மகாராசா மாதிரி வீட்டில இருக்கிறாங்கள். நாங்கள் நாள் முழுக்க உழைச்சு அதையும் அவையளிட்டைக் குடுத்துப்போட்டு இப்பிடியே சாக வேண்டியதுதான்."

"சைக்கிளை சிலோ பண்ணிறார். ஏதும் கேக்கப் போறாரோ...சீ.... அங்கை விளக்கிறார். எதுக்கும் எங்கை போறார் என்று கேப்பம்."

"ஐயா......! எங்கை போறியள்.........?"

"ஐயான்ரை முன்பல்லு அண்டைக்கு விழுந்தது. முகத்தைப் பார்க்க என்னவோ போல் கிடக்கு..... கொடுப்புப்பல்லு விழேக்கை அவ்வளவு தெரியேல்ல."

"நான்..... உங்கை சங்கத்தில உரம் வந்திருக்காம். அதுதான் ஒருக்கா பதிஞ்சு போட்டு வருவம் எண்டு வெளிக்கிட்டனான். இண்டைக்கு சனிக்கிழமை அவங்கள் இரண்டு மணி எண்டால் பூட்டிப் போடுவாங்கள்"

"உனக்கு ரியுசன் முடிஞ்சுதே......"

"ஓ..... நான் இனிமேல் ரியுசனுக்கு போகேல்லை".

www.padippakam.com



சுமதியின் குரல் தளதளத்தது. கண்களில் இருந்து மளமளவென்று கண்ணீர் வடிந்தது. "ஏன்பிள்ளை.... ஏன் என்ன நடந்தது.... ஐயோ என்ன நடந்தது எண்டு சொல்லன்'' தந்தையின் பதைபதைப்பைக் கண்ட சுமதி தன்னைக் கட்டுப்படுத்த முயன்றாள்.

"இண்டைக்கும் அந்தக் கண்ணாடிக்காரன் காம்படியால வரேக்கை ஓடியாந்து சயிக்கிளைப் பிடிச்சிழுத்து நிப்பாட்டிப் போட்டான். பேரைச் சொல்லிக் கூப்பிடுகிறான், பார்க்கிற சனம் நினைக்கும் அவளும் விட்டுட்டுத் தானே நிக்கிறாளெண்டு."

''அழாதை, அழுது இப்ப என்னத்தைச் செய்யிறது. கொம்மா விடியவும் சொன்னவ அவளைக் கொண்டே கொஞ்சநாளைக்கு மானிப்பாயில் விடுங்கோ எண்டு. அவனை நீ ஒண்டும் பேசேல்லையே.....?"

''எனக்கு கோபம் வந்திட்டுது எடபுட எண்டு பேசிப்போட்டான். நடு ரோட்டில விட்டு.....

என்னை அடிச்சுப் போட்டான். நான் இனி அந்தப்பக்கம் போகமாட்டன்."

''சரி..... சரி..... அழாதை...... கவனமாக வீட்டை போ. எல்லாத்துக்கும் நான் வாறன்."

''ஐயா நீங்கள் அவங்கடை காம்படிப் பக்கம் போயிடாதேயுங்கோ. என்னிலை இருக்கிற ஆத்திரத்தில உங்களை ஏதும் செய்தாலும் செய்து போடுவாங்கள்."

"ஓமோம் நீ..... கவனமாப் போ....."

சுமதி கண்களைத் தேய்த்துத் துடைத்தாள்..... அவளின் உணர்வு வேகத்தையும் மீறிக் கொண்டு அந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. கண்ணீர் வருவதற்கு ஆயத்தமாக கண்கள் எரிந்தது. கண்களை இறுக மூடி கண்ணீரைக் கட்டுப்படுத்தினாள். நினைவுகளை விழுங்கிக் கொண்டு சைக்கிளைச் செலுத்தினாள்.



படிப்பகம்

www.padippakam.com



திடுக்குற்று விழித்த சுமதிக்கு தான் மேசையிலே தூங்கி விட்டதை நினைக்க வேதனையாக இருந்தது. விரித்துக் கிடந்த புத்தகத்தின் மீதே படுத்து விட்டதால் அதன் பக்கங்கள் சில கசங்கி மடிந்து கிடந்தன. மேசை சிறிதாக இருந்ததால் இரண்டு பேர் ஒரே நேரத்தில் உட்கார்ந்து படிக்க முடியாது. ஒரே ஒரு கதிரைதான் இருந்தது. சுமதியின் தம்பி ரூபன் ஒரு பெரிய மரப்பெட்டியின் மேல் புத்தகங்களைப் பரப்பிவைத்து விட்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். அவன் உட்கார்ந்திருந்த அந்தப் பழைய ஸ்டூலில் ஒரு காலின் கீழ்ப்பகுதி உடைந்திருந்ததால் ஆட்டங்காட்டிக் கொண்டிருந்தது. அடிக்கடி விழப்போனான்.

தங்கை சுகந்தி ஒரு பாயில் படுத்திருந்தபடி எதையோ பாடம் பண்ணிக் கொண்டிருந்தாள். இடையிடையே தலையைச் சரித்து இவளைப் பார்த்தாள். இவள் சிரித்தபோதும் அவள் சிரிக்கவில்லை. வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தாள். பின் மீண்டும் புத்தகத்தைப் பார்த்தாள்.

படிப்பதிலே கண்ணாய் இருப்பதால் சூழல் அசைவுகள் அவளைப் பாதிக்கவில்லை என்று சுமதி நினைத்துக் கொண்டாள்.

கணித பாடத்தில் ஏதோ கேள்விகேட்டு வந்த தம்பியை ஏசவும் மனமில்லாமல் ஏதோ சாக்குச் சொல்லித் திருப்பி அனுப்பினாள்.

தானும் வெறுமனே புத்தகத்தைத் திறந்து வைத்திருந்தாளே ஒழிய அவளால் படிக்க முடியவில்லை. இனிமேல் படிப்பு எவ்வளவு தூரம் சாத்தியப்படுமென்பதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

"சிக்..... இதிலை இருந்து கொட்டாவி விடுறதை விட பேசாமல் போய் படுக்கலாம்......இன்னும் 8 மணியே ஆகேல்ல. படுத்தா ஐயா என்ன நினைப்பார்? அம்மாக்கென்ன..... அவா சுகமாகச் சொல்லிப் போட்டா மானிப்பாயில் போய் நிக்கச் சொல்லி. இஞ்ச ரியுசனுக்கு போகாததால நான் படப்போற



படிப்பகம்

www.padippakam.com



பாடு அவவுக்குப் விளங்குமோ.....

இவ்வளவுக்கும் காரணமே அந்தக் கும்பல் என்பதை நினைக்கவே சுமதிக்குக் கோபம் கொதித்துக் கொண்டு வந்தது.

"எளியவங்கள் எத்தினை பேற்றை படிப்பை நாசமாக்கிறாங்கள்...... படிப்பென்ன வாழ்க்கையே நாசந்தானே..... உவங்கள் கடத்திக்கொண்டு போய் கலியாணங் கட்டினதுகளின்ர கெதி என்ன.... நாளைக்கு இந்தியாக்காரன் போக அவங்களும் ஓடி ஒழிச்சிடுவாங்கள். அதுகள் ஆத்தலய வேண்டியதுதான்."

"ஏன் பிள்ளை ஏதும் தலையிடி சுகமில்லை எண்டாப்போய்ப் படன். பிறகேன் உதில இருந்து யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்?"

"இவ்வளவு நேரமும் அம்மா என்னைக் கவனிச்சுக் கொண்டுதான் இருந்திருக்கிறா. அம்மாவும் பாவம். என்னை படிப்பிக்கவேணும் எண்டு எவ்வளவு ஆசைப்பட்டவா, என்னை விட அவாதான் இப்ப கூடக் கவலைப்படுவா."

"வா பிள்ளை வா. வந்து சாப்பிட்டிட்டுப் படு. காலமைக்கு எழும்பிப் படிக்கலாம். ரூபனையும் சாந்தியையும் வரச்சொல்லு."

அய்யா சாப்பிடும் போதே சுமதிக்கு கருவாட்டுக் குழம்பு வாசனை மூக்கைப் பிய்த்துக் கொண்டிருந்தது. சுமதியும் ரூபனும் சாப்பிடுவதற்காகப் போய் உட்கார்ந்தார்கள். அய்யா சாப்பிட்டுவிட்டு கையை அலம்பிக் கொண்டு வெளியே வந்தார். சுமதி அய்யாவின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவர் தீவிரமாக எதையோ சிந்தித்து வேதனைப்படுவது தெரிந்தது. அய்யா தன்னைப் பற்றித்தான் நினைப்பதாக சுமதிக்கு பட்டது.

சீ...... மனிசருக்கு இந்த நாட்டிலை நிம்மதியே இல்லாமல் போச்சு.

"என்ன பிள்ளை யோசிச்சுக் கொண்டிருக்கிறாய். சாப்பிடு!

www.padippakam.com



சாப்பிடு எதுக்கும் நீ கொஞ்ச நாளைக்கு மாமி வீட்டை போய் நில் பாப்பம். அதுக்குப் பிறகு அவங்கள் என்னேயப் போறாங்கள் எண்டு?"

"என்னம்மா.... நீ... அங்கை போய் நிண்டு கொண்டு என்னெண்டு நான் படிக்கிறது? சோதினைக்கே இன்னும் மூண்டு மாசந்தானே கிடக்கு"

"அதுக்கென்ன மோனை செய்யிறது. ஆரோ நினைச்சிருந்தவையே உந்தப் பத்தி எரிவாங்கள் திரும்பவும் அள்ளுப்பட்டு வருவாங்கள் எண்டு? வடக்கத்தையானிட்ட வேண்டித்திண்டு அவங்கள் விளை விளை எண்டு விளைஞ்சு போயிருக்கிறாங்கள். தங்கடை தமிழ்ச் சனமெண்டு பார்க்கிறாங்களே? ஆமிக்காரனை விட உவங்கடை அநியாயம்தானே தாங்கேலாமைக் கிடக்கு."

"அம்மா ஒழுங்கேக்கை காரொண்டு வந்து நிக்குதணை" சுகந்தியின் கதையைக் கேட்ட சுமதிக்கு என்னென்று தெரியாமலே மனம் திக் என்றது. "இதென்ன கோதாரி? இந்த நேரத்தில் இஞ்ச ஆர் வரப் போயினம்? அதுகும் காரிலை?" என்றபடி அம்மா எழுந்து நின்று முந்தானையை உதறிச் சரி செய்தாள்.

"எல்லாரும் இஞ்ச நிக்கிறியள். அங்கை வெளியாலை ஆர்? கொய்யா தனிய... எட ரூபன் நீ போடா கொப்பரடிக்கு" என்று கூறியபடி வெளியே வர முனைந்த அம்மாவை சுமதி தடுத்து நிறுத்தினாள்.

"ஐயோ அம்மா நீ இரு, வெளியாலை வராதை. நான் வாறன் என்னெண்டு பார்த்துக் கொண்டு.

"அது கார் இல்லை அம்மா, வான். துவக்கோடு நிறையப் பேர் வந்து நிக்கினம், அப்பாவை பிடிச்சு வச்சிருக்கினம்." சுகந்தி மீண்டும் பதட்டத்தோடு ஓடிவந்து மூச்சு வாங்கக் கூறினாள்.

"ஐயோ அவங்கள் தானோ தெரியாது. இண்டைக்குப்



படிப்பகம்

www.padippakam.com



பேசின ஆத்திரத்திலை வெளிக்கிட்டு வந்திட்டாங்களாக்கும். உப்பிடி இரவுகளிலை போய் பெட்டையளைப் பிடிச்சுக் கொண்டு போறவங்கள் எண்டு சனங் கதைக்கிறது. கடவுளே இண்டைக்கு என்ன நடக்கப் போகுதோ தெரியாது.”

சுமதிக்கு கால் நடுக்கமெடுத்தது. நிற்கவும் திராணியற்றது போல் இருந்தது. இதயம் நின்று விடப்போவது போல் வேகமாக அடித்தது. மெதுவாக நடந்து வந்து குசினிப் பின் கதவைத் திறந்தாள் வெளியே ஒரே இருட்டாக இருந்தது. மெதுவாக இறங்கி கிணற்றடிப் பக்கமாக சத்தமின்றி ஓடினாள். வேலிப் பொட்டுக்கால் ஒழுங்கை நீட்டுக்கும் ஓடினாள்..... தனபாலு மாமா வீட்டை போவதற்காக.

“கடவுளே நான் இஞ்சை வந்திட்டன். அங்கை என்ன நடக்குதோ தெரியாது. உங்கை 2, 3 இடத்தில தேப்பனைத் தானே கொண்டே அடிச்சுக் கொண்டு போட்டவங்கள். கடவுளே அப்பாக்கு மட்டும் அப்பிடி ஒண்டும் நடக்கக் கூடாது. அதைவிட நான் போய்ச் சாகலாம்.”

மூச்சுவாங்க ஓடிவந்த சுமதி தனபாலு மாமா வீட்டுக் கேற்றைத் தட்டினாள். நாய் ஒரேயடியாய்க் குலைத்தது. மாமாதான் வந்து கேற்றைத் திறந்தார். சுமதியைக் கண்டதும் தூக்கிவாரிப்போட்டது.

“ஏன் பிள்ளை ஏன்.... என்ன நடந்தது? ஆருக்கும் வருத்தமே? ஏன் இப்படி இளைக்க இளைக்க ஓடிவந்தனி?”

சுமதி பெரிய சத்தத்தோடு அழுதாள். குடும்பம் முழுவதுமே வாசலில் கூடிவிட்டது. சுமதியை உள்ளே கூட்டிப் போனார்கள். சுமதி அழுகையினூடே விசயத்தைக் கூறிமுடித்தாள்.

“ஐயோ! உந்தப் பத்தி எரிவார் அள்ளுப்பட்டு வந்தாங்கள்... ஒரு பொம்பிளைப்பிள்ளை மானம் மரியாதையோட வீட்டில இருக்க வழிஇல்லை. துலைவார் எப்பதான் துலைஞ்சு போவாங்களோ? பிள்ளையார் அப்புவே நீ தான் உவங்களைக் கேக்கவேணும்.”

www.padippakam.com



மாமி தன் இயலாமையைச் சொல்லிக் கத்தினாள்.

"நீ.... நீ.... நீ..... இப்பேன் உதில இருந்து ஓலம் பாடுறாய்.....அவள் சாப்பிட்டாளோ தெரியாது. கேட்டுக் கூட்டிக் கொண்டே சாப்பாட்டைக் குடு. பிள்ளை சுமதி நீ இஞ்சை இருந்து கொள். சும்மா ஒண்டுக்கும் யோசிக்காதை. நான் ஒருக்கா வீட்டுப்பக்கமாய் போய் என்ன நடக்குதெண்டு பார்த்துக் கொண்டுவாறன் என்ன?"

"இஞ்சே நீங்கள் என்னத்துக்கப்பா இப்ப அவசரப்பட்டு அங்கை ஓடுறியள். வந்தவங்கள் போட்டாங்களோ தெரியாது. எப்பனுக்கு நிண்டு பாத்துப் போங்கோவன்."

"சும்மா கத்தாம கிட. நான் இப்ப வந்திடுவன்." மாமா மாமியை அடக்கிவிட்டுப் புறப்பட்டார்.

"இஞ்சே மாமா ஏதும் பிரச்சனை எண்டா உடனே வந்து சொல்லுங்கோ." "ஓமோம். அதெல்லாம் நான் பார்க்கிறன்; நீ ஒண்டுக்கும் யோசிக்காதை."

அன்றிரவு முழுவதும் சுமதி தூங்கவே இல்லை முகத்தைத் தொங்கப் போட்டபடி மாமா வந்து கூறினார். "அப்பாவை ஏத்திக்கொண்டு போட்டாங்கள்" என்று. அவ்வளவுதான் சுமதி இரவு முழுவதும் அழுது கொண்டே இருந்தாள். வீட்டிற்குப் போக மாமா விடவில்லை - சிலவேளை அந்தக் கும்பல் இரவிலும் வரலாம் என்பதால்.

விடிந்ததும் சுமதி வீட்டிற்குப் போனாள். கூடவே மாமாவும் போனார்..... வீட்டிலே எல்லோருடைய முகத்தைப் பார்த்ததும் சுமதிக்கு விளங்கியது. இரவு முழுவதும் ஒருவரும் தூங்கவில்லை - அழுதிருக்கிறார்கள் என்று. அம்மா சுமதியைக் கண்டதும் பெரிதாக அழுதாள்.

"ஐயோ அந்தாளைக் கொண்டு போட்டாங்கள். இனி எல்லாரும் என்னேயப் போறியள்.....? நாங்கள் ஆருக்கு என்ன அநியாயம் செய்தநாங்கள்.... கடவுளே நீ ஏன் எங்களை இப்படிச் சோதிக்கிறாய்?" அம்மா சுமதியைப் பிடித்துக்



படிப்பகம்

கொண்டு அழுதாள். சுமதியும் அழுதாள்.

சுமதி நடந்த விசயங்களை அம்மாவைக் கேட்டாள். அம்மா சொன்னாள்.

வந்தவங்களில் ஒருவன் கண்ணாடி போட்டவன்; தாடி வளர்த்தவன், அப்பாவிடம் கேட்டிருக்கிறான் சுமதியைத் தான் விரும்புவதாகவும் தனக்கு அவளைக் கலியாணம் செய்து தரும்படியும். அப்பா சம்மதிக்கவில்லை. சுடுவேன் என்று கூறி மிரட்டிப் பார்த்திருக்கிறார்கள். ஊஹூம்.... அப்பா இசையவே இல்லை. நீங்கள் என்னைச் சுட்டாலும் பரவாயில்லை. அப்படியான ஒரு மோசமான வேலையை நான் கடைசி வரைக்கும் செய்யமாட்டேன் என்று, பிடிவாதமாக மறுத்து விட்டார். அவ்வளவுதான், அப்பாவை அடித்து வானில் ஏற்றிவிட்டு சுமதியை விசாரித்திருக்கிறார்கள். அவள் இங்கே இல்லை வேறு இடத்தில் என்று கூறவும், அம்மாவிடம் 'உனக்குப் புருஷன் வேணுமெண்டா நாளைக்கு மேளைக் கொண்டந்து தந்திட்டு புருசனைக் கூட்டிக் கொண்டுபோ' என்று கூறி இருக்கிறார்கள்.

சுமதிக்கோ, இவ்வளவு துன்பமும் வீட்டாருக்கு தன்னால்தானே ஏற்பட்டதென்று பட்டது. சுமதி வீட்டில் அன்று காலையில் அடுப்புக்கூட மூட்டவில்லை. எல்லாம் போட்டது போட்டபடி கிடக்கு. எல்லாரும் அவரவர் போக்கில் அழுது கொண்டும் யோசித்துக் கொண்டும் திரிந்தார்கள்.

தனபாலு மாமாதான் அம்மாவையும் கூட்டிக்கொண்டு காம்புக்குப் போனார். அம்மா எவ்வளவோ அழுது குளறி மன்றாடியும் அய்யாவைப் பார்க்க விடவில்லையாம். பின்னேரம் விட்டு விடுவதாகக் கூறி இருக்கிறார்கள்.

சோர்ந்து துவண்டுபோய் அம்மா வீட்டுக்கு வந்தாள். வீடோ செத்துவிட்டது போல் சோர்ந்து சோகமாய்க் கிடந்தது. அன்று முழுவதும் யாரும் சாப்பிடவில்லை. இடையிடையே தேநீர் மட்டும் குடித்தார்கள். அம்மா அதனையும் மறுத்தாள்.

www.padippakam.com



பின்னேரம் ஐயா வரவில்லை.... இரவு ஊஹூம்..... அப்போதும் வரவில்லை. அம்மா மீண்டும் அழத்தொடங்கி விட்டாள். சுமதிக்கோ அடுத்து என்ன செய்வதென்றே தெரியவில்லை.

விடிந்ததும் விடியாததுமாக மறுநாளும் அம்மா மாமாவையும் கூட்டிக்கொண்டு காம்புக்குப் போனாள். நீண்ட நேரமாயிற்று அவர்கள் வந்து சேர்ந்த போது. அப்போதும் அய்யா வரவில்லை. வந்ததும் வராததுமாக ஒப்பாரி சொல்லி அம்மா அழத் தொடங்கி விட்டாள். சுமதி மாமாவிடம் அய்யாவைப் பற்றி விசாரித்தாள்.

ஐயாவை நேற்றுப் பின்னேரம் விட்டுவிட்டார்களாம். மாமா சொன்னதைக் கேட்ட சுமதிக்குத் தூக்கிவாரிப் போட்டது. பயம் பற்றிக் கொண்டது ஒருவேளை. ஒருவேளை..... அப்பாவை அவர்கள் அடித்தே கொன்றுவிட்டார்களோ! ஊரில் இப்போது அப்படித்தானே நடக்கிறது. ஐயோ....ஓ....ஓ..... சுமதியும் அம்மாவோடு சேர்ந்து அழுதாள். எல்லோரும் அழுதார்கள். வீடே செத்தவீடுபோல் மாறிவிட்டது.

அன்று முழுவதும் காம்பும் வீடுமாக மாமா அலைந்தார். அடுத்த நாளுந்தான் அம்மா அழுதழுது எல்லாக் காம்புக்கும் சென்று விசாரித்தார். மாமா தனக்குத் தெரிந்தவர்கள் (சந்தைக் கும்பலுக்கு ஆதரவானவர்கள்) எல்லோரையும் கூட்டிச் சென்று விசாரித்தார். எல்லா இடத்திலும் விட்டுவிட்டதாகவே கூறினார்கள். அம்மா அழுதபோது அதட்டிப் பயமுறுத்தி விரட்டி அடித்தார்கள்.

சுமதிக்கோ இந்த உலகத்தில் வாழ்வதே வெறுத்தது. என்னால் தானே இவ்வளவும். இந்த நாசமாய்ப்போன உலகத்தில் இனியும் என்ன வாழ்க்கை வேண்டிக்கிடக்கிறது. மூன்று நாட்களாக அந்த வீட்டில் செத்த வீடு நடக்கிறது. இதயம் ஏற்றுக்கொள்ளாத செத்தவீடு. ஊர்ஜிதப்படுத்தப்படாத மரணம். உயிரோடு திரும்பக் கிடைக்கவேண்டும் என்ற அங்கலாய்ப்பு..... கிடைக்கும் என்ற அந்த நம்பிக்கை.

ஊரார் கூடி வந்து ஒப்புச் சொல்லி அழுதார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



அம்மாவும் அழுதாள். எல்லோரும் அழுதார்கள். ஆனால் செத்தவீடு ஒன்றைச் செய்துமுடிக்க அந்த வீட்டில் ஒருவருக்கும் உடன்பாடில்லை. வீட்டில் உறவினர்கள் வந்து நின்றார்கள். வீட்டைக் கூட அவர்கள்தான் நிர்வகித்தார்கள்.

நான்காம் நாள் காலை அம்மா முற்றத்தில் அழுதுகொண்டிருந்தாள். மாமா வந்தார். இன்றும், மேலிடத்தோடு தொடர்பு கொள்ள வேறு யாரையோ கூட்டிக்கொண்டு போவதாகக் கூறி இருந்தார். வந்தவர் கூறிய செய்தி அங்கிருந்த எல்லோரையுமே ஒரு கணம் அதிரவைத்தது. வீட்டுக்குக் கிழக்குப் புறமாகச் சற்றுத்தள்ளி ஒரு பாழுங்கிணறு, பெரும்பாலும் அந்தக் கிணற்றைச் சுற்றியுள்ள வீடுகளில் வசிப்பவர்கள் குப்பை கூழங்களையும் உடைந்த போத்திலோடுகளையும் அங்கேதான் கொட்டுவார்கள். சிறுவர்கள் கல்லெறிந்து விளையாடுவார்கள்.

இரவு முழுவதும் துர்நாற்றம் வீசுவதைக் கண்ட அயலவர்கள் காலையில் எங்கும் பார்த்து விட்டு இறுதியில் அந்தக் கிணற்றுக்குள் சென்று பார்த்திருக்கிறார்கள். அதற்குள் சாக்கு ஒன்றில் கட்டப்பட்ட பெரிய மூடைபோல் ஒன்று இருப்பதையும், அதற்குள்ளிருந்து துர்நாற்றம் எழுவதையும் கண்டு கொண்டுவிட்டார்கள். அந்த வழியால் சென்ற வேறு சிலரும் அதனைப் போய்ப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் மாமாவை வழியில் மறித்து இதனைக் கூறி இருக்கிறார்.

இதைக் கேட்டதும் தான் தாமதம் அம்மா மண்ணில் விழுந்து அடித்துப் புரண்டு குளறினாள். வீட்டில் நின்றவர்கள் பேயறைந்தது போல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சிலர் அம்மாவோடு சேர்ந்து அழத் தொடங்கிவிட்டார்கள். சுமதிக்கு தலை விறைத்தது. நிற்க முடியாமல் சுவரோரமாக உட்கார்ந்தாள். மாமா சிறிதும் தாமதிக்காமல் என்னவென்று பார்த்துவரப் போனார். சுமதியின் இதயத்தில் ஆயிரம் வேண்டுதல்கள். மாமா வந்து சொல்லப் போகும் முடிவு..... “கடவுளே ஐயாவுக்கு ஒண்டுமே



படிப்பகம்

www.padippakam.com



நடக்கக் கூடாது. ஐயாவை உயிரோடை திருப்பித் தந்திடு" ஒவ்வொரு விநாடியும் அங்கிருந்தவர்களுக்கு ஒரு யுகமாகக் கழிந்தது.

கேற்றடியில் ஒரு மாட்டுவண்டில் வந்து நின்றது. திடீரென்று எழுந்த துர்நாற்றம் அங்கிருந்தவர்களைத் திகைக்க வைத்தது. எல்லோர் இதயங்களும் திக் திக் என்று அடித்துக் கொண்டது. எல்லோரும் தம்மை மறந்தவர்களாய்ப் படலையடிக்கு ஓடினார்கள். மாமாவும் வேறு சிலரும் வண்டியில் இருந்து சாக்கு மூட்டையை இறக்கினார்கள். நாற்றம் மூக்கைப் பொத்தச் செய்தது. நடந்ததை எல்லோருமே ஊகித்துக் கொண்டார்கள். அந்தக் குடும்பத்தின் எதிர்பார்ப்புக்களை எல்லாம் தவிடு பொடியாக்கிய வண்ணம் அங்கே ஒரு பிணம் வந்து விட்டது. அந்த வீட்டில் இனி ஒரு செத்த வீடு நடப்பது தவிர்க்க முடியாதது.

படலையடியில் ஒரு வான் வந்து நின்றது. ஆயுதம் தாங்கிய அந்தக் கும்பல் குதித்து ஓடி வருகிறது. அதில் ஒருவன் உறுமினான். "அரை மணித்தியாலத்திற்கை அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாமல் பிரேதத்தைக் கொண்டே எரிச்சுப் போடோணும். இல்லாட்டி எல்லாரையும் சுட்டுத்தள்ளிப் போடுவம்."

அந்தக் கொடியவர்களை ஏற்றிக்கொண்டு அந்த வாகனம் மீண்டும் யாரைப் பலியெடுக்கலாம் என்ற எதிர்பார்ப்போடு செல்வது போல், உறுமிக்கொண்டே செல்கிறது.

✸



படிப்பகம்

www.padippakam.com



*சிறுகதை*

# அவர்களுக்குத்தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே....!

இரவு...... நேரம் ஒருமணி இருக்கும். எங்கும் ஒரே இருட்டு. கும்மிருட்டு என்று சொல்வார்கள். அப்படித்தான்.... மின்மினிகள்கூடப் பதுங்கிக் கொண்டன.

அந்த ஊரில் ஒரு நாய்கூட இல்லை.... இல்லை இல்லை! இது சுத்தப்பொய்.... நிறையவே இருந்தன.... ஒன்றல்ல இரண்டல்ல..... சில வீடுகளில் நாலைந்து நாய்கள் இருந்தன. வேலிக்குக் கீழால் விடுப்புப்பார்க்கும். வெறுத்தால் பாய்ந்து கடிக்கும்.....

மீன்காரன், ஐஸ்பழக்காரன், தும்புமுட்டாஸ் விற்பவன்..... சைக்கிளில் செல்லும் போது..... சில வீடுகளைக் கடக்கும் போது...... இதயம் வெட வெடக்க இருகால்களையும் தூக்கி, பாரில் போட்டதும் உண்டு.

www.padippakam.com



கறுப்பு, சிவப்பு, மாநிறம், கட்டைநாய், குட்டைவால் நாய், சடைநாய், சொறிநாய், பல இனநாய்கள்..... நன்றாகவே குரைக்கும்.

"நாய் கடிக்கும் கவனம்...." சில கேற்றுகளில் இன்னமும் பலகைகள் தொங்குகின்றன. கட்டைகளில் இன்னமும் நாய்ச் சங்கிலிகள் கிடக்கின்றன..... ஆனால், நாய்களைத்தான் காணவில்லை.

ஒட்டுமொத்தமாக ஊரைவிட்டு எங்கே போயிருக்கும்.....? மனிதரில்லாத இடத்தில் எமக்கென்ன வேலை என்று ஓடிவிட்டனவோ.....? இருக்காது. அவை மனிதருக்கு முன்பே போய்விட்டன.

இயல்பாகவே நாய்களுக்கு வெடிச்சத்தங்கள் கெடிக் கலக்கும்... இப்போதெல்லாம் நிறைய வெடிச் சத்தங்கள் கேட்கின்றன.

காதுக்குள் துப்பாக்கியை வைத்து அழுத்தினாற் போல்.... செவிப்பறைகள் அதிருகின்றன. சில செவிப்பறைகள் வெடித்துவிட்டன. அணுக்குண்டேதான் வெடித்தாலும் இனி அவை அசையா.

எந்த ஒரு உயிரினமும் அங்கு இருப்பதாகத் தெரியவில்லை....

பெருமூச்சு....., தும்மல்...., இருமல்....., குறட்டை.... மூச்சையடைக்கும் சளியை உள்ளேயிழுத்து வாயால் கொர் என்று காறித்துப்பும் கரகரத்த ஒலி..... எதுவும் இல்லை.

கைகட்டி வாய் பொத்திக் காற்றுங்கூட கம்மென்று உட்கார்ந்து கொண்டது. காற்று வீசாத பாலைவனம்... அப்படியொரு அமைதி.......

தெளிவாகக் கேட்கும் துப்பாக்கி வெடிக்கும் சத்தங்கள்.... ஒன்று....இரண்டு....மூன்று....ஒழுங்கு குலையாது சலனமின்றி எண்ணலாம்.



படிப்பகம்

www.padippakam.com



ஆயிரம்.... இரண்டாயிரம்.... மூவாயிரம்.... சீ... இதைப் போய் யார் கணக்கெடுப்பார்கள்....?

ஒன்றிரண்டு தெரியாத காலத்தில் ஒவ்வொரு ஒன்றிற்கும் சுவர்களில், ஏதாவது மரங்களில் குறியிடுவார்கள்.

இப்போதும் அப்படித்தான். துப்பாக்கியிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு குண்டிற்காகவும் சுவர்கள், மரங்கள், ஏன் மனிதர்களில் கூடத் துளைகள் போடப்படுகின்றன.

"ஐயோ... ஓ... ஓ... ஓ..."

துப்பாக்கிகளையும் துயருறச் செய்யும்... ஓர் தாயின் கொடிய கதறல்... அடங்க ஒரு நிமிடம் எடுத்தது... "என்ரை ராசா... ஆ... ஆ... ஆ...! என்ரை ஐயோ... ஓ... ஓ... ஓ... என்ர பிள்ளையை சாக்கொண்டு போட்டாங்கள். என்ர ராசா... ஆ... ஆ...!"

ஒரு நிமிடம் ஓடியது. மீண்டும் அதே அமைதி. குண்டுச் சத்தங்கள் மட்டும் தெளிவாகக் கேட்டன.

இலேசாக மிகவும் இலேசாக மழை தூறுகிறது. காலை தொடக்கம் இந்த மழை இப்படித்தான் முக்கி முனகிக் கொண்டிருக்கிறது. காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரை நீண்டிருக்கும் தண்டவாளம் இருளில் மூழ்கி வெறிச்சென்று கிடக்கிறது.

தூரத்தே ஓர் இரைச்சல்... "ட்றெயின்" வருகிறது.

இல்லை...! இல்லை! நிச்சயம் அது வராது. அப்படியானால் அந்தச் சத்தம்...?

உயிரைப் பறிக்கும் ஓர் கனரகவாகனம்... காலனை ஏற்றி வருகிறது.

இரைச்சல் உம்... உம் என்று இரைச்சலாகி நீண்ட நேரத்தில் ஒய்கிறது.

"ஐயோ... ஓ... ஓ... ஓ... என்ரை ராசா... ஆ... ஆ... ஆ... என்னை விட்டுப் போட்டியோ... ஓ... ஓ... ஓ... என்ரை ஐயோ...



படிப்பகம்

www.padippakam.com



ஓ... ஓ... ஓ..."

மீண்டும் அதே கதறல் ஒலி இருட்டைப் பிழிந்து கலங்க வைக்கிறது.

தண்டவாளத்திலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் ஓர் மக்கி ஒழுங்கை. இருமருங்கிலும் நீளத்திற்கு மதில்... தொலைவில் கிழுவை வேலி வளைந்து செல்கிறது. ஒழுங்கை முகப்பிலிருந்து ஐம்பது யார் உள்ளே தள்ளி வலப்புறமாகச் செல்லும் ஓர் சிறிய ஒழுங்கை... அதுதான் அச்சத்தத்திற்குரிய அந்த வீட்டிற்குரிய பாதை.

அந்த வீட்டில் மூன்றே மூன்று ஜீவன்கள். தாயும் இரண்டு பிள்ளைகளும்... மூத்தமகள் இருபத்துநான்கு வயதிருக்கும்... மருத்துவக்கல்லூரி இறுதியாண்டு மாணவி. அடுத்தது மகன். தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்.

வறிய குடும்பம். பிள்ளைகளை வறுமையின் மத்தியிலும் மிகவும் கஷ்டப்பட்டே படிப்பித்தாள். இரண்டு பிள்ளைகளிலும் தாய் உயிரையே வைத்திருந்தாள். பிள்ளைகளும் அப்படித்தான்.

"துப்பாக்கியைக் கண்டு பிடித்தவன் நாசமாய்ப் போக... ஏன்தான் இப்படி ஒரேயடியாக வெடித்துக் கொட்டுகின்றன." தொடர்ந்து நாலைந்து நாட்களாக ஒரே சூட்டுச் சத்தம்... மரண ஓலம்... வரவர கிராமங்கள் வெறிச்சோடிக்கொண்டே வருகின்றன. ஒன்றன்பின் ஒன்றாக ஏவப்படும் ஷெல்கள் கண்ட இடமெல்லாம் விழுந்து வெடித்தன. மக்களைக் கொன்றன.

"இந்தப் பிள்ளை எங்க கிடந்து தவிக்குதோ? ஒழுங்காய் வீட்டில இருந்திருக்கலாம்... கண்டறியாத ஆஸ்பத்திரிப் படிப்பு"... வாசலில் நின்று மகளுக்காகக் காத்துக் காத்து அலுத்துக் கொண்டாள். மகனை அனுப்பித் தேடவும் பயமாக இருந்தது. தானே புறப்பட்டாள்.

தொலைவில் வாகனங்கள் இரைந்து உறுமின. இதயம்



படிப்பகம்

www.padippakam.com



வேகமாக அடித்தது. உடல்முழுவதும் இனம் புரியாத பயம் ஓடிப் பற்றிக்கொண்டது. "ஏன்தான் இப்படி இரைந்து ஓட்டி உயிரை எடுக்கிறார்கள்...? சாதாரணமாக போகலாந்தானே...?"

இரைச்சலைத் தொடர்ந்து அவலக் குரல், இரைச்சலையும் மீறிக் கேட்டது.... வரவர அதிகரித்தது .... "ஒரு கிராமமே கத்துகிறதே!" கால்கள் மேலே நடக்க மறுத்தன. அதிலேயே நின்று கொண்டாள்... உடலெல்லாம் நடுங்கியது... ஒரேயடியாக வியர்த்தது.

அப்போதுதான் அந்த இடி விழுந்த செய்தி அவள் காதில் விழுந்தது. இதைவிட யாராவது அவளைச் சுட்டோ, வெட்டியோ கொன்று போட்டிருக்கலாம்.

அந்த இரைச்சலின் பின்னணியில் கிட்டத்தட்ட ஐம்பது உயிர்கள் நெரித்துக் கொல்லப்பட்டன. பெண்கள், குழந்தைகள், முதியோர், கர்ப்பிணிகள் எனப் பலதரத்தினர்.... அந்தத் தாயின் மகளும் நெரிந்து போனாள்.

அதெப்படி அந்த இரைச்சலில் அவ்வளவு பேர் இறக்கமுடியும்? தன்பாட்டில் றோட்டால் வாகனம் போயிருக்கும்... இவர்கள் குறுக்கே போயிருப்பார்கள். நெரித்திருக்கும். இறந்திருப்பார்கள். இருக்காது... அவர்கள் தம்பாட்டில் றோட்டால் போயிருப்பார்கள். வாகனம்தான் குறுக்கே வந்திருக்கும்... வேண்டுமென்றேதான் நெரித்திருக்கிறது. குறுக்கே போய் குழி பறிக்கிற வாகனம் கொடிய மிருகம்.

இரண்டு மூன்று தடவை கண்ணை விழித்து மீண்டும் மயங்கிப் போனாள்... யாரோ ஒரு புண்ணியவான் தண்ணீர் தெளித்து மயக்கத்தைப் போக்கினான். எழுந்தவள் நெஞ்சிலும் தலையிலும் அடித்து ஓவென்று அழுதாள்..... மண்ணில் புரண்டு கத்தினாள். எழுந்து ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிச் சென்றாள்... நெஞ்சிலும் தலையிலுமாக மாறி மாறி அடித்துக்கொண்டு போனாள்.

மகனுக்குச் சொல்லப் போகிறாள்.... இல்லை... கிணற்றில் விழுந்து சாகப் போகிறாள்.... ம்.... ம்... யாரிடமாவது

www.padippakam.com



மன்றாடுவாள் மகளின் பிணத்தை வீட்டில் கொண்டு வந்து தரும்படி.

கேற்றைத் தள்ளிவிட்டு ஓடினாள்... வாயில் கதவோடு தலையையடித்துக் கத்தினாள். விழுந்து புரண்டு அழுதாள்...

ஒருநாள், இரண்டு நாள்... இப்படித்தான் கத்தினாள். வீட்டில் மரணஓலம்.... ஊர் முழுவதும் கூட அப்படித்தான் ஓலமிட்டது. பாவம் மகன், தாயோடு சேர்ந்து அவனும் அழுதான். வெளியே எங்கும் போக முடியாது... இந்த நிலையில் தாயை விட்டுவிட்டு எப்படிப் போவான்?.... வீட்டிலேயே இருந்தான். தாய்க்குத் தேநீர் வைத்துக்கொடுத்தான். ரொட்டி சுட்டுக் கொடுத்தான். உண்ண மறுத்துவிட்டாள்.... அழுது கொண்டேயிருந்தாள். ஊரிலே யாருமே இல்லாதது போல் இருந்தது. ஒரு சிலர் திரிந்தார்கள்.

மூன்றாம் நாள்... அதே வெடிச் சத்தங்களோடுதான் விடிந்தது. வளவு முழுவதும் ஷெல் வீழ்ந்து மரங்கள் முறிந்து கிடந்தன. வீட்டில்தான் இன்னமும் விழவில்லை. எப்படியும் வீழ்ந்துவிடும்...ஒன்பது மணியிருக்கும் வீடே நொருங்கிக் கொட்டியது. எங்கும் ஒரே புகைமண்டலம்... ஒரு நிமிடம்... இரண்டு நிமிடம்.... மெதுவாகக் கண்களை விழித்தாள். குசினியில் வீழ்ந்திருக்க வேண்டும். ஒரே புகையாக இருந்தது. எதுவும் தெரியவில்லை... மகனைத் தேடினாள். காணவில்லை. கத்திக் கூப்பிட்டாள். பதிலேயில்லை.... கூச்சலிட்டாள்.... இதயம் படபடவென அடித்தது. குசினிப்பக்கம் ஓடினாள்... அங்கே மகன் இரத்த வெள்ளத்தில் கிடந்து துடித்தான். கத்த நினைத்தவள்... சத்தம் வெளியே வரவில்லை... தலையைச் சுற்றுவது போலிருந்தது.... இரண்டு வினாடி.... மூன்று வினாடி..... அப்படியே மயங்கி மகனின் அருகில் தரையில் வீழ்ந்தாள்.

மாலை நான்கு மணியிருக்கும். அவளுக்கு நினைவு திரும்பியது. சுயநினைவு என்று சொல்ல முடியாது. கண்கள் விழித்துக் கொண்டன. யாரோ மனிதர்கள் இங்கே உயிரோடு நடமாடியிருக்கிறார்கள்... இல்லாவிட்டால் அவள் எப்படி இந்த விறாந்தைச் சுவரோடு சாய்ந்து கிடக்க முடியும். குசினியில்



படிப்பகம்

இரத்த வெள்ளத்தில் கிடந்த அவளின் மகன்... அந்தப் பிணம்... வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டு அந்த இரட்டை வாங்கில் கிடத்தப்பட்டிருக்க முடியும்...?

இப்போது அவளை யாராவது துப்பாக்கியால் சுட்டுக்கொல்ல வேண்டும்...! உச்சியில் ஒரு ஷெல் விழுந்து சிதற வேண்டும்...! இனி அவள் சுவாசிக்கக் கூடாது...! எப்படியாவது இறக்க வேண்டும்.... உடனடியாக இறக்க வேண்டும்....!

இல்லை...!அவள் சாகமாட்டாள். அவளுக்குச் சாவு வராது. அதெப்படி இந்த உலகில் அவள் அவ்வளவு இலகுவாகச் சாவது சாத்தியப்படும்?....நன்றாகக் கத்தவேண்டும். தலையைப் பிய்த்து...மண்டையை மோதி நெஞ்சு வெடிக்கக் குளற வேண்டும்....பைத்தியம் பிடித்து தெருத் தெருவாய் அலைய வேண்டும்.... அதுவரைக்கும் அவள் சாகமாட்டாள்.... அவளுக்குச் சாவு வராது.

இப்போது அதே அமைதி.... அதே சூட்டுச் சத்தம்.... ஷெல் சத்தம்.... நேரம் அதிகாலை நான்கு மணியிருக்கும்... விடியப் போகிறது. வெளிச்சவீடு போல் இருந்த அந்தவீடு இருண்ட கண்டமாகிக் கிடந்தது. ஊரே... உம்....என்று அழுது வடிகிறது. கதவுக்கு நேராக மேலே அந்த டியூப்லைட் எரியாமல் வெறுமனே வெள்ளையாய்க் கிடக்கிறது. பிணத்தின் தலைமாட்டில் மௌனமாக அழுது கொண்டிருக்கும் அந்தக் குத்து விளக்கு வெளிச்சம்.... தொலைவில் நின்று பார்த்தால் அதுவும் தெரியாது.

இப்போதும் அந்தச் சுவரோடுதான் இருந்தாள். கையை முழங்காலில் வைத்து தலையைச் சரித்து இடது கையால் தாங்கி சுவரின் மேற்புறத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்... முன் தலைமுடி கலைந்து விழுந்து நெற்றியிலேயே கிடந்தது. கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. கன்னங்கள் பிசுபிசுத்து மினுங்கிக் கொண்டிருந்தன.

www.padippakam.com



விசும்பலோடே மூக்கிலிருந்து வடியும் சளியைச் சீறி வீசி விட்டு கையைச் சீலையிலே துடைத்தாள். மீண்டும் தலையிலே கையை வைத்துக் கண்ணை மூடிக்கொண்டாள்.

வாங்கிலிருந்த பிணத்தின் நெஞ்சிலும் காலடியிலும் நாலைந்து "போகன் விலா" ப் பூக்கள் சிதறிக் கிடந்தன. தலைமாட்டில் ஒரு செவ்வரத்தம் பூ வாடிக்கிடந்தது.

சிறிது நேரம் அமைதி.... துப்பாக்கிச் சத்தம் மீண்டும் கேட்டுக் கொண்டிருந்தது.... ஐந்து நிமிடம்.... பத்து நிமிடம்.... அவள் உதடுகள் வேதனையால் துடித்துப் பிளந்தன... உடல் குலுங்கியது... விம்மலினூடே அழுகை வெடித்து வெளிவந்தது. குலுங்கிக் குலுங்கி அழுதாள்.... தலையை இரு புறமும் ஆட்டிப் புலம்பினாள்.... சுவரோடு மோதினாள்.... அடிக்குரலில் பலமாக அழுதாள்.

கண்ணை விழித்து சிறிது நேரம் மகனின் பிணத்தையே பார்த்தாள்.... தலை அவள் பக்கமாகச் சரிந்து திரும்புவது போலிருந்தது.... உற்றுப் பார்த்தாள்....உதடுகள் லேசாய் பிரிய முயற்சித்துப் புன்னகைப்பதுபோல் பட்டது. இதயம் படபடவென்று அடித்தது. குந்தியிருந்தவள் இரு கைகளையும் முன்னே ஊன்றி நுனிக்காலில் எம்பி நன்றாக உற்றுப் பார்த்தாள்.

எல்லாமே பிரமை... நீண்ட பெருமூச்சினூடே விம்மலாக அழுகை வெடித்தது. குலுங்கிக் குலுங்கி அழுதாள். தலையில் அடித்தாள்.... மீண்டும் சுவரோடு சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

தொலைவில் பயங்கரச் சத்தத்துடன் அடுத்தடுத்து நான்கு குண்டுகள் வெடித்து ஓய்ந்தன. கிணற்றடிப் பக்கமாக ஒரு ஷெல் பெரிய சத்தமாக, வெடித்துச் சிதறியது. தொடர்ந்தும் அக்கம் பக்கமாக நாலைந்து ஷெல்கள் வெடித்தன... வீடு அதிர்ந்தது.... யன்னல்கள் சிதறிக் கொட்டின.

ஓடிச் சென்று கதவை அடித்துச் சாத்தினாள்... நடந்து வந்து வாங்கருகில் நின்றாள்... மகனையே பார்த்தாள்....



படிப்பகம்

www.padippakam.com



தலைமாட்டில் கிடந்து வாடிய செவ்வரத்தம் பூவை எடுத்து நெஞ்சில் கழுத்துக்குக் கிட்ட வைத்தாள். கால் மாட்டில் வந்து துணியை விலக்கிக் காலைத் தொட்டுப் பார்த்தாள்.... குளிர்ந்து விறைத்திருந்தது.

மூலையில் மேசையருகில் கிடந்த கதிரையில் மகள் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். முகம் மலர மேசையை நோக்கி ஓடினாள்.... எல்லாமே பிரமை.... கதிரை வெறுமனே சும்மா கிடந்தது....

ஒரே தாகமாக இருந்தது... ஏதாவது குடிக்க வேண்டும் போல்..... குசினிக்குள் சென்று அடுப்பை மூட்டினாள்.... வாளியில் தண்ணீர் இல்லை.... அடுப்பு நன்றாக எரிந்தது...

கேற்றிலில் இருந்த சிறிதளவு நீரையே கொதிக்க வைத்தாள்.

“அம்மா..... ஆ.... நான் போட்டு வாறன்...” மகளின் குரல் கேட்டது. விறாந்தைக்கு ஓடிவந்தாள்.

எல்லாமே பிரமை..... அங்கே..... மகனின் பிணம் மட்டுமே.... தலைமாட்டில் அந்தக் குத்து விளக்கு மட்டும் மௌனமாக அழுது கொண்டிருந்தது....

தலையில் அடித்து “ஓ” என்று கத்தினாள். சிறிது நேரம் அப்படியே செய்தாள்.

குசினியுள் சென்று ஓர் கரிபிடித்த தட்டில் கொஞ்சம் தணல் கொண்டு வந்து வாங்கின் ஓரமாக மகனின் கால்மாட்டில் வைத்தாள். சாமி அறையினுள் சென்று ஒரு பேணியோடு திரும்பி வந்தாள்.... அதனுள் இருந்து தூளை அள்ளித் தணல் சட்டியில் போட்டாள்.

அடர்த்தியான புகை வாசனையோடு மேலே எழுந்தது. இரண்டு கைகளையும் புகையின் மேல் பிடித்து, கைகளைச் சூடாக்கினாள். பாதங்களை மூடியிருந்த துணியை விலக்கி சூடேறிய கைகளால் பாதங்களை உரசினாள். இடக்காலின் மேற் பாகத்தை நன்றாகத் தேய்த்தாள். வலப்பாதத்திற்கும் அப்படியே செய்தாள்.

www.padippakam.com



திடீரென்று சூட்டுச் சத்தங்கள் நின்றன..... மயான அமைதி.... உலகமே இறந்துவிட்டது போல் ஓர் அமைதி..... எழுந்து வெளியே வந்தாள்.... இருட்டை வெறித்தாள்.

அமைதி அவளை என்னமோ செய்தது.... சூட்டுச் சத்தமில்லாமல் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. வெடிச் சத்தங்களைக் கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டும் போலிருந்தது. வெடிச் சத்தம்! வெடிச் சத்தம்! அவளுக்குக் கத்த வேண்டும் போல் இருந்தது. சீ என்ன படைவீரர்கள் இவர்கள்.... இப்படி ஒரேயடியாக நிறுத்திவிட்டார்கள்.

திரும்பி மகனைப் பார்த்தாள்.... அவன் புன்னகைத்த படி படுத்திருந்தான்....

சீக்கிரம்.... சீக்கிரம்..... அவளுக்கு வெடிச் சத்தம் வேண்டும். ஒரு வேளை..... இந்தியப் படைவீரர்கள் மலங்கழிக்கப் போயிருப்பார்கள்..... அதெப்படி எல்லோருமே ஒரே நேரத்தில்.....? தலைவன் ஏதாவது கட்டளை பிறப்பித்திருப்பான்.... சுடுவதை நிறுத்திவிட்டுக் கேட்கிறார்கள் போலும்....

அமைதி அவளுக்குப் பயத்தை உண்டு பண்ணியது. தூரத்தே ஒரு "டோர்ச்" வெளிச்சம் தெரிந்தது.... யாராக இருக்கும்....? சிறிது நேரம் நிற்கிறது. பின் நடக்கிறது.

திடீரென்று சூட்டுச் சத்தங்கள்... எல்லாத் திக்கிலும்.... அவளுக்கு ஒரே ஆனந்தம்.... தூரத்தே வந்த "டோர்ச்" வெளிச்சத்தைப் பார்த்தாள். அது வந்த பாதையால் திரும்பி ஓடிக் கொண்டிருந்தது. அவளுக்குச் சிரிப்பு வந்தது....

இடப்புறக் கழுத்தில் ஏதோ ஊர்வது போலிருந்தது மார்பிலும், இடுப்பிலுங் கூட அப்படித்தான் இருந்தது....

அவளுடலில் குண்டுகள் பாய்ந்து விட்டன.... அவளுக்கெங்கே அது விளங்கப் போகிறது....? பாழாய்ப் போன குண்டுகள்....

கழுத்தைக் தடவிப் பார்த்தாள்.... ஈரமாக இருந்தது....



படிப்பகம்

www.padippakam.com



"ஏன்தான் இப்படி வியர்த்துத் தொலைக்கிறது....!" பிசுபிசுத்தது.... உள்ளே வந்து வெளிச்சத்தில் பார்த்தாள்..... கையெல்லாம் சிவப்பாக.... சீலையில் துடைத்தாள்... திரும்பவும் கழுத்தைத் தடவினாள்.... மீண்டும் கையெல்லாம் ரத்தம்... இடுப்பைத் தொட்டுப் பார்த்தாள். துவாரம் போலிருந்தது. சுண்டுவிரல் உள்ளே சென்றது...

எங்கோ தொலைவில் சேவல் கூவுவது கேட்டது. வாசலருகில் வந்து நின்றாள். வியப்பாக இருக்கிறதே.....! இந்தப் பயங்கர இருட்டில்..... மயான அமைதியில்.... சூட்டுச்சத்தங்களின் மத்தியில்.... இந்தச் சேவல் மட்டும் எங்கே ஒளித்திருந்தது....? பயமில்லாமல் எவ்வளவு துணிச்சலாகக் கூவுகிறது....! மனிதர்கள்கூட போட்டது போட்டபடி..... ஊரை விட்டே ஓடிவிட்டார்கள். துணிச்சலான சேவல்.... சாவைப் பற்றி அஞ்சாது தனது கடமையைச் செய்கிறது.

விடியலுக்காகத்தானே அது கூவுகிறது....? அவர்களுக்குத்தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே...! நாளை இச் சேவலை நிச்சயம் இந்தியப் படைக்காரர்கள் கொன்றுவிடுவார்கள்...

இங்கேகூட கருஞ்சிவப்பில் ஒரு கொண்டைச் சேவல் திரிந்தது.... எங்கே செத்ததோ தெரியாது....! நாலைந்து நாட்களுக்கு முன் ஒரு குட்டி நாய் துரத்த கோவென்று ஓடிச் சென்று வைக்கோல் பட்டடைக்குள் புகுந்து கொண்டது..... பயந்தகோழி.

ஒரு நாய், இரண்டு பூனை.... ஒன்றைக்கூட காணவில்லை.....! இரவில் இவன் மார்பில் தான் அந்தச் சிவலைப் பூனை படுத்திருக்கும்..... இப்போது அவன் தனியாகக் கிடக்கிறான்.... பூனை எங்கே தொலைந்ததோ தெரியவில்லை.

அவளுக்கு ஒரே களைப்பாக இருந்தது..... தூங்க வேண்டும் போல் ஒரே மயக்கமாய் வந்தது. அவசரமாக வெளியே போய்வர நினைத்தாள்; முடியவில்லை. தூக்கம்.... தூக்கம்... ஒரே தூக்கம்.... பாய்கூட வேண்டாம், தூங்கினாற்

www.padippakam.com



போதுமென்றிருந்தது..... தலையணையும் வேண்டாம். விழுந்து விடுவாள் போலிருந்தது. தட்டுத் தடுமாறி வாங்கருகில் வந்தாள்... வீடு முழுவதும் இரத்தம் கோடு போட்டது.

மகனைப் பார்த்தாள். புன்னகையுடன் படுத்திருந்தான்... இறந்திருந்தான். தலையைக் கோதிவிட்டாள். கை வெளியே தெரிந்தது.... உள்ளே தள்ளி நன்றாக மூடினாள். அது விறைப்பாக இருந்தது. கால்மாட்டில் வந்து நின்றாள். பூக்களைக் கையில் எடுத்துப் பார்த்தாள். மகளின் நினைவு வந்தது. இருந்த இடத்திலே பூக்களை மீண்டும் வைத்தாள்.... அவை வாடாமல் இருந்தன.

தூக்கம் பிய்த்தெடுத்தது... அவளையறியாமலே கீழே இருந்து விட்டாள். தாகமாய் இருந்தது. படுத்துக் கொண்டாள்..... இல்லை, விழுந்து விட்டாள். கண்கள் மூடிக் கொண்டன. உடனேயே தூங்கிப் போனாள் மகனைப் போல.......

✸



படிப்பகம்

www.padippakam.com



*சிறுகதை*

# இடம் மாறியுள்ள துப்பாக்கிகளால்....

கிணற்றடியில் தண்ணீர் அள்ளிக் கொண்டு நின்ற பாக்கியத்திற்கு நாய்கள் குரைத்ததில் மகன் கூப்பிட்டது காதில் விழவில்லை. "யாரோ முகாமிலிருந்து தப்பியோடியிருக்கவேணும். இல்லாவிட்டால் இவ்வளவு நேரத்தோடு வெளிக்கிட்டிருக்கமாட்டாங்கள்....." என்று எண்ணியவள் "அவன் எப்படியாவது தப்பிவிட வேண்டும். பிடிபட்டாலும் உயிரோடு பிடிபடக்கூடாது....." என்று முன்பின் அறிமுகமில்லாத, முகம் தெரியாத அந்தத் தமிழ் மகனுக்காக மனதிற்குள் ஆண்டவனை வேண்டிக்கொண்டாள்.

"அன்று வாழைக்குலைக் கந்தையற்ற மகனைப் பிடிக்கவும் இப்படித்தான் வேளையோடு வந்து காவலிருந்தவங்கள். வீடுகளில் இருந்தவர்களையும், வீதியால் வந்தவர்களையும், ஏன் நித்திரையில் கிடந்தவர்களையும் தட்டி எழுப்பி விடிஞ்சதும் விடியாததுமா கூட்டிக்கொண்டே பொன்னம்மா வளவுப் புளிக்குக் கீழை இருத்திவைச்சவங்கள்......"

பதினொரு மணிபோல் தலையாட்டிக்கு முன்னால் எல்லோரும் தலைகுனிந்து சென்றனர். "ஏய்....எல்லாம் இங்கை பார்த்து நிமிர்ந்து நட...." என்று இராணுவத்தினன் கத்த "எங்கே தலையாட்டிக்குக் கோபம் வந்துவிடுமோ" என்ற அச்சத்தில் பரிதாபப் பார்வையை வீசி, அந்த அரக்க இதயங்களில்

www.padippakam.com



இரக்கத்தை எதிர்பார்த்துநின்ற இளைஞர்கள்....

ஆம்! இன்று பெரும்பாலான தமிழ் இளைஞர்களின் தலையெழுத்து தலையாட்டிகளால்தான் திருப்பியெழுதப் படுகிறது.. என்னதான் எமது இளைஞர்களுக்கு வீரமிருந்தாலும் முகமூடிகளுக்கு முன்னால் எல்லோரும் முகம் வெளுத்துப் போகிறார்கள்.

கிணற்று வாளியைக் கம்பியிலே கொழுவியவள், தண்ணீர்க் குடத்தைத் தூக்கிக்கொண்டாள். பக்கத்து வீட்டிலிருந்து கோழிகள் பதறியடித்துக் கொக்கரித்தபடி ஓடிவந்தன. இந்தியாவிலிருந்து இங்கேவந்து கோழிகளைத் துரத்தித்திரியும் கும்பலை எண்ண மனம் வெதும்பியது. குசினிக்குள் போக நினைத்தவள்..... ஒருகணம் தயங்கி குடத்தை வெளியிலே வைத்துவிட்டுக் கோடிப்புறத்தால் விறாந்தைக்கு வந்தாள். வந்தவள் திடுக்குற்றுப் பின்வாங்கி எதிர்பாராத தாக்குதலில் இருந்து தப்ப சுவரோடு ஒண்டிக்கொண்டாள்.

சின்னயற்ற வாழேக்க நிண்ட சிவத்தக் கேப்பைமாடு இராணுவத்தினரைக் கண்டு அறுத்திருக்கவேண்டும். வேலியைப் பிச்சுக்கொண்டு வந்த வேகத்தில் இவளுடன் மோதப் பார்த்து, கால்கள் சறுக்க, ஒரு துள்ளுத் துள்ளி மறு பக்கம் பார்த்து நின்றது.

பெரிய உருவம், பெரிய கண்கள். ஆனால் அதன் பார்வை பரிதாபத்தை வேண்டிநின்றது. மனிதர்களைவிட அதிக ஆபத்தைத் தான் எதிர்நோக்குவது போல் மிரண்டுபோய் நின்றது.

விரட்ட நினைத்தவள் மாடு தானாகவே வெளியே போகட்டும் என எண்ணி படலையைத் திறந்துவிடப் போனாள். படலையை முற்றாகத் திறந்திருக்கமாட்டாள். அதற்குள் மீண்டும் மிரண்டு ஓடிவந்த மாடு படலையையே பிரித்துவிடுவது போல் அவளையும் மோதி வீழ்த்தி, எதிர்வளவினுள் புகுந்து ஓடியது.

"சனியன்" எனத் திட்டியபடி நிமிர்ந்தவள், மாடு



படிப்பகம்

www.padippakam.com



தன்னையும் மோதி வீழ்த்திவிட்டு ஓடிய காரணத்தைப் புரிந்துகொண்டாள். அங்கே.... தலைப்பாகை அணிந்த, உயரமான ஓர் இராணுவத்தினன் ஒரு கையில் துப்பாக்கியும், மறுகையில் கோழியுமாக அவளையே பார்த்துப் பல்லை இழித்தபடி வந்துகொண்டிருந்தான். இதயம் படபடவென அடித்துக்கொண்டது. பார்வையை வாசல்பக்கம் திருப்பினாள். திருப்பியவள் சிலையாகிவிட்டாள்...... அங்கே....

அவளது மூத்த மகனை முன்னேவிட்டு இரண்டு இராணுவத்தினர், பின்னால் வந்துகொண்டிருந்தனர். "கடவுளே..... இவ்வளவு நேரமும் உள்ளுக்குள்ளேயே இருந்தவங்கள்..... என்னத்தை எடுத்தாங்களோ தெரியாது...." மனம் பதைத்தவள், வீட்டின் மேசையிலும் மூலை முடுக்குகளிலும் கிடந்த பொருட்களை நினைவுபடுத்திக் கொண்டாள். எங்கோ ஏதோ தவறுதலாகக் கிடந்து தனக்கு ஆபத்தை உண்டுபண்ணப் போவதாகப் பிரமைப்பட்டாள்.

கடந்த இரவு பதினொரு மணி இருக்கும் அவர்கள் வரும்போது..... துண்டறிக்கைகள், பத்திரிகையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட அநேக துண்டுச் செய்திகள், புத்தகங்கள், இன்னும் ஏதேதோ.... தூக்குவதற்குச் சுமையாக இருந்திருக்க வேண்டும். அவர்கள் தூக்கிவருவதைப் பார்த்துக் கணித்துக்கொண்டாள். அவற்றைப்பற்றி அவள் எதுவும் கேட்கவில்லை. ஆபத்தான சூழ்நிலைதான். ஆனாலும் அடிக்கடி அந்த வீட்டில் இரவுகள் இப்படித்தான் கழியும்.

அவர்களின் வருகையை முன்கூட்டியே தெரிந்திருந்த படியால் அவளுக்கு உடனடியாக உணவு தயாரிக்க வேண்டிய பிரச்சினை இருக்கவில்லை. அன்றிரவு இட்டலி அவித்திருந்தாள். வழமையாக அவள் இட்டலி அவிப்பது குறைவு. கணவன் இருக்கும் போது மனதிற்குப் பிடித்ததோ பிடிக்காததோ அவனது தொல்லை பொறுக்கமுடியாமல் அவனுக்குப் பிடித்தவற்றைச் செய்து கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம். குடித்துவிட்டு வந்து அவன் செய்யும் கும்மாளம்.... இவர்களின் குடும்பச் சண்டைக்குக் குழந்தைகளின் எதிர்காலம்



படிப்பகம்

www.padippakam.com



பலியாவதை எண்ணி அவள் பட்ட வேதனை.... வீட்டிலிருந்து அவள் வெளியே போனாலென்ன, அல்லது அவளைச் சந்திக்க யாராவது வீட்டிற்கு வந்தாலென்ன அது எப்படியாவது அவனுக்குத் தெரிந்துவிடும்.

அவன் பிரிந்துபோய் வாழ்வதற்கு இந்தப்பிரச்சினைகளைத் தான் பயன்படுத்திக்கொண்டான். கணவன் இல்லாவிட்டாலும் அவள் இப்போது நிம்மதியாகத்தான் வாழ்கிறாள்.

மரவள்ளித் தோட்டங்களிலும், வாழைப் பாத்திகளிலும் இரவுகளைக் கழித்து, பாணையும் ரொட்டியையுமே பழக்கப்படுத்திக்கொண்ட அந்த இளைஞர்களுக்கு இட்டலி அவித்துக் கொடுப்பதில் பரம திருப்தி அவளுக்கு.

வேலையை முடித்து அவர்கள் புறப்பட்ட போது மூன்றுமணியாகி விட்டிருந்தது. அவதானமாக எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுதான் போனார்கள். அவளும் கூடவே உதவிசெய்தாள். பார்த்துப் பொறுக்கி ஒன்றும்விடாமல் கட்டிக் கொடுத்தாள். ஆனாலும் சந்தர்ப்ப சூழ்நிலை சந்தேகத்தை உண்டுபண்ணி அவளைச் சஞ்சலப்படுத்தியது.

அவள் இடிந்துபோன அளவிற்கு அங்கே ஒன்றுமே நடக்கவில்லை. பிள்ளைகள் மூவரும் ஓடிவந்து தாயைச் சுற்றிக்கொண்டார்கள். வந்தவர்களில் ஒருவன் பிள்ளைகளைக் காட்டி "உன்னுடைய பிள்ளைகளா......?" என்று கேட்டான். பின்னர் ஏதோ புரியாத மொழியில் கூறியவன், சிரித்தபடி மற்றைய இராணுவத்தினரையும் அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு பொழுதும் துன்பத்தையே சுமந்துவந்தது. தொடர்ந்து சில நாட்களாக நேர அட்டவணைப்படியே அடிக்கப்படும் "ஷெல்"..... அதில் எதுவித மாற்றமுமில்லை. ஷெல்லடிப்பதும், சிரசுகள் வீழ்வதும் சிறு நிகழ்வுகளாகிவிட்டன. யாழ். போதனாவைத்தியசாலை, சாவகச்சேரிச் சந்தை இவை பாரிய இழப்புகள் தான்..... ஆயினும் ஆங்காங்கு கிராமங்களில், நகர்ப்புறங்களில் நடந்தவை



படிப்பகம்

கொஞ்சநஞ்சமா.....?

"சமாதானத்தை நிலைநாட்ட ஒரே வழி சண்டை. இது இன்றைய உலகம் எடுத்துக்கொண்ட இறுதி முடிவு. கொலை புரிவதே இவர்களுக்குக் கொள்கையாகிவிட்டது. வீதிகளில் மனிதர்களைக் காணமுடிவதில்லை. எங்கு பார்த்தாலும் எலும்புத் துண்டங்களையும், மண்டையோடுகளையும் மணந்து திரியும் இராணுவ மனிதர்கள். தூணிலும், துரும்பிலும் இந்தத் துப்பாக்கி மனிதர்கள்தான் உட்கார்ந்திருக்கிறார்கள்."

மூன்று வேளையும் உணவு உண்ணும் பழக்கத்தை மக்கள் மறந்துவிட்டார்கள். கடைகளில் பொருட்கள் இல்லை; எங்காவது தொலைவிலிருந்து வந்தாலும் யானை விலை, குதிரை விலை. பணக்காரர்கள் பதுக்கிவைத்த பணத்தைப் பாவித்துக் கொண்டார்கள். ஏழைகள் இரைப்பைகளைச் சுருக்கிப் பட்டினிக்குப் பலியாகிக்கொண்டிருந்தார்கள்.

இத்தனை ஆபத்துக்கள் துன்பங்களுக்கு மத்தியிலும்.... நாட்டிற்காகப் போராடும் அந்த நல்ல உள்ளங்களுக்கு..... அந்தப் பாவியின் இதயம்தான் ஏங்கியது.

அன்று மத்தியானம் உணவு எடுக்க வருவதாகக் கூறியிருந்தான் அன்சார்.

அதற்காகவே அவள் நேரத்தோடு சமைக்கத் தொடங்கியிருந்தாள். முன்பெல்லாம் உதவிசெய்யவும் உணவு கொடுக்கவும் ஊரில் எத்தனைபேர்? அஞ்சலிக் கூட்டங்களையும், பிரச்சார மேடைகளையும் தங்கள் தங்கள் தகுதிகளைக்காட்டத் தருணமாக்கிக் கொண்டவர்கள் எத்தனைபேர்?

இத்தகைய மனிதர்களை இனங்காண்பதற்காகவாவது நாட்டின் சூழ்நிலை மாறுபடவேண்டும் என எண்ணியவள், நாய் குரைக்கும் ஒலிகேட்டு வெளியே வந்தாள்.

அன்சார் உணவு எடுப்பதற்காக வந்திருந்தான்.

அவனைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. நன்றாக

www.padippakam.com



இளைத்திருந்தான். "அவனுக்கும் அப்பா.... அம்மா.... சகோதரம்.... வீடு எல்லாம் உண்டு. அவர்களோடு உல்லாசமாய்ப் பொழுதைப் போக்கலாந்தானே.... பிறகேன் இப்படி ஊண் இன்றி, உறக்கமின்றி சாவைக் கையில் பிடித்தபடி சமூகத்தில் இவர்கள் நடைபயில வேண்டும்?"

அன்சாருக்கு உணவைக் கொடுத்துவிட்டு அவசர அவசரமாகப் பார்சல்களைக் கட்டினாள்.

உணவு கட்டிக்கொண்டிருந்தவளுக்கு பசியோடும் நோயோடும் போராடியபடி, பனியிலும் மழையிலும் நனைந்து நாட்டுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் அந்த மெலிந்த.... வாடிய.... உருவங்களே கண்களில் நின்றன. "ஊருக்குள்ள இப்ப ஒருத்தரும் பெடியளை வீடு வாசல்ல அடுக்கிறேல்ல. பிறகு நீ என்ன இழவுக்கு உவங்களைக் கூப்பிட்டுச் சாப்பாடு குடுக்கிறாய்?...... உங்கை சாப்பாடு குடுத்தவயளுக்கு என்ன நடந்ததெண்டு தெரியுந்தானே....?'' இப்படித்தான் அன்று இராசாத்தி அக்கா தோட்டத்தில் வைத்து அவளைக் கண்டித்தாள்.

"நாட்டில என்ன பிரச்சனை நடக்குது. அதுக்கு என்ன செய்யலாம் எண்டு சிந்திக்காதேங்கோ.....! பக்கத்து வீட்ட ஆர் பாசல் எடுக்கவந்தவன் எண்டுதான் ஆராய்ச்சி நடத்துங்கோ....!" இப்படிச் சொல்ல நினைத்தவள் தன்னைக் கட்டுப்படுத்திச் சிரித்துவிட்டு, "இப்ப ஆர் அக்கா சாப்பாடு குடுக்கிறது? ஒழுங்கைக்கால போகேக்க பழகின முகம் கண்டால் என்ன ஓடி ஒளிக்கிறதே....? தண்ணியை வெந்நியைக் குடுத்துச் சமாளிக்கிறதுதானே" என்று சமாளித்தாள்.

"இப்ப அன்சார் வந்திருக்கிறதைக் கண்டால் மனிசி தானே நேர போய் ஆமிக்கு அறிவிச்சாலும் அறிவிக்கும்." இப்படி எண்ணிக்கொண்டவளுக்குத் திடீரென ஒரு தவிப்புணர்வு. "தற்செயலா இந்தச் சாப்பாடு பிள்ளையளைப் போய்ச் சேராட்டி.....? கடவுளே......! அப்படி நடக்கக்கூடாது! அதுகள் சாப்பிட்டு எத்தனை நாளோ....! சாப்பாடு வரும் வரும் எண்டு எவ்வளவு ஆவலோட இருக்குங்கள்...." பார்சல்களை



படிப்பகம்

www.padippakam.com



ஒவ்வொன்றாய்ப் பெட்டியில் அடுக்கினாள்.

திடீரென்று நாய்கள் குரைக்கும் ஓசை கேட்டது. "கடவுளே! வந்திட்டாங்களோ தெரியாது...." அச்சமடைந்தவளுக்கு நாய்கள் தொடர்ந்தும் குரைக்கவே இதயம் இன்னும் வேகமாக அடித்துக்கொண்டது. "எல்லாமே துலைஞ்சுது" என்றவள் ஒழுங்கையில் சென்று பார்ப்பதற்காக வெளியே ஓடிவந்தாள்.

உயரமான ஒரு இராணுவத்தினன் தலைப்பாகை அணிந்திருந்தான். படலைக்கு மேலால் எட்டிப்பார்த்தவன் அவளைக் கண்டதும் ஆவேசத்தோடு பலமாக ஏதோ கத்தினான். இன்னொருவன் கட்டையாக இருக்கவேண்டும், படலைக்குக் கீழால் இவளையே முழிச்சு முழிச்சு வெறித்துப் பார்த்தான்.

அவளுக்குத் தனது நிலை விளங்கிவிட்டது.

"கடவுளே.....! அன்சாரைப் பிடிக்கப்போகிறாங்களே இப்ப என்ன செய்யிறது.....?" செய்வதறியாது தவித்தாள்.

முன்பக்கத்தால் போகமுடியாது. நிற்பதும் இருப்பதுமாக முழத்துக்கொரு இராணுவம். ஆனால் இன்னும் ஒருவனும் அவளின் வளவுக்கு வரவில்லை.

"ஒரு வேளை வேறு எதுக்காவது வந்தாங்களோ....? சீ.... இருக்காது. அன்சாரைக் கிணற்றடி வேலியாலை ஓடச்சொல்லுவம். அங்காலை மரவள்ளிக்கை போனானெண்டா பிறகு ஓடித்தப்பிடுவான்."

இப்படி நினைத்தவள் இராணுவம் நிற்கிறதா என்று பார்க்கப் பின்புறம் ஓடினாள். அங்கே.... அன்சாரும் பாய்ந்தோட வந்தவன் இராணுவம் நிற்கிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

"பின்புறம் இராணுவம் எதுவும் இன்னமும் வரவில்லை." இப்படித்தான் அவள் நினைத்தாள். அன்சாரும் அங்கே ஒரு இராணுவத்தினனையும் காணவில்லை. "தம்பி....! ஒருத்தனும்



படிப்பகம்

www.padippakam.com



இல்லை ஓடு ராசா....'' இப்படிச் சொன்னவள் அவன் வெளியேறும்வரை காத்திராது குசினிக்குள் ஓடிவந்து, சாப்பாட்டுப் பார்சலை இழுத்து அடுப்புப் புகட்டுக்குக் கீழ் கவிட்டுக் கொட்டினாள். விறகுகளை இழுத்து மேலே போட்டாள்.

“டுமீல்......டுமீல்”

சடசடவென்று துப்பாக்கி வெடித்தது.

அன்சாரிடம் துப்பாக்கியில்லை.... அப்படியானால்....? “ஐயோ....!” என்று கத்தியவள் கிணற்றடிப்பக்கம் ஓடினாள்.... அங்கே.... அவள் கண்ட காட்சி....

அன்சார் இரத்தம் பாய மண்ணில் வீழ்ந்து கிடந்தான். உயிர் இன்னமும் பிரியவில்லை..... உடல் துடித்துக் கொண்டிருந்தது. “ஐயோ.... தம்பி.... நீ செத்துக்கொண்டிருக் கிறியே.... நான் என்ன செய்ய....?” அவளது உள்மனம் ஒப்பாரி வைத்தது.

அவள் கண்முன்னாலேயே.... அந்த உயிர்.... மெல்ல மெல்ல அடங்கி.... ஜடமாகிவிட்டது.

“அன்சார்! இனி அவன் வரமாட்டான்..... சோறு தாங்கோ என்று கேட்கமாட்டான்..... ஏன் உண்ணவே மாட்டான். விடுதலை கேட்டதற்காக இந்த இளம் உள்ளங்கள் வீதியோரங்களிலும், வேலிக்கரைகளிலும் இப்படியா வீழ்ந்து மடிய வேண்டும்....?'' ஒருகணம் சிந்தித்துப் பார்க்கிறாள். சூழலிலுள்ள ஆபத்தை மறந்து வாய்விட்டு அழுதுவிட்டாள்.

இதுவரைக்கும் இந்த நிகழ்வுக்காகவே காத்திருந்த வெறி கொண்ட இராணுவக் கும்பல், பாய்ந்துவந்து அவளைச் சுற்றிக்கொண்டது. மூர்க்கத்தனமாகத் தாக்கிக் கீழே தள்ளியது. மண்டை பிளந்து கன்னம் வழியே இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

இதுவரைக்கும் அச்சத்தால் ஒடுங்கி குரல் அடைத்துப்போய் நின்றிருந்த அவளது குழந்தைகள், முதற்



படிப்பகம்

www.padippakam.com



தடவையாக அவளது நிலையைப் பார்த்து வீரிட்டுக் கத்தத் தொடங்கினார்கள்.

குழந்தைகள் அழுவதைக்கண்டு ஆத்திரமடைந்த ஒரு இராணுவத்தினன் புரியாத பாசையில் பலமாக உறுமிக் கத்தியபடி அவர்களை நெருங்கினான். கையிலே கிடந்த தடி முறியும்வரை குழந்தைகளைத் தாக்கினான். மூத்த மகனைச் சப்பாத்துக் காலால் உதைத்துக் கீழே தள்ளினான்.

வாழ்நாளில் இத்தகைய ஒரு வேதனையை அனுபவித்திருக்க முடியாத அவளது கடைசிக் குழந்தை..... அலறித்துடித்து..... தாயை நோக்கி ஓடியது. அஞ்சி, ஒடுங்கி, அலறித்துடித்து வரும் அக்குழந்தையை அணைத்துக்கொள்ள முடியாத அந்த அபலையின் வாய்மட்டும் ஏதோ முணுமுணுத்தது. ஆமாம் அரவணைக்க முடியாதபடி அவளின் கைகள் இரண்டையும் சேர்த்துப் பின்புறமாகக் கட்டியிருந்தார்கள்.

அவள் இதயத்திலிருந்து எழும் இரத்தம் கண்களில் இருந்து தாரை தாரையாக வடிந்துகொண்டிருந்தது. குழந்தை அவளின் கழுத்தைக் கட்டிக்கொண்டது..... வலிக்கும் இடங்களைக் காட்டி "அம்மா..... அம்மா" என்று அழுதது.

இதயம் சுக்கு நூறாகி உதடுகள் துடிக்க.... குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்டாள். மகனை அருகே வரும்படி தலையை ஆட்டினாள். ஆனால் அவனால் எழுந்திருக்கவே முடியவில்லை. விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தான். இவற்றையெல்லாம் அங்கீகரிக்காத அந்தக் கயவர்கள்.... குழந்தையை இழுத்து அப்பால் வீசிவிட்டு, அவளை அடித்து ஜீப்பிலே ஏற்றினார்கள்.

குழந்தைகள் கதறி அழுதார்கள். அவர்களை அணைத்துக்கொள்வதற்கு அன்று பாக்கியத்தின் தாய்கூட வீட்டில் இல்லை. வேடனின் அம்புக்கிலக்காகி குற்றுயிராய் வீழ்ந்து கிடக்கும் தாய்ப்பறவையை அவன் எடுத்துச் செல்லும்போது..... தாயே உலகம் என்றிருந்த அதன் குஞ்சுகள்....



படிப்பகம்

www.padippakam.com



தாய் படும் வேதனையைத் தாங்க முடியாமலும், விரிந்து பரந்த உலகத்திலே தாம் தனித்து விடப்பட்ட அவல நிலையைச் சொல்லமுடியாமலும்..... அச்சத்தினால் அவலக்குரல் எழுப்புவது போல் இருந்தது அந்தக் குழந்தைகளின் கதறல்.

அலறித்துடிக்கும் குழந்தைகளை அநாதைகளாக்கிவிட்டுத் தவித்துப் புலம்பும் தாயைமட்டும் தனியே எடுத்துச் சென்றது அந்தக் கயவர் கூட்டம். இந்த உலகத்தை நான் இனிப் பார்க்கமுடியாது....... இந்த மக்களோடு இனிப்பேசமுடியாது....... அவர்கள் என்னை எதுவும் செய்வார்கள்..... அப்படியானால் எனது குழந்தைகள்.... அவர்கள் இனி அநாதைகளா....? துடித்துப் போனாள். உயிரோடு தணலிலிட்டது போல் தவித்தாள்....

பாக்கியத்தின் பார்வையிலிருந்து குழந்தைகள் மறைந்துவிட்டனர். "போகட்டும்.....இன்று எத்தனை தமிழ்க் குழந்தைகள் அநாதைகளாகிவிட்டனர். அவர்களோடு இவர்களும் சேர்ந்து கொள்ளட்டும். அடிமைகளாக வாழ்கின்றவரை நாட்டில் அகதிகளும், அநாதைகளும் தானே நிரம்பி வழிவார்கள்." இப்படி நினைத்தவளுக்குத் திடீரென ஒரு தவிப்பு.... ஆசை.... "இப்போதே.... இந்த நிமிடமே சுதந்திர நாடு கிடைத்துவிட்டால்.....? ஏன்..... கிடைக்காமலா போகப் போகிறது? நிச்சயம், இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் சுதந்திர நாடு உருவாகத்தான் போகின்றது. எமது குழந்தைகள் சுதந்திரமாக வாழத்தான் போகிறார்கள். அதுவரைக்கும் அவர்கள் அநாதைகளாகவே வாழட்டும்...." வரப் போகும் பயங்கரங்களைச் சந்திக்க மனதைத் திடப்படுத்திக் கொண்டாள். இராணுவத்தினரின் முட்டல்கள், முறைப்புகள்..... அதட்டல்கள்.....ஏளனங்கள்.... அவள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. ஜீப் இயல்பாக ஓடிக் கொண்டிருந்தது.

நாட்கள் கூடி வாரங்களாய்.... வாரங்கள் மாதங்களாய்.... உருண்டோடின. அந்த ஊரில் பாக்கியத்தைப் பற்றிய கதைகள் சிறிது சிறிதாக அடங்கிக்கொண்டிருந்தன. வந்து போனவர்களும், வருத்தப்பட்டவர்களும் வருவதைக் குறைத்துக் கொண்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



"அவளுக்கு எத்தினை தரம் சொன்னனான். ஒரு மனிசர்.... நாலு விசயம் தெரிஞ்சவை சொன்னாக் கேக்கவேணும் கண்டியோ.... தன்ரை இஷ்டத்துக்கு நடக்க வெளிக்கிட்டா உப்பிடித்தான் நடக்கும்."

"ஓமோம் நாட்டிலை நடப்பிலை என்ன நடக்குதெண்டு தெரிஞ்சு கொண்டுதான் ஒரு விசயத்திலை இறங்கவேணும்...."

"உனக்குத் தெரியுந்தானே சாப்பாடு குடுக்கிறவையளை உவங்கள் கொண்டு போறாங்கள் எண்டு...... இப்ப நீ போய் அங்க இருக்கிறாய்..... இஞ்ச குழந்தைகளின்ரைபாடு ஆர் பாக்கிறது.....?"

"ஓமோம் அந்தப் பேத்திக் கிழவிதான் பெரிய கறுமம்."

"ஏன் அந்த மனிசிக்கென்ன குத்துவலியே.... கட்டேலைபோற காலத்திலை கஞ்சித்தண்ணியைக் குடிச்சுப்போட்டு எங்கையும் ஒதுங்கிக் கிடக்கிறதை விட்டுட்டு அந்த மூண்டோடையும் கிடந்து மாரடிக்க....?" ஆரம்ப நாட்களில் அடித்துப் புரட்டியவர்கள் இப்போது தங்கள் குற்றச்சாட்டுகளைக் குறைத்துக் கொண்டு விட்டனர்.

இராணுவம் மட்டும் அடிக்கடி வந்து அக்குழந்தைகளை அடித்துத் துன்புறுத்திவிட்டுச் செல்லும். ஷெல்லடிகளின் போதும், துப்பாக்கிச் சூடுகளின் போதும் அஞ்சியொளியும் அக்குழந்தைகளை அணைத்துக்கொள்ள அன்னையின் இடத்தை ஆர் நிரப்புவார்....?

ஊர்ப் பெரியவர்கள் முதல் உறவினர்கள் வரை பாக்கியத்தை விடுதலை செய்ய எடுத்த முயற்சிகள் எதுவுமே பலனளிக்கவில்லை. பாக்கியத்தின் தாய் இடையிடையே குழந்தைகளைக் கூட்டிப்போய் முகாமிலிருக்கும் தாயைக் காட்டி வந்தாள். கண்டவுடன் அவர்கள் கொள்ளும் களிப்பும்.... பிரிந்து வரும்போது படும் வேதனையும்.... அழுது குழறி கடைசிக் குழந்தை தாயைப் பிரிந்துவர மறுத்துவிடும்.

"அம்மா.... உனக்கு என்னிலை ஆத்திரமிருக்கலாம்.... அதுகள்

www.padippakam.com



சின்னனுகள், ஏதும் பிழைவிட்டாலும் அடிச்சுப் போடாதை.... நீயும் அடிச்சால் அதுகள் ஆருட்டைப் போகுங்கள்....?'' குழந்தைகளைக் கவனமாய் வளர்க்கும்படி தாயிடம் மன்றாடுவாள்.

தினசரி வீட்டில் அந்தக் குழந்தைகள் தாயைப்பற்றிக் கதைத்துக் கொண்டே இருப்பார்கள். இராணுவம் வந்ததையும், தம்மையும் தாயையும் தாக்கியதையும், பின்னர் தாயை ஜீப்பில் ஏற்றிச் சென்றதையும் நினைத்து அழுவார்கள். ஆயினும் தாய் இல்லாமலே காலத்தை ஓட்ட அந்தக் குழந்தைகள் கற்றுக்கொண்டு விட்டார்கள்.

எதிர்பாராத விதமாகப் பாக்கியம் ஒருநாள் விடுதலை செய்யப்பட்டு வீடு வந்தாள். தாய்ப்பாசத்திற்காகவே ஏங்கிக்கொண்டிருந்த அவளது குழந்தைகள் தாயைக் கண்டதும் தாவி ஓடிச்சென்று தழுவிக்கொண்டன. பாக்கியம் ஆவல் பொங்க அவர்களை அணைத்து முத்தமிட்டாள். குழந்தைகளும் பாக்கியமும் கொஞ்சிக் குலவுவதைக் கண்ட அவளது தாய் கடந்தகால வேதனைகளையும் அவளது வாழ்க்கையையும் எண்ணிக் கண்ணீர் விட்டாள்.

அந்தக் கயவர்கள் மத்தியில் பாக்கியம் பட்ட வேதனைகள்.... சொல்லித் துயராறக் கூடியவையா அவை.....? அவள் அனுபவித்த வேதனைகளை விடவும் அங்கே அடைபட்டிருக்கும் இளைஞர்களுக்கு நடைபெறும் சித்திரவதைகளும்..... அவர்களின் அலறல் ஒலியுமே அவளை வெகுவாக வேதனைப்படுத்தியது.

அவள் கண்முன்னாலேயே எத்தனை இளைஞர்கள் தலைகீழாகத் தொங்கியபடி அடிவாங்கினார்கள். கும்பிட்டு மன்றாடிக் குழறியவர்கள், மண்டை பிளந்து.... இரத்தம் வழியும்.... அதனாலென்ன, மயங்கிவிழும்வரை அந்த மடையர்கள் தாக்குவதை நிறுத்தமாட்டார்கள்.

இரவின் அமைதியைக் குலைத்தபடி எழுந்துவரும் ஐயோ..... அம்மா.... அம்மா..... என்ற அலறல்கள்..... இதயத்தையே



படிப்பகம்

www.padippakam.com



பிளக்கவைக்கும் அந்தக் கதறல்கள்..... அடியின் அகோரத்தால் சிறிது சிறிதாகக் குறைந்து..... முனகலாகக் கேட்கும். எத்தனையோ இரவுகள் எழுந்து அழுதிருப்பாள். அப்போதெல்லாம் அந்த இளைஞர்களின் உயிர் பிரிந்துவிட வேண்டும் என்றுதான் அவள் பிரார்த்திப்பாளே தவிர வேறொன்றும் செய்யமாட்டாள். சிறிதுநேரம் யோசித்துவிட்டுப் படுத்துக் கொள்வாள். திடுக்குற்று விழித்துக் கொண்டால் மீண்டும் அறைச் சுவர்களையும் ஊடுருவி.... அவளிதயத்தைத் துளைத்துத் துகள்களாக்கும் அதே அலறல்கள்..... அதே முனகல்கள்.....

விடுதலையாகி வந்தவள் ஊருக்குப் பயந்து வீட்டோடு முடங்கிப்போகவில்லை. போராளிக்கு உணவுகொடுப்பது முதல் பலதரப்பட்ட வேலைகளையும் முன்னர்போலவே மறைமுகமாகச் செய்துவந்தாள். "எனக்குச் சரியெனப் பட்டதனை நாட்டு விடுதலைக்காக நான் செய்ய ஏன் தயங்கவேண்டும்......? ஆபத்திற்கும் மரணத்திற்கும் அஞ்சி எனது கடமைகளை நான் கைவிட முடியுமா?" தாய் கடிந்து கொள்ளும்போது இப்படித் தான் கேட்பாள்.

இத்தனைக்கும் எதிரிகளும், துரோகிகளும் இரவுபகலாக அவள் நடத்தைகளைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். இராணுவம் விட்டாலும் நாங்கள் விடோமென, துரோகக் கும்பல்கள் அவளைத் துரத்திக்கொண்டிருந்தார்கள்.

முன்பு சமூகவிரோதக் கும்பல்களால் நடாத்தப்படும் கூட்டங்களுக்குப் பாக்கியம் போயிருக்கிறாள். அங்கே.... அவர்களின் அடாவடித்தனங்கள் பற்றியும் படுகொலைகள் பற்றியும் விளக்கம் கேட்பாள். அவற்றிற்கெல்லாம் பதில்கூற முடியாத அக்கும்பல்களுக்கு அவளைப் பகைத்துக்கொள்வதைத் தவிர வேறு வழி தெரிவதில்லை.

இப்பொழுது சமூகவிரோதக் கும்பல்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களைப் படுகொலை செய்து கொண்டிருக்கின்றன. அவளுக்கு எந்த நேரமும் எதுவும் நடக்கலாம். அவளை வெளிநாடு போகும்படி தாயும்



படிப்பகம்

www.padippakam.com



உறவினர்களும் வற்புறுத்தினர் "தேசத்தை விற்றுவிட்ட இந்தத் துரோகிகளுக்குப் பயந்து என்நாட்டை விட்டு நான் ஏன் போகவேண்டும்?'' திருப்பிக்கேட்டவளை, மாற்ற முடியாது என்று எண்ணிய அவளின் தாய் துக்கத்தை அடக்கிக் கொண்டாள்.

காலை ஒன்பதுமணி இருக்கும்..... அன்று பாக்கியம் வீட்டில் இல்லை. கடைசிக் குழந்தையையும் கூட்டிக்கொண்டு வெளியே போயிருந்தாள். சோதனைகளின் பொழுது இராணுவத்தினரின் தொல்லைகளைத் தவிர்ப்பதற்காக, அவள் எங்கு சென்றாலும் தனது கடைசிக் குழந்தையைக் கூட்டிச்செல்வது வழக்கம். ஆட்டுக்குக் குழை ஒடித்துக்கொண்டிருந்த அவளது மூத்த மகன் வாகனச்சத்தம் கேட்டு வெளியே ஓடிவந்தான்..... படலைக்கு வெளியே வான் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் படலையைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தார்கள்.

வந்தவர்களில் ஒருவன் பையனைப் பிடித்து ஒரு உலுப்பு உலுப்பி "அம்மா எங்கே?'' என்று உறுமினான். "அம்மா வீட்டில் இல்லை." சொன்னவனுக்கு உடல் நடுங்கி வியர்த்துக் கொட்டியது.

பையனின் சேட்டைப் பிடித்து உலுப்பிக் கன்னத்திலே அறைந்தான். "ம்.... சொல்லு அம்மா எங்கே.....?" "அ ம்...மா ...ஆ...ஸ்பத்திரிக்குப் போட்டா.'' பையன் அழுதழுது தடுமாறியபடி கூறினான். யார் கேட்டாலும் அப்படித்தான் கூறும்படி பாக்கியம் சொல்லியிருந்தாள். "எப்ப வருவா...?'' மீண்டும் உறுமினான்.... "எ...எ... எப்பவருவனெண்டு சொல்லேல்ல." சிறிது தாமதித்தவன் அவன் கையை ஓங்கவே "மத்தியானம் வந்திடுவா" என்றான்.

பையனை விட்டுவிட்டுத் தமக்குள் ஏதோ பேசிக்கொண்டார்கள். பையனின் பதில் திருப்தி அளிக்கவில்லைப் போலும்....ஒருவன் உள்ளே சென்று.... சிறிது நேரத்தில் திரும்பி வந்தான். பின் நால்வரும் அங்கிருந்து வெளியேறினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



கடைக்குப் போயிருந்த பாக்கியத்தின் தாய் அப்போது தான் பதைபதைத்து ஓடிவந்தாள். “என்ன, தம்பியவ ஆரைத்தேடுறியள்.....?” என்றாள். இறுதியாகப் போனவன் ஒருமுறை திரும்பி.... அவளை எரித்துவிடுவதுபோல் பார்த்தான். பின் வேகமாகச் சென்று வானில் ஏறிக்கொண்டான்.

எதுவும் புரியாது விழித்தவள், பையன் கூறியவற்றைக் கேட்டதும் தலையில் அடித்துப் புலம்பினாள்.

மதியம் பன்னிரண்டு மணியிருக்கும் பாக்கியம் வந்தாள். வந்ததும் வராததுமாக அவளது தாய் அங்கு நடந்தவற்றைக் கூறி அழுது புலம்பினாள். மகனும் அழுதழுது ஒன்றும்விடாமல் தாய்க்குக் கூறினான். பாக்கியத்திற்கு நிலைமை ஓரளவு விளங்கிவிட்டது. ஆனாலும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை...மகனை அணைத்து ஆறுதல் கூறினாள். “உதுக்குப் போய் இப்படிப் பயப்பிடுறியளே....? அவங்கள் அப்பிடித்தான் வெருட்டுவாங்கள். வரட்டும் நான் கதைக்கிறேன்.” சொல்லிவிட்டுக் கால்முகம் கழுவ கிணற்றடிக்குச் சென்றாள்.

வெளியே வான் வந்து நிற்பது கேட்டது. அவள் வந்து விட்டதை அந்தக் கும்பல் முன்னரே அறிந்திருக்க வேண்டும். யாரையும் எதுவும் கேட்காமல் உடனடியாக வீட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். நாய் ஒவ்வொருவரையும் கடித்துக் குதறுவது போல் பாய்ந்து பாய்ந்து குரைத்தது. பாக்கியம் கிணற்றடியில் நிற்பதைக் கண்ட ஒருவன் பாய்ந்து வந்து அவளின் கையைப் பிடித்தான். “சீ விடடா....” என்று உதறியவள் அவனைக் கீழே தள்ளிவிட்டாள். “டேய் இஞ்சவாங்கோ... இஞ்சை நிற்கிறாள்....” கீழே கிடந்தவன் கத்தினான்.

வேலிக்கு மேலால் ஓரிரு தலைகள் எட்டிப் பார்த்தன. அயல் வீட்டாருக்கு விசயம் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் ஒருவருக்கும் உள்ளே வரத் தைரியம் இல்லை.

வீட்டிற்குள் இருந்து ஓடிவந்த இருவர் அவளைப்



படிப்பகம்

www.padippakam.com



பிடித்துக்கொண்டார்கள். கைகள் இரண்டையும் இணைத்துப் பின்புறமாகக் கட்டினார்கள். அவள் திமிறினாள்.... விடுவிக்க முனைந்தாள்....ஆனால் அவர்கள் இருவரினதும் பிடி பலமாக இருந்தது.

கீழே கிடந்தவன் அவளை முறைத்துப் பார்த்தான். எழுந்துவந்து ஆத்திரம் தீர அவள் கன்னங்களில் மாறி மாறி அறைந்தான். தாயை அடிப்பதைக் கண்டதும் அவளின் குழந்தைகள் வீரிட்டுக் கத்தினார்கள். பாக்கியத்தின் தாய் ஓடிவந்தாள். "ஐயோ... அவளை ஒண்டுஞ் செய்யாதேங்கோ.....!" கும்பிட்டு மன்றாடிக் குழறினாள். அதற்குள் அங்கு வந்த ஒருவன், அவன்தான் அந்தக்கும்பலின் தலைவனாக இருக்கவேண்டும். "டேய்....! ஏண்டா பாத்துக்கொண்டு நிக்கிறியள். இழுத்துக்கொண்டாறதுக்கு.....?" கூறியவன் பல்லை நறநறவெனக் கடித்தபடி அவளை ஏற இறங்கப் பார்த்தான். பின் தானே அவளை வானைநோக்கி இழுத்துச் சென்றான். குழந்தைகள் அவளின் தாயுடன் படலைவரை குழறியபடி ஓடினார்கள். பாக்கியம் ஒருமுறை அவர்களைத் திரும்பிப் பார்த்தாள்...... அவள் கண்களில் இருந்து நீர் வடிந்தது.

வானடிக்குச் சென்றதும் "ம்.....ஏறு" கூட்டிச் சென்றவன் கத்தினான். அவள் ஏறவில்லை. பலவந்தமாக அவளைத் தூக்கி உள்ளே ஏத்தினார்கள்.... குழந்தைகளிடம் இருந்தும் தாயிடமிருந்தும் அவளைப் பிரித்துக்கொண்டு அந்த வான் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது.

அயலவர்கள் கூடிவிட்டனர். பாக்கியத்தின் தாய் மண்ணிலே புரண்டு அழுதாள். குழந்தைகள் துடித்துப் பதைத்துக் கதறினார்கள்.

பாக்கியத்தை ஏற்றிச்சென்ற வான் சற்றுத் தூரத்திலுள்ள ஒரு ஒழுங்கை முகப்பிலே சென்று திரும்பி நின்றது. கீழே இறங்கிக் கொண்ட ஒருவன் அவளைப் பார்த்து "இறங்கு" என்று உறுமினான். அவள் இறங்கவில்லை. "இறங்கடி கீழை" மறுபடியும் கத்தினான். வெறுப்போடு அவனை நிமிர்ந்து பார்த்தவள் இறங்கவில்லை. ஆத்திரமடைந்த ஒருவன்

உள்ளேயிருந்து அவளைப் பலவந்தமாகத் தள்ளிவிட்டான். கீழே விழுந்தவளுக்கு வாகனத்தின் கதவு பலமாகத் தாக்கியது. வேதனையை முகத்தில் காட்டிக் கொள்ளாமல் "எதற்காக என்னைக் கொண்டுவந்தீங்கள்....?" என்றாள்.

"ம்.... சுடத்தான்."

"அதுதான் ஏன் எண்டு கேக்கிறன்?"

"என்னடி நடிக்கிறாய். நீ புலியளுக்குச் சாப்பாடு குடுக்கிறது தெரியாதெண்டு நினைச்சுக் கொண்டியோ....?"

"அதுக்கென்ன.... நாட்டுக்காகப் போராடுகிறவங்களுக்கு உதவி செய்யிறதில என்ன பிழை....?"

"பொத்தடி வாயை பிழை சரி கதைக்க வந்திட்டா....." உறுமியவன் அவளைத் தரதரவென்று இழுத்துச் சென்று வேலியோடு கட்டினான்.

கண்களை மூடிக்கொண்ட அவளுக்கு, அழுது புலம்பும் குழந்தைகளும் தாயுமே கண்ணில் நின்றனர்.

அதைத் தொடர்ந்து.....

இரண்டு வேட்டோசைகளின் அதிர்வு அந்த ஊரின் தொலைதூரம் பாய்ந்தது.

வீட்டின் படலையில் நின்ற பாக்கியத்தின் தாய் புரிந்து கொண்டவளாய் "ஐ.....யோ.....! மகளே.....!" என்று தலையிலடித்து ஓலமிட்டாள்.

ஆச்சியின் சேலைத் தலைப்பைப் பற்றிக்கொண்டு அந்த அநாதைக் குழந்தைகள்.....

✸

www.padippakam.com



*சிறுகதை*

# சின்னப் பூக்களுடன் சில பொழுது

இரவு 7.30 மணி இருக்கும். முற்றத்தில் நல்ல நிலவு எறித்துக் கொண்டிருக்கிறது. நிலவுதான் எவ்வளவு அழகானது! ஆனால் நிலவால் பூமியில் விழும் நிழல்கள் ஒவ்வொன்றும் அச்சத்தை உண்டு பண்ணுகின்ற ஒரு நிலையை சந்தர்ப்பங்கள் மனிதருக்கு ஏற்படுத்தி விடுகின்றன.

முற்றத்தில் ஒரு சாக்கைப் போட்டு, அதன்மேல் ஓரங்கள் எல்லாம் கிழிந்து தொங்கும் ஓலைப்பாய் ஒன்றை விரித்து, ராசலிங்கம் படுத்திருக்கிறான். பக்கத்தில் மகள் மீரா தகப்பனின் கால்மாட்டில் இருந்தபடி சிணுங்கிச் சிணுங்கி, சிறிது நேரம் காலைப் பிடிப்பதும் பின் தந்தையை ஏதேனும் கேள்விகள் கேட்பதும், தந்தை நினைவூட்ட மறுபடியும் காலைப் பிடிப்பதுமாக இருக்கிறாள்.

அவளின் வயதிற்கு மீறிய கேள்விகள் ராசலிங்கத்திற்கு எரிச்சலை உண்டு பண்ணினாலும், கூடவே அவளின்



படிப்பகம்

www.padippakam.com



தீவிரமான சிந்தனைகளால் வியப்பும் ஆனந்தமும் அடைகிறான்.

மீராவிற்கு இப்போதுதான் எட்டு வயது ஆரம்பித்துள்ளது. ஆனால் தற்போதைய அநேகமான பிள்ளைகளில் காணப்படும் வயதிற்கு மீறிய அதீத வளர்ச்சி இவளிடமும் உள்ளது. இவளைப் பார்த்தவர்கள் யாரும் பத்து வயதிற்குக் குறைவாக மதிப்பிட மாட்டார்கள். வறுமையில்வாடும் குடும்பமாக இருந்தாலும் சில இடங்களில் உள்ள குழந்தைகளில் செல்வச்செழிப்பு மிளிர்வது இயற்கையே.

அடித்து ஓய்ந்த இந்தியப்படையின் கோரப் புயலுக்கு அந்தச் சுற்றாடலில் தப்பியிருந்தது ராசலிங்கத்தின் குடிசையும் அருகில் இருந்த தறுமுவின் கொட்டிலும்தான். ஏனைய வீடுகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகி விட்டன. இந்தியப்படையின் கணிப்பின்படி கட்டாயம் எரிக்கப்பட வேண்டியது ராசலிங்கத்தின் வீடுதான். யார் செய்த புண்ணியமோ அந்த வீடு அந்த இடத்தில் இன்னமும் அப்படியே இருக்கிறது.

ராணுவ முகாமின் பாதுகாப்புக் கருதி, முகாமில் இருந்தபடியே சுற்றியுள்ள எல்லா இடங்களையும் கண்காணிப்பதற்காக, முகாமைச் சுற்றியுள்ள வீடுகளை எல்லாம் இந்தியப்படை எரித்திருந்தது. முகாமில் இருந்து நியாயமான தொலைவில் இருந்தபடியால்தான் இந்த வீடு தப்பியது என்று கூறவேண்டும்.

ராசலிங்கத்திற்கு நான்கு பிள்ளைகள். இரண்டு பெண்களும் இரண்டு பையன்களும். மீராதான் கடைசி. மூத்த பையன் இந்தியப் படையின் கெடுபிடிகளுக்குப் பின்னர் இரவில் வீட்டில் படுப்பதில்லை. இவர்கள் வீட்டிற்குக் கிழக்குப் புறமாக அதிக தூரம் தள்ளி உள்ள பிரதேசம் காடு மண்டிக் கிடக்கிறது. அங்கேதான் ராசலிங்கத்தின் ஒன்றுவிட்ட தமையனின் வீடு உள்ளது. மூத்த மகன் இரவில் அங்கேதான் போய்ப்படுப்பது வழக்கம்.



படிப்பகம்

"சும்மா விசர்க் கேள்வியள் கேக்காமல் பேசாமல் படுபாப்பம். மனிசர் பகல் முழுவதும் அடியன் அடிச்சுப்போட்டு அலுப்பிலை வந்து எப்பனுக்கு கிடப்பமெண்டா அதுக்கை உன்ரை பாடு பெரும்பாடு"

"இஞ்சரேப்பா நீங்கள் என்னத்துக்கு உதிலை கிடக்கிறியள். அவள் சாப்பிடாட்டிக் கிடக்கட்டும். நீங்கள் எழும்பி வாருங்கோ பாப்பம்."

மகள், கணவனை ஆக்கினைப் படுத்துவதை அறிந்த மீராவின் தாய் கமலா அடுப்படியில் இருந்தபடி குரல் கொடுத்தாள்.

"இஞ்சே மீரா! போய்ச்சாப்பிடன். நேரமெல்லே எட்டு மணி ஆகுது." மகளின் பிடிவாதத்திற்கு ஈடுகொடுக்க முடியாத ராசலிங்கம் சற்றுக் குரலைத் தாழ்த்திக் கெஞ்சலாகக் கோரினான்.

"ஊஹூம்..... அகிலன் அண்ணா வரட்டுக்கும்."

அகிலன் அந்தக் கிராமத்திற்குப் பொறுப்பான விடுதலைப் புலிப் போராளி. சண்டை தொடங்கிய போது ஆதரவாளர் என்று கருதியவர்கள் எல்லாம் கையை விரித்து முகத்தைத்திருப்பி முணுமுணுக்க, ராசலிங்கம் போன்ற ஒரு சிலரின் குடும்பங்கள்தான் இவர்களுக்குப் புகலிடம் கொடுத்தன.

அந்த ஊரில் ராணுவத்தோடு தொடர்பு கொண்டிருந்தவர்களுக்கும் துரோகக் கும்பலைச் சேர்ந்தவர்களுக்கும் ஏனைய சமூக விரோதிகளுக்கும் இவன்தான் மரண தண்டனை அளித்து வந்தான். ராணுவத்திற்கெதிரான தாக்குதல்களில் மும்முரமாக ஈடுபட்டான்.

ராணுவம் அந்த ஊரில் உள்ளவர்களை விசாரணைக்காகப் பிடித்தபோதெல்லாம் இவன் பெயரைச் சொல்லித்தான் கேட்டுக் கேட்டு அடித்தது. அந்த ஊரில்

www.padippakam.com



எல்லோருக்குமே அகிலன் என்ற பெயர் தெரிந்திருந்தது.

வழமையாக எப்போதும் ராசலிங்கம் வீட்டில்தான் அகிலனின் இரவுச் சாப்பாடு இருக்கும். தான் சாப்பிட்டு விட்டு தன் சகாக்கள் இருவருக்கும் பார்சல் கொண்டு போவான். ராணுவம் வந்து போகும் பகுதியாக இருந்த போதும், ராணுவத்திற்குத் தெரியாமல் இரவில் இவனும் வந்து போனான்.

எப்படித்தான் இத்தகைய பாசப் பிணைப்பு ஏற்பட்டது என்று வீட்டாரே வியக்கும் அளவுக்குச் சிறுமி மீரா அகிலன் மீது உயிரையே வைத்திருந்தாள். இரவுகளில் வீட்டிற்கு வருவதும், இராணுவம் தேடுவதாக வீட்டாரும் ஊராரும் கூறுவதும், தாய் தந்தையரோடு வாழாமல் தனியனாய் திரிவதும், ஆபத்தை எதிர்நோக்கியபடியே கொள்கைக்காக எப்போதும் ஆசா பாசங்களின்றி வாழ்வதும், குறிப்பாக தனது மூத்த தமையனின் வயதை ஒத்தவனாக இருப்பதாலும் இத்தகைய ஒரு பிணைப்பு ஏற்பட்டிருக்கலாம்.

அகிலன் வராத இரவுகளில் இவளைச் சாப்பிட வைப்பதே தாய்க்குப் பெரும்பாடாகிவிடும். சில சமயங்களில் பிடிவாதமாக சாப்பிடாமலேயே படுத்துவிடுவாள்.

நேரம் எட்டரை மணிக்கு மேலிருக்கும். தூரவுமில்லாமல் கிட்டவுமில்லாமல் ஒற்றையாக ஒரு நாய் மட்டும் குரைக்கிறது.

மீரா தந்தைக்குப் பக்கத்திலேயே உறங்கிப் போனாள். ராசலிங்கத்திற்கு அவள் சாப்பிடாமல் தூங்குவதைப் பார்க்க என்னவோ போலிருந்தது. அகிலன் வராததும் ஒரே யோசனையைக் கொடுத்தது. "ஒருவேளை அகிலன் வராமல் விட்டு விடுவானோ.... அப்படியானால் சாப்பாடு....? சாப்பிடாமல் கூடவா இருப்பார்கள்? இதெல்லாம் அவர்களுக்குப் புதிதா என்ன?"

அயல் வீட்டு நாய்கள் ஒன்றிரண்டு குலைக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



மீரா விழித்துக்கொண்டுவிட்டாள். "அப்பா அகிலன் அண்ணா இன்னும் வரேலையே....?" தலையை நிமிர்த்திக் கேட்டாள்.

ராசலிங்கத்திற்குப் பெரிய சங்கடமாகி விட்டது.

"அகிலன் அண்ணா இண்டைக்கு வரமாட்டார். நீ வா, எழும்பு சாப்பிட்டிட்டுப் படு."

ராசலிங்கம் சொல்லிக் கொண்டிருந்த போதே படலை திறபடும் சத்தம் கேட்டது.

மீரா துடித்தெழும்பி துள்ளிக் கொண்டோடினாள். வந்தது அகிலன்தான். கைகள் இரண்டையும் கழுத்தில் போட்டு தாவி ஏறிக்கொண்டாள்.

"பாருங்கோ பாருங்கோ பெட்டையின்டை கொண்டாட்டத்தை" என்று கூறியபடி மீராவின் தாய் கமலாவும் வெளியே வந்தாள்.

"அப்பா பாத்தீங்களே நீங்கள் பொய்தானே சொன்னனீங்கள். அகிலன் அண்ணா வரமாட்டார் எண்டு...?"

"மீரா...! உனக்கு எத்தனை தரம் சொன்னனான் இரவிலை சத்தம் போட்டுக் கத்திக் கதைக்காதை எண்டு. உனக்கு ஆகலுந்தான் செல்லம் மெத்திப் போச்சு. இறங்கு பாப்பம் கீழை."

இரவில் அகிலன் வந்து போவது அக்கம் பக்கத்திற்குத் தெரிந்து விடப்போகிறது என்ற பயத்தில், தாய் மகளை அதட்டினாள்.

அகிலன் மீராவை இறக்கிவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான். அவள் மீண்டும் அவன் மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

"ஏன் தம்பி ஏதும் பிரச்சினையே? சரியாச் சுணங்கிப் போச்சு."



படிப்பகம்

www.padippakam.com



"சீச்....சீ... அப்படி ஒண்டுமில்லை, தூரத்துக்கு போனாப்போலை வரநேரம் போட்டுது."

"நேரம் போட்டுது பிறகேன் பார்த்துக் கொண்டு நிக்கிறாய், தம்பிக்குச் சாப்பாட்டைக் குடன்."

முற்றத்திலே நின்றபடி கதை கேட்டுக் கொண்டு நின்ற மனைவி கமலாவுக்கு ராசலிங்கம் கூறினான். "ஓமோம் வந்திட்டன்" என்றபடி அவள் அடுப்படிக்குள் ஓடினாள்.

"அதுசரி மீரா ஏன் இன்னும் நித்திரை கொள்ளேலை...? நல்லா முளிச்சிருப்பாய் போலை கிடக்கு. கொண்டே சென்றீலை விடுவம்."

"ஓம் தம்பி அதுதான் நல்லது. ஆளைக் கூட்டிக் கொண்டுபோய் நீங்களே வைச்சிருங்கோ. அகிலன் அண்ணை வராமல் சாப்பிடமாட்டன் எண்டு போட்டு உந்த முத்தத்திலையே என்னோடை இருந்திட்டாள்."

மீராவின் தாய் புட்டும் கத்தரிக்காய்க் குழம்பும் முட்டைப் பொரியலும் ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வந்து அகிலனிடம் கொடுத்தாள். "அகிலன் அண்ணா சாப்பிடட்டும். மீரா நீ வா சாப்பிட." மீராவின் தாய் மீராவைச் சாப்பிட அழைத்தாள். அவளோ முடியாது என்று தலையை ஆட்டி விட்டு, அகிலனோடு சேர்ந்து சாப்பிடத் தொடங்கிவிட்டாள். சில சமயங்களில் அவள் அப்படித்தான் சாப்பிடுவது வழக்கம். அதனால் தாயும் எதுவும் பேசாமல் விட்டுவிட்டு மற்றவர்களுக்குப் பார்சல் கட்டுவதற்காகக் குசினிக்குள் போனாள்.

சாப்பிடும்போது கதை கொடுத்துக் குழப்பக் கூடாது என்று எண்ணியபடி ராசலிங்கமும் எழுந்து, சாப்பிடுவதற்காக அடுப்படிக்குள் நுழைந்தான்.

சிறிது நேரம் அந்த வீட்டில் நிலவிய அமைதியைக் குலைப்பது போல் திடீரென்று அயல் வீட்டு நாய்கள் எல்லாம் குரைக்கத் தொடங்கின. அகிலனுக்கு அருகில்



படிப்பகம்

www.padippakam.com



படுத்திருந்தபடி அவன் சாப்பிடுவதையும் குசினி வாசலையுமே மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த ராசலிங்கத்தின் கறுவல் கிழட்டு நாயும் நின்று நின்று பார்த்து, விட்டு விட்டுக் குரைத்தபடி படலைவரை ஓடியது. திடீரென்று எதையோ கண்டது போல் பயங்கரமாகக் குரைத்தது. ராசலிங்கமும் மனைவியும் ஒருங்கே எழுந்து முற்றத்திற்கு ஓடி வந்தனர். பரபரவென்று வேலிகள் எல்லாம் முறிபடும் சத்தமும் கேட்டது. நாய் எல்லாப் புறமும் ஓடி ஓடிக் குரைத்தது.

ராணுவம் வீட்டைச் சுற்றி வளைத்து விட்டது. தான் இனித் தப்ப முடியாது என்பது அகிலனுக்கு விளங்கி விட்டது. அவனது இடுப்பில் பிஸ்ட்டல் இருந்தது. சேட்டை வெளியே விட்டிருந்ததால் அது சாதாரணமாகப் பார்த்த போது துளிகூடத் தெரியவில்லை. குப்பியும் ஒன்றுக்கு இரண்டு இருந்தது.

"தற்போதுள்ள நிலையில் ராணுவத்தை எதிர்த்துச் சுடுவது தகுந்ததல்ல. இருட்டிற்குள் அவர்கள் நிற்பதுகூடத் தெரியவில்லை. எனது பாதுகாப்பிற்காக நான் சுட்டால், அவர்கள் இந்தக் குடும்பத்தையே கண்மண் இல்லாமல் சுட்டுத்தள்ளி விடுவார்கள்."

எவ்வளவு பயங்கரமான சூழ்நிலைகளிலும் கூட முகம் கோணாது தன்னை ஆதரித்து உணவளித்த அந்தக் குடும்பம் தன் கண் முன்னாலேயே சிதைபடுவதை அவன் விரும்பவில்லை.

சிலவேளை அவர்கள் தன்னை இனங்காணாமலும் இருக்கக்கூடும் என்ற அற்ப நம்பிக்கையோடு, உணவைக் குழைத்து மீராவின் வாய்க்குள் வைத்தான். உணவை விழுங்காமலேயே மீரா எதையோ தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று கோடிப்புறத்திலிருந்து முற்றத்திற்குப் பாய்ந்து வந்த இராணுவத்தினன் ஒருவன் அகிலனின் கையைப்



படிப்பகம்

பிடித்தபடி, "அகிலன் அகிலன்" என்று கத்தினான்.

அவன் பிடித்ததுதான் தாமதம் மீரா என்ன நினைத்துக் கொண்டாளோ, துடித்துப் பதைத்து, அகிலனின் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "ஐயோ என்டை அண்ணா.... என்டை அண்ணா.... என்டை அண்ணாவை விடுங்கோ.... என்டை அண்ணாவை ஒண்டுஞ் செய்யாதேங்கோ" என்று கத்தத் தொடங்கி விட்டாள். இதனைச் சிறிதும் எதிர்பாராத அகிலன் மீராவையும் தூக்கியபடி முற்றத்தில் எழுந்து நின்றான்.

அகிலனின் இடுப்பில் பிஸ்ட்டல் இருப்பது மீராவுக்குத் தெரியும். அதனால்தானோ என்னவோ தனது இரண்டு கால்களையும் அவனது இடுப்பைச் சுற்றிப் போட்டபடி இராணுவத்தினரை நெருங்கவிடாது பெரிய சத்தத்தில் கத்தினாள்.

இராணுவத்திற்குப் பெரிய சங்கடமாகி விட்டது. மீராவின் தாயைப் பார்த்து "யார் இது?" என்றான். "எனது மூத்த பிள்ளை" என்றபடி அவளும் அழத் தொடங்கினாள்

"டேய் உன்டை பேர் என்ன?" இராணுவத் தலைவன் அகிலனைப் பார்த்து உறுமினான். அகிலன் எதுவும் யோசிக்காமலேயே எடுத்த எடுப்பில் "வரதன்" என்று மீராவின் தமையனின் பெயரையே கூறினான்.

"ஐடன்டிக் காட் இருக்கா?"

"ஓம்"

"எங்கை? எடு!"

அகிலன் செய்வதறியாது ராசலிங்கத்தைப் பார்த்தான்.

மீரா கத்தினாள்; "அம்மா அண்ணான்டை ஐடன்டிக் காட்டைக் கொண்டா." குளிக்கும் சந்தர்ப்பங்களில் தமையன் ஐடென்டிக்காட் வைக்கும் இடத்தையும் தாய்க்குக் கூறினாள். அகிலனோ அடுத்த கணம் நிகழப் போகும்

www.padippakam.com



பயங்கரங்களை நினைத்தபடி, அசையாது நின்றான்.

மீராவின் தாய் கமலாவிற்கோ மகனின் ஐடென்டிக்காட் உள்ளே இருக்குமென்பதில் துளிகூட நம்பிக்கையில்லை. ஆனாலும் இருக்கவேண்டும் என உலகிலுள்ள தெய்வங்கள் அனைத்தையும் பிரார்த்தித்தபடி உள்ளே சென்றாள்.

ராசலிங்கத்தின் உள்ளம் மனைவி ஐடென்டிக் காட்டோடு வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டது. மீரா அகிலனின் தோளில் படுத்திருந்தபடி விக்கலெடுத்து பலமாக அழுது கொண்டிருந்தாள். அகிலனும் அவள் இறங்கிவிடக் கூடாது என்ற அங்கலாய்ப்போடு அவளை இறுகப் பற்றிக் கொண்டிருந்தான்.

நின்று கொண்டிருந்த இராணுவத்தினர் ஆளுக்கொரு பக்கமாகத் திண்ணையில் உட்கார்ந்தனர். நாய் குரைத்துக் கொண்டேயிருந்தது. ஒருவன் அகிலனையும் உட்காரும்படி சைகை செய்தான். அகிலன் அவனுக்குச் சற்றுத்தள்ளி திண்ணையில் ஓரமாக உட்கார்ந்தான். ராசலிங்கமும் அமர்ந்தான்.

யார் செய்த புண்ணியமோ அகிலனின் ஆயுள் செய்த அதிர்ஷ்டமோ, வரதனின் ஐடென்டிக்காட் அன்று வீட்டிலேயே இருந்தது. மீராவின் தாய் ஐடென்டிக் காட்டை இராணுவத்தினனிடம் கொடுத்தாள்.

ஐடென்டிக்காட்டை வாங்கியவன் அகிலனையும் படத்தையுமே உற்று உற்றுப் பார்த்தான். மற்றைய வர்களுக்கும் காட்டினான். தமக்குள் ஏதோ பேசி விட்டுத் திடீரென்று "யார் இது?" என்று படத்தைக் காட்டி அகிலனிடம் கேட்டான்.

"நான் தான் சேர்." அகிலன் பதில் சொன்னான். அவனோ நம்பாமல் மீண்டும் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். அகிலனின் இதயம் திக் திக் என்று அடித்துக் கொண்டது. படத்திலிருப்பது மகன்தான் என்று அகிலனைக் குறிப்பிட்டபடி மீராவின் தாய் அழுதாள்.

www.padippakam.com



ஐடென்டிக்காட்டிலுள்ள வரதனின் படத்திற்கும் தற்போதைய அகிலனின் உருவத்திற்கும் வேறுபாடு குறைவுதான். ஆனாலும் அடுத்தகணம் ஏது நிகழுமோ என இதயங்கள் அஞ்சித் தவித்தன.

ஐடென்டிக்காட்டை வைத்திருந்தவன் அதனை அகிலனிடம் கொடுத்தான்.

"உனக்கு அகிலனைத் தெரியுமா?" என்றான்.

"தெரியாது சேர்."

"என்னடா தெரியாது. அவன் ஒவ்வொரு நாளும் இரவிலை இஞ்சை வந்திட்டுப் போறவனாம். பொய் சொன்னியெண்டா உன்னைக் கொண்டே உரிச்சுப்போடுவம்."

"ஐயோ என்டை அண்ணாவைக் கொண்டு போகாதேங்கோ. என்டை அண்ணாவைக் கொண்டு போகாதேங்கோ என்டை அண்ணாவை நான் விடமாட்டேன். நான் விடமாட்டன், அம்மா அண்ணாவைக் கொண்டு போகவேண்டாம் எண்டு சொல்லு." மீரா முன்னரைப் போல மீண்டும் கத்தி அழுதாள்.

"ஐயோ அந்தப் பெடியனைச் சத்தியமா எங்களுக்குத் தெரியாதையா. உங்கினை சனம் பறையக் கேள்விப்பட்டிருக்கிறம் தான். ஆனா நாங்களெண்டா ஒருநாளும் கண்ணாலை காணேலை. எங்கள்ளை ஆத்திரப்பட்டாக்கும் ஆரோ சும்மா கதைகட்டி விட்டிருக்கினம்" ராசலிங்கத்தின் வார்த்தைகள் மன்றாட்டமாக வெளிவந்தன.

"சரி சரி பாப்பா அழாதை; நாங்கள் உன்டை அண்ணையை ஒண்டும் பண்ணமாட்டம்.... உங்கள்ளை யாராவது இனிமேல் அகிலனை எங்கையாவது கண்டா உடனை எங்களிட்டை வந்து சொல்லிப்போட வேணும்"



படிப்பகம்

www.padippakam.com



என்றவன், ராசலிங்கத்தைப் பார்த்து "உன் பெயர் என்ன" என்றான். ராசலிங்கம் தன் பெயரைச் சொல்லவே "ராசலிங்கம்" என்று தன் வாய்க்குள் முணுமுணுத்தபடி, "முன்னமே கேள்விப்பட்டிருக்கிறேன்" என்பதுபோல் தலையை ஆட்டினான்.

"இன்னொரு முறை உங்களைப் பத்தி புகார் வந்துதெண்டா குடும்பத்தோட கொளுத்திப் போடுவம்." என்று உறுமிய இராணுவத் தலைவன், சுற்றுமுற்றும் நின்றிருந்த ஏனையவர்களையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து போனான்.

அயல் வீட்டு நாய்களின் குரைப்பு அடங்கிய போதுதான் அந்த வீட்டில் நின்றுபோயிருந்த இதயங்கள் மீண்டும் இயங்கத்தொடங்கின.

✸



படிப்பகம்

www.padippakam.com



# களத்திலிருந்து ஒரு கடிதம்

*தமிழீழம்*
***01-08-89***

*அன்புள்ள தம்பிக்கு,*

*நான் உனக்குக் கடிதம் எழுதியதை அறிந்தால் என்னோடு கதைப்பதையே வீட்டார் நிறுத்தி விடுவார்கள். எனக்கு உன்மீது உள்ள பாசத்தால் மட்டும் நான் இதை எழுதவில்லை. என் தேசத்திற்கு இன்று நீ இழைத்துக் கொண்டு இருக்கும் மிக மோசமான செயல்களை உணர்த்தவே இதை எழுதுகிறேன். தனிமையில் இருந்து படித்துவிட்டுத் துயரப்படுவாயோ, இல்லை நண்பர்கள் புடைசூழ உரக்கப் படித்துப் பரிகசிப்பாயோ நானறியேன்.*

*சிலவேளை நீ இதைப் படிக்காமலும் விடலாம்.*

*நாலு வரியைப் படித்ததுமே உனக்குப் புரிந்திருக்கும் அண்ணாவிற்குக் கல்யாணம் என்றோ, அக்கா வெளிநாடு சென்றுவிட்டா என்றோ, இல்லாவிடின் அப்பா படுத்த படுக்கையாக ஆஸ்பத்திரியில் உள்ளார் என்றோ, நான் எழுதவில்லை என்று. அவற்றைப் பற்றி அலசவோ எழுதவோ நான் விரும்பவில்லை.*

*உனக்குத் தெரியும் இன்றைய தமிழ் மக்களின் நிலை. நாங்கள் பொழுதுபோக்கிற்காகப் போராடவில்லை. உரிமைகள் பறிக்கப்பட்டு, உடைமைகள் எரிக்கப்பட்டு காலங் காலமாக அடக்கப்பட்டோம், ஒடுக்கப்பட்டோம்.*



படிப்பகம்

www.padippakam.com



இதை எதிர்த்தே ஆயுதம் ஏந்திப் போராடுகின்றோம். எல்லாமே உனக்குத் தெரியும். பிறகும் ஏன் நீ இப்படிச் செய்தாய்....? எமது இலட்சியத்தை அடைவதற்கும் மக்களைக் காப்பாற்றுவதற்கும் தவிர்க்க முடியாததாக இருந்த நிலையில், நாம் சமூகவிரோதக் கும்பல்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க நேர்ந்த போது நீ எவ்வளவு வேதனைப்பட்டாய். ஈ.பி.ஆர்.எல்.எவ்.உம் ரெலோவும் இந்தியாவின் உதவியை எதிர்பார்த்தபோதும், அமிர்தலிங்கம் சென்னையிலிருந்து அறிக்கை விடும்போதும் தேசத்திற்கு இவர்கள் செய்யும் துரோகத்தனத்தைப் பற்றி எவ்வளவு பேசியிருப்பாய். இவற்றை எல்லாம் சிந்தித்துக் கதைக்கத் தெரிந்த உனக்கு செயற்பாடுகளை மட்டும் ஏன் சிந்தித்துச் செய்யமுடியாமல் போய் விட்டது?

வீட்டில் அம்மா அவ்வளவு அலட்டிக் கொள்ளா விட்டாலும் அப்பா எங்களை வளர்த்த விதம் உனக்கே தெரியும். சுயநலத்தைப் பற்றி அவர் சொல்லித்தந்ததே இல்லை. பக்கத்து வீட்டில் நடக்கும் படத்தைப் பார்க்க நமக்கு அனுமதி தந்ததே இல்லை. ஆனால் எங்கோ தொலைவில் மறைவில் நடக்கும் இரகசியக் கூட்டங்களிற்கு அவரின் அனுமதியோடு எத்தனை தடவை போய் வந்திருக்கிறோம். திருவிழாவிற்கும் திருமண வீடுகளிற்கும் செல்வதைவிடவும், ஊர்வலங்களுக்கும் உண்ணா விரதங்களுக்கும்தானே அவர் உற்சாகம் ஊட்டுவார். "ஏன் நீங்களும் இயக்கத்தில் சேரலாந்தானே" என்று எத்தனை தடவை நீயே அப்பாவைக் கேட்டிருப்பாய். நாட்டிற்காகப் போராட இயக்கத்தில்தான் சேரவேண்டும் என்றில்லை. வெளியே இருந்தபடியும் வேலை செய்யமுடியும். உங்களுக்கு உங்கள் கடமையை உணர்த்தி, பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு போராடக் கூடிய போராளிகளை உருவாக்குவதும் கூட ஒரு வேலைதான். இப்படிச் சொல்லிய அப்பா நான் இயக்கத்தில் சேர்ந்த போது எவ்வளவு சந்தோசப் பட்டிருப்பார்; பெருமைப்பட்டிருப்பார். பெருமைகளை



படிப்பகம்

www.padippakam.com



எல்லாம் தகர்த்தெறிவது போலல்லவா உனது செயல் அவரைக் கூனிக் குறுகித் தலைகுனிய வைத்துவிட்டது.

எனக்குத் தெரியும் நீ தேடிப் போகவில்லை, திருட்டுப் போய்விட்டாய் என்று. உன்னைத்தான் அவர்களால் கட்டிப் போடமுடியும். உன் சிந்தனைகளைக் கட்டிப் போட முடியாது. அவர்களிடம் இருந்து அகன்று வருவதற்கு அவகாசம் இருந்தும் நீ அலட்சியமாக இருந்து விட்டாய். இதனை அறிந்து அப்பா எவ்வளவு வேதனைப் பட்டார். எங்கள் தேசத்திற்கு எங்கள் மகனே துரோகியாய்ப் போனானே என்று துடிதுடித்துப் போனார். துரோகக் கும்பலின் கொலை, கொள்ளைகள் அதிகரித்துக் காணப்பட்டபோது அவர்களின் அடாவடித்தனங்களை எதிர்த்து அப்பா எத்தனை பேரோடு வாதாடியிருப்பார். தன் பிள்ளைகளை நல்லபடியாக வளர்த்திருக்கிறார்; அவர்கள் நாட்டிற்கு நல்லதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கையில் தானே அப்படிக் கதைத்தார். இப்போது அவர் வாயே திறப்பதில்லை. எப்படிக் கதைக்க முடியும்? ஆனாலும் நீ திருந்தி வெளிவராத நிலையில் உனக்கு மரணதண்டனை வழங்க அவர் தயங்க மாட்டார்.

தொண்டர்படை என்று நீ விரும்பியோ விரும்பாமலோ போயிருக்கலாம். ஆனால் உனக்கு வடிவாய்த் தெரியும் இந்தியா ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிட்டது ஏன் என்று. பிறகெப்படி உன்னால் பிரச்சாரம் செய்ய முடிந்தது, இந்தியாவை விட்டால் ஈழத்தமிழருக்கு வேறு வழியில்லை என்று? இன்று நாட்டில் கொள்ளைகளையும், கொலைகளையும் குத்தகைக்கு எடுத்துச் செய்து கொண்டிருக்கும் இக்கும்பல் உங்களையும் போதைவஸ்துக்கு அடிமையாக்கி, அப்பாவிப் பெண்களைக் கடத்தி வந்து அவர்களின் வாழ்க்கையோடு விளையாடிக் கொண்டு இருக்கின்றார்கள். இவர்களைப் போராளி அமைப்பென்று ஏற்றுக்கொள்ள எப்படி உன்னால் முடிந்தது? இன்று

www.padippakam.com



போட்டியும் பொறாமையும், புரிந்து கொள்ளாத் தன்மையும், சுயநலமுமே உங்களுக்குள் ஊடுருவி உள்ளன. இலட்சியத்தில் தளராத மனவுறுதியுடன் அமைப்பைக் கட்டுப்பாட்டோடு வழி நடத்தக் கூடிய ஒரு தலைவனாலேயே போராட்டத்தைத் தொடராய் வழி நடத்த முடியும். இன்றைய உங்கள் தலைமையின் நிலைமை, உள்ளே இருக்கும் உனக்கு வடிவாகத் தெரியும் என நினைக்கிறேன்.

எனது விளக்கங்கள் உனக்கு வெறுப்பைத் தரலாம். எனக்கு எனது அமைப்பில் பற்றுதல் இருப்பது போல், உனக்கு உனது கும்பலில் பற்றுதல் இருப்பது நியாயமாய்த்தான் படும். பற்று வைத்துப் பாதையைத் தொடரும் அளவிற்கு நீ போகும் இடம் ஒன்றும் புரட்சியானதல்ல. கொல்வதும், வெட்டுவதும், கொள்ளையடிப்பதும் எமது அமைப்பிலும் இருப்பதாகத்தான் உனக்கு உணர்த்தியிருப்பார்கள். நீ ஒன்றும் புதியவனல்ல. எமது அமைப்பைப் பற்றி எடுத்த எடுப்பில் கணிப்பிடுவதற்கு. அமைப்பின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் கதைகதையாகக் கூறுபவன் நீ.

மீண்டும் மீண்டும் படித்துச் சிந்தித்துச் செயற்படுவாய் என்றுதான் எழுதுகின்றேன். சில வேளை சினங்கொண்டு நீ இதைக் கிழித்துப் போட்டுவிட்டுக் கெக்கட்டமிட்டுச் சிரிக்கலாம். கூட இருப்பவர்களும் கொக்கரிக்கலாம், கடிதம் எழுதவும் ஒரு தகுதிவேண்டும் என்று. ஏனென்றால் அவர்களுக்கு எமது அமைப்பைப் பற்றி அப்படித்தான் போதித்திருப்பார்கள்.

தம்பி! வண்டரித்த விதையிலிருந்து வளர்ந்துவிட்ட ஒருசில தேசத் துரோகிகளிற்குப் பின்னால், சிந்தனை இல்லாமல் ஒரு சிறிய கும்பல் செயற்படுவதை நினைத்து நான் ஆத்திர படவில்லை; வேதனைப்படுகிறேன். சந்தர்ப்பவசத்தால் சமூகவிரோதிகளாகிக் கொண்டு இருக்கும்



படிப்பகம்

www.padippakam.com



உனக்கும் உனது நண்பர்களுக்கும் நான் கூற விரும்புவது, உங்களின் அற்ப சந்தோசத்திற்காக அந்நியனுக்கு ஆலவட்டம் பிடித்து மக்களைக் குழப்பி, தேசத்தை விற்காதீர்கள். மக்களுக்காகப் போராட வேண்டுமெனில், பதவிக்காகவும் பகட்டிற்காகவும் அரைகுறை ஆட்சிக்கு ஆமாம் போட்டு நாட்டின் இறைமையை விற்றுவிட்ட கும்பலிலிருந்து, வெளியே வாருங்கள். இரவற் படையின் பாதுகாப்பில் இருந்தபடி படாடோப வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கும்பல், நாளைய உங்களின் எதிர்காலத்திற்கு என்ன உத்தரவாதம் அளித்துள்ளது? மக்களைக்கூடத்தான் எப்படிக் காப்பாற்றப் போகின்றது? திசைமாறிப் போய்விட்ட இத் தேசவிரோதக் கும்பல்களை நம்பி உங்கள் கொள்கைகளைச் சாகடிக்காது, வெளியே வந்து மக்களுக்காக, மனிதாபிமானத்தோடு கௌரவமாகப் போராடுங்கள்; நிச்சயம் தமிழீழம் உங்களை வரவேற்கும்.

இப்படிக்கு,
உன் அக்கா கலைமதி

*'சுதந்திரப் பறவைகள்'*
*பறவை - 11.*
*15-09-1989*



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

கால நகர்வில் பல கவிஞர்கள்
வருவார்கள்- பல கவிதைகள்
பிறப்பெடுக்கும் ஆனால் சில
கவிதைகளும் சில கவிஞர்களும்
மட்டுமே பல யுகங்களிற்கு
வாழ்வதுண்டு.

கவிதைகளைத் தவிர
சிறுகதைகள், நாடகங்கள் போன்ற
படைப்பாக்கங்களும் இவ்வாறுதான்.

இது அவர்களின் எழுத்துக்கள்
பிரதிபலித்த காலத்தையும்
கருத்தையும் பொறுத்தது.

இந்த வகையில் கஸ்தூரியின்
எழுத்துக்கள் யுகம்யுகமாக
வாழப்போகின்றன.

தனது எழுத்துக்களில் தனிமனித
உணர்வுகளை மட்டும் மையாக
ஊற்றாது முழு உலகிற்குமான
மானுட வாழ்வின் அவலங்களை,
தேவைகளை, மறுக்கப்பட்ட
உரிமைகளை, நீதிகளை,
ஆவேசமாக எதிர்க்கும்
தன்மைகளை இவள் மையாக
ஊற்றி இருக்கின்றாள்.

வெளியீட்டுப்பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

படிப்பகம்